Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



தெளிவான வானிலை சிறு மழைக்கான சாத்தியம் உண்டு

30°C 28°



**இந்தியன்**



பக். 06

இலங்கையில் தஞ்சமடையும் போராட்டம்

**உலகம்**



பக். 07

இந்தியாவுடனான உறவுகளை மேம்படுத்தவே முன்னுரிமை

**விளையாட்டு**



பக். 23

'சூதாட்டத்தில் ஈடுபடவில்லை' வின்டுதராசிங் கூறுகின்றார்

# திருத்தம் '13' குறித்து இலங்கையுடன் பேச்சு

## தொண்டாவிடம் தெரிவித்தார் சோனியாகாந்தி

கொழும்பு, ஜூன் 8

13ஆவது அரசமைப்புத் திருத்தம்தொடர்பில்இலங்கை அரசுடன் இந்தியா முக்கிய பேச்சுகளை நடத்துமென இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி தெரிவித்திருக்கிறார். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான குழு நேற்றுக் காலை புதுடில்லியிலுள்ள 'ஜன்பத்' இல்லத்தில் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியைச் சந்தித்தது. அமைச்சர் ஆறுமுகனுடன் பிரதியமைச்சர் முத்து சிவலிங்கம், நாடாளுமன்ற





உறுப்பினர் இராஜதுரை, முன்னாள் மாகாணசபை உறுப்பினர் மதியுகராஜா, அனுஷியா சிவராஜா ஆகியோரும், காங்கிரஸ் தரப்பில் மத்திய இணையமைச்சர் நாராயணசாமியும் இந்தச் சந்திப்பில்கலந்துகொண்டனர்.

இலங்கை அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் குறித்து இங்கு விரிவாகப் பேசப்பட்டதுடன் தமிழ் மக்களின் முக்கியமான பிரச்சினைகள் அதன் அடிப்படையில் தீர்க்கப்படவேண்டுமென்பதே இந்தியாவின் விருப்பமென்ற சாரப்பட சோனியா காந்தி இந்தச் சந்திப்பில் கருத்து வெளியிட்டார் என உயர்மட்ட இந்திய இராஜதந்திர வட்டாரங்கள் நேற்றிரவு 'உதயனிடம் தெரிவித்தன.

இலங்கையிலுள்ள 13 ஆம் அரசமைப்பு, மலையக இந்திய வம்சாவளி மக்களுக்கான தனித்தன்மை, அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு இந்திய அரசால் மலையக மக்களுக்கு உதவிகள் கிடைக்க வேண்டும் என இச் சந்திப்பின்போது சோனியாவிடம் இ.தொ.கா. கோரிக்கை விடுத்ததாவும் தெரிவிக்கப்பட்டது. (த-சி)

## சிப்பாயை அடையாளம் காட்டினார் சிறுமி

வவுனியா,ஜூன் 08

வவுனியா நெடுங்கேணியில் 7 வயதுச் சிறுமி பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தில் தொடர்புடைய சந்தேகநபரை, பாதிக்கப்பட்ட சிறுமி நேற்று வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் அடையாளம் காட்டியுள்ளார் எனப் பொலிசார் தெரிவித்தனர்.

கடந்த மாதம் 14 ஆம் திகதி நெடுங்கேணி சேனைப்பிலவில் பாடசாலைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த இந்தச் சிறுமி அடையாளம் தெரியாத ஒருவரால் கடத்திச் செல்லப்பட்டுப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின்பேரில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

பாதிக்கப்பட்ட சிறுமி தன்னைத் துஷ்பிரயோகம் செய்த சந்தேகநபரை நேற்று வெள்ளிக்கிழமை வவுனியா நீதிமன்றத்தில் நீதிவான் முன்னிலையில் அடையாளம் காட்டியுள்ளார். (த)

## '13' ஐ ஒழிக்க விட்டுக்கொடோம்

கொழும்பு, ஜூன் 8

''மாகாண சபைகளின் அதிகாரங்களை ஒழிக்கும் வகையில் 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் மாற்றங்களைச் செய்ய அரசு எடுக்கும் எந்தவொரு நடவடிக்கைக்கும் எமது கட்சி ஆதரவு வழங்கி சிறுபான்மை மக்களுக்குத் துரோகமிழைக்காது.''

– இவ்வாறு நேற்று 'உதயனி'டம் தெரிவித்தார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ரி.ஹசனலி.

''அதிகாரப்பகிர்வு ஊடாகவே சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும். எனவே, மாகாணசபைகளின் அதிகாரங்களை ஒழிக்க அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நாம் கடும் எதிர்ப்பைத் தெரிவிப்போம்.

எமது கட்சி அரசின் பங்காளிக் கட்சியாக இருக்கின்றது. ஆனால், அரசின் சுயநலத்திற்காக எமது கட்சியின் கொள்கைகளை – சிறுபான்மை மக்களின் எதிர்பார்ப்புகளை விட்டுக் கொடுக்க முடியாது. இதில் மாற்றம் எதுவுமில்லை'' என்றும் அவர் கூறினார். (த-சி)

## கடலில் விழுந்த சிப்பாய் மாயம்

யாழ்ப்பாணம்,ஜூன் 08

நெடுந்தீவுக் கடற்பரப்பில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் படகில் இருந்து தவறி வீழ்ந்து விட்டார். கிழக்கு குடாப் பகுதிக்கும் துறைமுக வாயிலுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் இச் சம்பவம் நிகழ்ந்துள்ளதாகக் கூறப்பட்டது.

காணாமற்போன கடற்படைச் சிப்பாயை தேடும் முயற்சியில் கடற்படையின் ஈடுபட்டுள்ளனர். (ஒ-7)





*தமிழ்நாட்டில் இப்போது வெயில் காலம் என்பதால் வெப்பம் அதிகம். சென்னையில் அங்கங்கே பழச்சாறுக் கடைகள் போடப்பட்டு குளிர்பானங்கள் விற்கப்படுகின்றன. தமிழ் உணர்வாளர் ஒருவர் தனது பழச்சாறுக் கடைக்குத் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் பழச்சாற்றுக் கடை எனப் பெயர் பொறித்துள்ளார். அந்தக் கடையில் பழச்சாறு வாங்க கூட்டம் அலை மோதுகிறது. (த)*

## கோத்தா படையணியே உதயனைத் தாக்கியது

### மங்கள சமரவீர கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 8

''பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் கீழ் இயங்கும் உத்தியோகபூர்வமற்ற ஆயுதக்குழுவினரே 'உதயன்' பத்திரிகை மீது தாக்குதல் நடத்தியதுடன், குடாநாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் பங்குபற்றிய உண்ணாவிரதப் போரட்த்திலும்குழப்பம்விளைவித்தனர் என்பதை நான் பொறுப்புடன் கூறுவேன்''

– இவ்வாறு ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்களசமரவீர தெரிவித்தார்.

இந்த ஆயுதக் குழுவில் யாழ். கட்டளைத் தளபதி மஹிந்த ஹத்துருசிங்க உள்ளிட்டவர்களும் பொலிஸாருடன் மேலும் பலரும் இருக்கின்றனர். அவர்களின் பெயர்ப் பட்டியலை என்னால் தரமுடியும். இருப்பினும், அவற்றை வெளியிட முடியாத நிலையில் ஊடகங்கள் இருக்கின்றன. அதனால் ஊடகங்களின் மீது நாம் குற்றங்கூற முடியாது'' என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார். (த-சி)

## தீர்வுக்கான 'மந்திரக்கோல்' இந்திய அரசிடம் இல்லை

### பா.ஜ.க. குழுவினர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 8

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்துதர முடியுமே தவிர, அரசியல் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க முடியாது. அரசியல் தீர்வுக்கான 'மந்திரக்கோல்' இந்தியாவிடம் இல்லை – என்று இந்திய எதிர்க்கட்சியின் நாடாளு [illegible] களுக்குத் தெரிவித்துள்ளது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. வடக்கில் சமூகப் பிரதிநிதி

தொடர்ச்சி: பக்கம் 21

## ராஜபக்ஷ - சம்பந்தன் ஒப்பந்தம் அல்ல தீர்வு

### இந்திய எம்.பிக்களிடம் ஜனாதிபதி

கொழும்பு,ஜூன் 08

எல்லோரையும் உள்ளடக்கிய ஓர் அரசியல் தீர்வுக்கு எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டியது அவசியம் என வலியுறுத்தியுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நாம் ஒரு தீர்வை இறக்குமதி செய்ய முடியாது என்றும் அது ஒரு ராஜபக்ஷ – சம்பந்தன் உடன்படிக்கையாக இருக்க முடியாது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கான உத்தியோகபூர்வப் பயணத்தை மேற்கொண்டுள்ள இந்திய நாடாளுமன்றக் கீழவையின் எதிர்க்கட்சிப் பிரதித் தலைவர் ரவிசங்கர் பிரசாத் தலைமையிலான இந்தியத் தூதுக் குழுவினர், நேற்றுப் பிற்பகல் அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பின்போது இலங்கையின் ஐக்கியத்

தொடர்ச்சி: பக்கம் 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எக்னெலிகொட பிரான்ஸில் வசிப்பது உண்மை

கொழும்பு,ஜூன் 08
சிரேஷ்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட பிரான்ஸில் வாழ்ந்து வருகிறார் எனத் தான் வெளியிட்ட கருத்து உண்மை என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக்க பெர்னாண்டோ மீண்டும் தெரிவித்துள்ளார்.
தான் பிரான்ஸ் சென்றிருந்த போது இலங்கையின் ஊடகவியலாளர் ஒருவரே எக்னெலிகொடவைத் தனக்கு அறிமுகம் செய்து வைத்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.
தனது கருத்து குறித்து சந்தியா எக்னெலிகொட தெரிவித்துள்ள கருத்து அடிப்படை அற்றது என அருந்திக்க பெர்னாண்டோ கூறியுள்ளார். (த)

## வடப்குதித் தமிழரின் வாக்குரிமையை பறிப்பதற்கே வாக்காளர் பதிவு திருத்தம்

### சுவாமிநாதன் எம்.பி. கண்டனம்

கொழும்பு, ஜூன் 8
வடபகுதித் தமிழர்களின் வாக்குரிமையை பறிப்பதற்கே வாக்காளர் பதிவுச் சட்டத்தை அரசு அவசரமாக கொண்டுவருகின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற வாக்காளர் பதிவுத் திருத்தச் சட்ட வரைபு தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் சபையில் மேலும் தெரிவித்ததாவது:-
வடக்கில் தமிழர்களின் காணிகள் கட்டாயத்தின் பெயரில் பறிக்கப்படுகின்றன. இந்த நிலையிலேயே அரசு புதிய தேர்தல் முறைமையை அறிமுகப்படுத்தவுள்ளதோடு வாக்காளர் பதிவுத் திருத்தத்தினையும் கொண்டு வந்துள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் வடக்கில் மட்டுமே இடம்பெறுகின்றன.
இது அவர்களின் வாக்குரிமையை பறிக்கவே முன்னெடுக்கப்படுகின்றன. எந்த இன மக்களாக இருந்தாலும் அவர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட வேண்டும்.
ஆனால், அவ்வாறான திருத்தமொன்றை 2 மாதங்களாவது



பேச்சு நடத்தி ஆராய்ந்து கொண்டு வரவேண்டும்.
இப்படியாக அவசரமாக கொண்டு வருவதைத்தான் நாம் எதிர்க்கிறோம். இந்த விடயத்தை சர்வதேச சமூகம் உன்னிப்பாக கவனித்துக் கொண்டுள்ளது என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டும்-என்றார். (த-ரி)


## நயினை உற்சவ ஏற்பாடு பூர்த்தி காலை 6 மணியிலிருந்து பஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 8
நயினை நாகபூசணி அம்மன் வருடாந்த திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 24 ஆம் திகதி நிறைவுபெறுகின்றது.
இந்த விழாவுக்கான ஏற்பாடுகளை நயினை நாகபூசணி அம்மன் ஆலய நிர்வாகம் மற்றும் இலங்கை கடற்படை, வேலணை பிரதேச செயலகம், வேலணை பிரதேச சபை ஆகியன மேற்கொண்டு வருகின்றன என்று யாழ். செயலகத்தால் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அந்தச் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-
யாத்திரிகர்களுக்கு யாழ்நகரில் இருந்து குறிகாட்டுவானுக்கான பஸ் சேவை திருவிழா நாள்கள் அனைத்திலும் காலை 6 மணியிலிருந்து நடைபெறும்.
குறிகாட்டுவானில் இருந்து யாழ்நகருக்கான இரவு பஸ் சேவை கொடியேற்றத்தன்று இரவு 7 மணி வரைக்கும் 10 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை மாலை 6 மணி வரைக்கும் 18 ஆம் திகதி தொடக்கம் இறுதி நாள்வரை இரவு 8 மணி வரைக்கும் உறுதியான பஸ் சேவை நீடிக்கப்படும். யாத்திரிகர்களின் வசதி கருதி நயினாதீவு மற்றும் குறிகாட்டுவான் இறங்குதுறைகளில் படகுச் சேவை மற்றும் குடிதண்ணீர் மின்னொளி வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.
அவசரத் தேவைக்கு பயன்படுத்தவென நயினாதீவு இறங்குதுறையில் அன்புலன்ஸ் படகு ஒன்றும் குறிகாட்டுவானில் அன்புலன்ஸ் வாகனமும் தரித்து நிற்கும். பொலிஸாரின் பாதுகாப்புச் சேவை பெறப்பட்டுள்ளது.
யாத்திரிகர்கள் உணவு மற்றும் குடிதண்ணீர் பெற்றுக்கொள்வதற்காக ப.நோ.கூ. சங்க கிளை மற்றும் தற்காலிக கடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
திருவிழா நாள்களில் ஆலய சூழலில் மதுபாவனை, புலால் உணவு தடை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் யாத்திரிகர்கள் 'பிளாஸ்ரிக்' மற்றும் பொலித்தீன் பொருள்களை கொண்டு வருதலை குறைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர் - என்றுள்ளது. (ஒ)

# மீனவர்கள் பிரச்சினை தீராவிட்டால் வெள்ளை கொடியுடன் இலங்கைக்கு

### தமிழக மீனவர் மத்திய அரசுக்கு எச்சரிக்கை

சென்னை, ஜூன் 8
இருநாட்டு மீனவர்களின் பிரச்சினைகளை சுமுகமான முறையில் தீர்ப்பதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் விசைப்படகுகளில் வெள்ளைக்கொடி ஏந்தி இலங்கையிடம் தஞ்சமடைய மீனவர் சங்கங்கள் தீர்மானித்துள்ளன.
இராமேஸ்வரத்தைச் சேர்ந்த தமிழக மீனவர்கள் 49 பேர் ஒரே நாளில் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இராமேஸ்வரத்தில் மீனவர் சங்கப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
இந்தக் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி, கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுதலை செய்வதற்கு மத்திய அரசு எதிர்வரும் 20 ஆம் திகதிக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
அத்துடன் இருநாட்டு மீனவர்களின் பிரச்சினைகள் சுமுகமான முறையில் தீர்க்கப்பட வேண்டும். இல்லை என்றால் எதிர்வரும் 22 ஆம் திகதி விசைப்படகுகளில் வெள்ளைக் கொடிகளை ஏந்தி இலங்கை அரசிடம் தஞ்சம் அடைவோம் என மீனவர் சங்கங்கள் எச்சரித்துள்ளன.



அத்துடன் இன்று சனிக்கிழமை தொடக்கம் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மீன்பிடி அனுமதி அட்டை பெற்று மீன்பிடிக்கச் செல்வது எனவும் அந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (த-14-7)

## காரைநகரில் இருந்து நயினைக்கு படகுச் சேவையை நடத்துங்கள்

### யாழ். அரச அதிபருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 8
நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் உற்சவத்தை முன்னிட்டு காரைநகர் இறங்குதுறையிலிருந்து விசேட போக்குவரத்துச் சேவையை (வள்ளம்) ஒழுங்கு செய்து தருமாறு வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி என். ஐங்கரன் யாழ். அரச அதிபரைக் கோரியுள்ளார்.
ஆலயத்துக்கான படகுச் சேவையை ஆரம்பிப்பது சம்பந்தமாக தவிசாளர் அரச அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது:-
பிரசித்திபெற்ற நயினை நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் இடம்பெறும் வருடாந்த உற்சவத்தின் போது காரைநகர், வலிகாமம் மேற்கு, வலி. தென்மேற்கு, வலி. வடக்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் கடந்த காலங்களில் காரைநகர் ஊர்காவற்றுறை இறங்குதுறையிலிருந்து படகுச் சேவைகள் மூலம் செல்வது வழக்கம்.
நாளடைவில் இச்சேவை நிறுத்தப்பட்டதால் இப்பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் கண்ணகை அம்மன், குறிகாட்டுவான் ஆகிய இறங்குதுறைகளுக்குச் சென்று, அங்கிருந்து படகுகள் மூலம் ஆலயத்துக்குச் சென்று வருகிறார்கள்.
நேரத்தையும் தூரத்தையும் சனநெருக்கடியையும் தவிர்க்கும் வகையில் கடந்த காலங்களில் இடம்பெற்றது போல் காரைநகர் இறங்குதுறையிலிருந்து ஆலயத்துக்குச் செல்வதற்காக விசேட படகுச் சேவையை ஒழுங்கு செய்து தருமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றுள்ளது. (ஒ-115)

## மத அடையாளங்கள் மீது விசமிகளின் அட்டகாசம்

### மணியந்தோட்டத்தில் சொரூபம் உடைப்பு



கொழும்புத்துறை, ஜூன் 8
யாழ்ப்பாணம் மணியந்தோட்டம் 5 ஆம் குறுக்குச் சந்தியில் அமைந்திருந்த திருஇருதய ஆண்டவர் திருச்சொரூபம் விசமிகளால் கடந்த புதன்கிழமை இரவு அடித்து உடைத்து நொறுக்கப்பட்டுள்ளது.
5 ஆம் குறுக்குச் சந்தியில் கர்த்தர் கோயில் வீதியில் அமைக்கப்பட்டிருந்த வரவேற்பு சொரூப வழிபாட்டிடத்தின் சொரூபக் கூட்டு கண்ணாடியை உடைத்த விசமிகள் சொரூபத்தை வெளியே எடுத்து சுக்கு நூறாக உடைத்து வீசியுள்ளனர்.
இந்த அடாவடித்தனமான செயல் குறித்த பகுதியில் நடந்த இரண்டாவது சொரூப உடைப்புச் சம்பவமாகும். கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் மணியந்தோட்டம் சந்தியில் உள்ள மாதா சொரூபமும் அதன் கூடும் இவ்வாறு உடைத்துச் சேதப்படுத்தப்பட்டிருந்தன.
இவ்வாறான காட்டு மிராண்டித்தனமான மத விரோதச் செயல்கள் இந்தப் பகுதியில் தொடர்ந்து இடம்பெறுவதால் அங்குள்ள கத்தோலிக்கர்கள் அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளனர். (ஒ-135)

# '13' க்கு அப்பால் செல்வதாக ஐ.நாவுக்கு கூறவில்லையா?

### விமலின் கூற்று உண்மைக்கு புறம்பானது என்கிறார் மனோ


கொழும்பு,ஜூன் 8
தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்கு 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்று தீர்வு காண்பதாக ஐ.நாவுக்கும் இந்தியாவுக்கும் அரசு எவ்வித உறுதிமொழியும் வழங்கவில்லை என அமைச்சர் விமல் வீரவன்ஸ கூறுவது உண்மைக்குப் புறம்பானது என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.
கண்டி பேராதனை பல்கலைக்கழக கலைப்பீட கலையரங்கில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வடமாகாண சபைத் தேர்தல் தொடர்பான கூட்டத்தில் கலந்து கொண்டு உரை



யாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
விமல் வீரவன்ஸ உண்மைக்கு புறம்பான செய்திகளை வெளியிடுவது ஆச்சரியமில்லை. இலங்கையின் தேசிய கீதம் தொடர்பில் சர்ச்சை ஏற்படும் போது தவறான தகவல்களை வெளியிட்டனர். நாம் அவரைத் திருத்தினோம். பொய் பேசி மக்களைத் தவறாக வழிநடத்தியதற்காக விமல் வீரவன்ஸ மக்களிடம் பொது மன்னிப்புக் கோர வேண்டும்.
விமல் வீரவன்ஸவின் உரைகளைத் தொடர்ச்சியாக வெளியிடும் ஊடகங்கள் அவரது மன்னிப்புக் கோரலையும் வெளியிட வேண்டும். பிரிக்கப்படாத இலங்கை நாட்டுக்குள் அதிகாரம் பிரிக்கப்பட வேண்டும் என்பது முடிந்த முடிவு. ஒன்றில் நாட்டைப் பிரிக்க வேண்டும். அல்லது அதிகாரத்தைப் பிரிக்க வேண்டும். இரண்டும் இல்லை எனில் தமிழர்கள் என்ன செய்ய முடியும்-என்றார். (த-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'டிப்பர்' வாகனங்களின் புழுதியால் அவலம்



நாவற்குழி, ஜூன் 8

மணல் ஏற்றிச் செல்லும் டிப்பர்களால் வீதிகளில் பயணிப்போர் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கேரதீவு-நாவற்குழி வீதியில் பயணிப்போர் இவ்வாறான சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

பூநகரிப் பகுதியிலிருந்து தினமும் 'டிப்பர்' வாகனங்களில் கட்டடப் பணிகளுக்காக மணல் ஏற்றப்படுகிறது. இவ்வாறு ஏற்றப்படும் மணலை வெளியே சிந்தாது மூடிக் கட்டாமல் எடுத்துச் செல்லும்போது காற்று மற்றும் வாகனத்தின் வேகம் காரணமாக வீதியில் பயணிப்போர் மீது பெருமளவான மண் அள்ளி வீசப்படுகிறது. இதனால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இந்த வீதியால் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவருக்கு கண்ணுக்குள் மண் புகுந்ததால் மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வயலுக்குள் பாய்ந்தது. எனினும் செலுத்தியவர் நிதானித்ததால் விபத்து தவிர்க்கப்பட்டது. (ஐ-9)

# தேசிய இளைஞர் தின நிகழ்வு இம்முறை சாவகச்சேரியில்

சாவகச்சேரி, ஜூன் 8

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், வருடாந்தம் நடத்தும் தேசிய இளைஞர் தினம் யாழ். மாவட்டத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் பிரதம விருந்தினராகவும், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கௌரவ விருந்தினராகவும், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வடமாகாணப் பணிப்பாளர் சரத் சந்திரபால , முன்னாள் மாகாணப் பணிப்பாளர் விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்கள்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்டத்தில் 2012 ஆம் ஆண்டில் மிகச் சிறந்த முறையில் செயற்பட்ட இளைஞர் கழகம் , பிரதேச சம்மேளனம், சிறந்த நாடாளுமன்ற உறுப்பினர் , சிறந்த இளைஞர், இளைஞர் சேவை அதிகாரி, சிறந்த தொண்டர் இளைஞர் சேவை அதிகாரி என்ற அடிப்படையில் விருதுகள் வழங்கி இளைஞர்கள் கௌரவிக்கப் படவுள்ளனர். இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா யுத். யாழ். மாவட்ட இசை, நடனக் கல்லூரி மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (ஒ)

# யாழ். போதனா வைத்தியசாலை
# குழந்தை சிகிச்சைப் பிரிவுக்கு உபகரணங்கள் கையளிப்பு




யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ்.போதனா வைத்தியசாலையின் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவுக்கு 12 மில்லியன் ரூபா பெறுமதியான உபகரணங்கள் நேற்று கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் யாழ்.போதனா வைத்திய சாலையில் புற்றுநோய் சிகிச் சைப் பிரிவிலுள்ள மண்டபத் தில் நடைபெற்றது.

கொழும்பு கிழக்கு, மாவட்டம் 3220றோட்டரிக் கழகத்தினால் இந்த உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. றோட்டறிமன்றம், அமெரிக்காவின் ஜோர்ஜியா பிராந்தியத்தைச் சேர்ந்த றோட்டறி மாவட்டம் 6960 இன் சர்வதேச றோட்டரி பங்காளர்கள், சென்னை றோட்டரி மாவட்டம் 3230 இன் அங்கத்தவர்கள், வெள்ளவத்தை நித்திய கல்யாணி ஜூவெல்லர்ஸ் மற்றும் ஏனைய பங்காளர்களும் வழங்கிய நிதியிலிருந்து குறித்த உபகரணங்கள் பெறப்பட்டன.

இந்த நிகழ்வில் றோட்டறிக் கழக அதிகாரிகள், அங்கத்தவர்கள், கலேர்ஸ் ஒவ் கயேஜ் நிதிய அதிகாரிகள், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர்கள், மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

கட்டில்கள், இலத்திரனியல் உபகரணங்கள், ஈ.சி.ஜி இயந்திரங்கள், 'எக்ஸ்றே' இலுமினேற்றர் உட்பட உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (வ-4)

# ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் ஒழுங்கற்ற நிலையில்

கடந்த மூன்று ஆண்டுகளில் இரண்டு தடவைகள் மட்டுமே பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் வலி.வடக்குப் பிரதேசத்தில் இடம்பெற்றமையால் பல செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக வலி. வடக்கு பிரதேச சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்களால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மீளக்குடியேற அனுமதிக்கப்பட்ட வலி.வடக்குப் பகுதியில் மீளக்குடியேறும் மக்களுடைய தேவைகள் உட்படப் பல்வேறு செயற்றிட்டங்கள் சம்பந்தமாகவும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட வேண்டிய தேவையும் அவசியமும் காணப்படுகின்றது.

வலி.வடக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் 2011 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்திலும் 2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்திலும் மட்டுமே இதுவரை கூடியுள்ளது.

இதனால் மீளக்குடியேறிய மக்களின் பல விடயங்கள் சம்பந்தமாக கலந்துரையாட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இத்தகைய நிலைமையை அரச அதிகாரிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதாகவும் குற்றச் சாட்டுகளும் எழுந்துள்ளன. (வ-86)

# திருட்டு முயற்சி முறியடிப்பு மறவன்புலோ கடையில்

தென்மராட்சி, ஜூன் 8

தென்மராட்சி மறவன்புலோப் பகுதி வர்த்தக நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட திருட்டு முயற்சி அருகில் உள்ள ஆலயத்தில் நின்றவர்களால் முறியடிக்கப்பட்ட போதிலும் ஆலயத்தினுள் வைக்கப்பட்டிருந்த கணினியுடன் திருடர்கள் ஓடித் தப்பியுள்ளனர்.

இந்தச் சம்பவம் மறவன்புலோ வள்ளங்குளம் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் இடம்பெற்றது. திருட்டுச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ-9)

# இந்தியன் திட்ட வீடுகள் பயனாளிகளிடம் கையளிப்பு





தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாவிட்டபுரம் நகுலேஸ்வரம் கிராம அலுவலர் பிரிவுகளில் இந்திய வீட்டுத் திட்டத்தில் கட்டி முடிக்கப்பட்ட இரண்டு வீடுகள் வியாழக்கிழமை பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

செஞ்சிலுவைச் சங்கத்தால் கட்டிக் கையளிக்கப்பட்ட இந்த நிகழ்வில் கலந்து கொண்ட இந்தியத் துணைத் தூதர் எஸ்.சிறிகாந்த், இந்திய வீட்டுத் திட்டப் பணிப்பாளர் நிமால் சில்வா, முகேஸ்சிவ், யாழ்.செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் கு.பாலகிருஷ்ணன், செயலாளர் மாகலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-7)

# வீடமைப்பு அதிகார சபை கடன் வழங்காததால் நிறைவடையாத நிலையில் வீட்டுத் திட்டப் பணி

யாழ்.மாவட்டத்தில் வீட்டுக் கடனுக்காக வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடம் விண்ணப்பித்துள்ள நூற்றுக் கணக்கான மக்கள் பல மாதங்களாகியும் நிதி கிடைக்காமல் ஏமாற்றத்துக்குள்ளானார்கள். இதேவேளை நிதி விரைவாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் வீட்டு வேலைகளை ஆரம்பித்துள்ள சிலர் நிறைவடையாத நிலையில் இருக்கும் வீடுகளைப் பூர்த்திசெய்ய முடியாமல் திண்டாடுகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன் கருதி வீடு கட்டுவதற்கு வீட்டைத் திருத்துவதற்கு வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் கடனாக நிதி வழங்கப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடம் வீட்டுக் கடனுக்கு விண்ணப்பித்திருந்தனர். விண்ணப்பித்துப் பல மாதங்கள் கடந்த பின்பும் நிதி கிடைக்காமல் ஏமாற்றத்துக்குள்ளான மக்கள் இந்தத் திட்டத்தைக் கைவிடும் நிலையிலுள்ளனர்.

ஏற்கனவே திறைசேரியால் மேற்படி சபைக்கு வழங்கப்பட்ட 5 இலட்சம் ரூபா குறிப்பிட்ட ஒரு தொகை மக்களுக்கு மட்டும் பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளது. ஏனைய மக்களுக்கு வழங்குவதற்குப் பெருந்தொகையான நிதி தேவைப்படுவதால் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை திறைசேரியை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நிலை உள்ளது. (வ-115)

> “ இந்தத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான மக்கள் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடம் வீட்டுக் கடனுக்கு விண்ணப்பித்திருந்தனர்.


# வாரத்தில் ஒருநாள் அயன் மாத்திரை
# வழங்கும் செயற்றிட்டம் தெல்லிப்பழையில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

பாடசாலை மாணவர்களின் சக்தியை அதிகரிக்கும் வகையில் அயன் மாத்திரைகள் வாரத்தில் ஒருநாள் வழங்கும் செயற்றிட்டம் தெல்லிப்பழை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கடந்த புதன்கிழமை தொடக்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை பிரதேச பாடசாலைகளில் முதற்கட்டமாக 5 பாடசாலைகளில் மேற்படி செயற்றிட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்களின் சுகாதாரக் கழகங்களும், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் இணைந்து மாணவர்களுக்கு அயன் மாத்திரைகளை வழங்கினர்.

அதனைத்தொடர்ந்து அடுத்த வாரம் முதல் ஏனைய பாடசாலைகளில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (வ-14-86)



> “ 5 பாடசாலைகளில் மேற்படி செயற்றிட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் உணவு கையாளும் நிறுவன பணியாளருக்கு மருத்துவ சோதனை

### பேசாலையில் இன்று

மன்னார், ஜூன் 8

மன்னார் பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள உணவு பொருள்களை கையாளும் உணவகங்களில் பணிபுரிகின்றவர்களுக்கான மருத்துவ பரிசோதனையும், தகுதிச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இன்று சனிக்கிழமை காலை பேசாலை பிரதேச சபையில் நடைபெறவுள்ளதாக மன்னார் மாவட்ட பொது சுகாதார வைத்திய அதிகாரி ஞா. குணசீலன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மன்னார் பிரதேச சபையும்,மன்னார் மாவட்ட பொது சுகாதார சேவைகள் பணிமனையும் இணைந்து குறித்த வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளன.

முதற்கட்டமாக மன்னார் பிரதேச சபை பிரிவில் உள்ள சகல விதமான உணவுப் பொருள்களையும் கையாளுகின்ற உணவகங்களின் உரிமையாளர்கள்,பணியாளர்கள் அனைவருக்கும் மருத்துவ பரிசோதனையையும், அதற்கான தகுதிச் சான்றிதழ்களையும் வழங்கவுள்ளோம்.

இன்றும் நாளையும் காலை 9.30 மணிமுதல் பேசாலை பிரதேச சபை கட்டடத்தில் நிகழ்வு இடம்பெறும்.

குறித்த மருத்துவப் பரிசோதனைக்கு சகல உணவு கையாளும் நிலையங்களின் பணியாளர்களும்,உரிமையாளர்களும் கலந்து கொண்டு மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டு தகுதி சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

“ குறித்த மருத்துவப்பரி சோதனையில் கலந்து கொண்டு தகுதிச் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளாதோர் மீது நடவடிக்கை

மன்னார் நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள உணவு கையாளும் நிலையங்களின் பணியாளர்கள், உரிமையாளர்களுக்கு எதிர்வரும் வாரம் மருத்துவப்பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

குறித்த மருத்துவப்பரிசோதனையில் கலந்து கொண்டு தகுதிச்சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளாத உணவு கையாளும் நிலையங்களின் பணியாளர்கள்,உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்- என்றார். (வ-12)

# பாடசாலை மைதானத்தில் தேவாலயம் அமைக்க எதிர்ப்பு

## மன்னார் பறப்பாங்கண்டல் றோ.க. மாணவர், பெற்றோர் பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 8

மன்னார் பறப்பாங்கண்டல் றோ.க.த.க.பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் தற்போது தேவாலயம் ஒன்று கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்,உடனடியாக குறித்த வேலைத்திட்டத்தை தடுத்து நிறுத்துமாறும் கோரி பறப்பாங்கண்டல் றோ.க.த.க. பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர் மற்றும் பாடசாலை வளர்ச்சி சமூகமும் இணைந்து நேற்று வெள்ளிக்கிழமை காலை மன்னார் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறைப்பாடு செய்துள்ளனர்.



நூற்றுக்கணக்கானவர்கள் ஒன்றிணைந்து மன்னார் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துஸார தலுவத்தவைச் சந்தித்து முறைப்பாட்டை முன்வைத்தனர்.

இது தொடர்பாக குறித்த கிராம மக்கள் மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு அளித்த முறைப்பாட்டில் மேலும் தெரிவித்ததாவது:-

பறப்பாங்கண்டல் கிராமத்தில் 260 குடும்பங்கள் தற்போது வசித்து வருகின்றனர். இதில் 200 குடும்பங்களின் கருத்துகளுக்கு மாறான வகையில் தற்போதைய விளையாட்டு மைதானத்தில் கத்தோலிக்க தேவாலயம் ஒன்று கட்டுவதற்கான நடவடிக்கைகள் தீவிரமடைந்து வருகின்றன.

இது எங்களுக்கு பேரதிர்ச்சியையும்,மாணவர்களின் கல்வியில் வீழ்ச்சியையும் ஏற்படுத்தி உள்ளது. இது புனித கார் மேல் மாதா ஆலய சபையின் தன்னிச்சையான முடிவேயாகும். இந்தக் காணியில் ஆலயம் அமைக்க வேண்டும் என்ற தீர்மானம் எந்த பொதுக்கூட்டத்திலும் எடுக்கப்படவில்லை.

இந்த ஆலயம் கடந்த கால போர்ச்சூழலால் சேதமாக்கப்பட்டது. 2012 ஆம் ஆண்டு 6 ஆம் மாதம் நடைபெற்ற ஆலய சபை பொதுக்கூட்டத்தில் இருந்த இடத்திலேயே இவ் ஆலயம் கட்டுவதெனவும், குடும்பத்துக்கு 2 ஆயிரம் ரூபா வழங்குவதெனவும் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எனவே குறித்த ஆலயம் ஏற்கனவே அமைந்துள்ள இடத்தில் கட்டப்பட வேண்டும் எனவும்,பாடசாலை மைதானத்தில் கட்டுவதை உடனடியாகத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பாக பாடசாலை வளர்ச்சி சமூகம் என்ற பெரில் மனு ஒன்றும் மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் கையளிக்கப்பட்டது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி:-

மன்னார் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முறைப்பாடு சார்பாக மன்னார் பொலிஸார் குறித்த பாடசாலையின் விளையாட்டு மைதானத்துக்கு வந்து பார்வையிட்டு உடனடியாக சட்ட நடவடிக்கையை மேற்கொள்வோம். பொது மக்கள் எவரும் இச் சம்பவம் தொடர்பில் வன்முறையில் ஈடுபட வேண்டாம் என தெரிவித்தார். (வ-12)

# தமிழக மீனவர் கைது; விரட்டியடிப்பு மத்திய அரசோ தொடர்ந்து மௌனம்

## இலங்கை கடற்படையின் அத்துமீறல் குறித்து 'ஜெ' சீற்றம்

சென்னை, ஜூன் 8

மத்திய அரசின் அக்கறையின்மையே தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்தும் தாக்குதலுக்கு உள்ளாகிறார்கள். எனவே இது குறித்து மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

தமிழக மீனவர்களது கைது தொடர்பில் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இராமேஸ்வரம் மீனவர்கள் 49 பேர் இலங்கைக் கடற்படையால் கைதுசெய்யப்பட்டு சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைக் கடற்படை யினரின் தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஏற்கனவே கடிதங்கள் ஊடாக தெளிவுபடுத்தியுள்ள நிலையில் மத்திய அரசின் அக்கறையின்மை, செயலற்ற தன்மை காரணமாக இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்தும் அத்துமீறிய செயல்களில் ஈடுபடுகின்றனர்.

இதனால் தமிழக மீனவர்கள் தமது பாரம்பரியமிக்க பகுதிகளில் மீன்பிடிக்கமுடியாத நிலை ஏற்பட்டுளளது. இதனால் மீனவ சமுதாய மக்கள் ஒரு கொந்தளிப்பான சூழலை எதிர்கொள்கின்றனர்.

இந்தத் தாக்குதல் மற்றும் அடிக்கடி தொடரும் கைதுகள் போன்றவற்றுக்கு நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கு மத்திய அரசு நெருக்கடியான அழுத்தத்தைக் கொடுக்கவில்லை.

எனவே இது தொடர்பான அழுத்தத்தைக் கொடுப்பதற்கு டில்லியில் உள்ள இலங்கைத் தூதுவரை அழைத்து கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டும். அத்துடன் கைது செய்யப்பட்டுள்ள 49 மீனவர்களும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (ஒ-14)



## தமிழக மீனவர்களே எல்லையை மீறிச் செல்லாதீர்

### கோடிக்கரை முகாம் அதிகாரி அறிவுறுத்து

சென்னை, ஜூன் 8

இலங்கைக் கடற்பரப்பில் கடற்படையினரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளதால் தமிழக மீனவர் கள் இந்தியக் கடல் எல்லையைத் தாண்டி மீன்பிடியில் ஈடுபட வேண்டாம் என்று இந்தியக் கடற்படை யினரின் கோடிக் கரை முகாம் அதிகாரி பி. எஸ்.கிஜாப்ரே வலியுறுத்தியுள்ளார்.

“ தமிழக மீனவர்களை கடல் எல்லை தாண்டி மீன்பிடிக்க வரக் கூடாது என அச்சுறுத் தும் வகையில் ரோந்துப் படகுகளையும் நிறுத்தி வைத்துள்ளனர்.

கச்சதீவு மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் இலங்கைக் கடற் படையினர் ரோந்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழக மீனவர்களை கடல் எல்லை தாண்டி மீன்பிடிக்க வரக்கூடாது என அச்சுறுத்தும் வகையில் ரோந்துப் படகுகளையும் நிறுத்தி வைத்துள்ளனர். எனவே சர்வதேச கடற்பரப்பில் தமிழக மீனவர்கள் மீன் பிடிப்பதைத் தவிர்க்க வேண்டும். சர்வதேச கடல் எல்லையைத் தாண்டி மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்து தடுக்க முடியாது உள்ளது. எனவே மீனவர்கள் மீன்பிடி நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார். (வ-14)

## தமிழகம் தவிர்ந்த மாநிலங்களில் இலங்கை இராணுவத்துக்கு பயிற்சி

# ஈழத் தமிழர் வாழ்வை பாதிக்காதா? கேள்வி எழுப்புகிறார் வீரமணி

சென்னை, ஜூன் 8

தமிழ் இன அழிப்புக்கு தமிழ்நாடு அல்லாத மாநிலங்களில் இலங்கை இராணுவத்துக்கு பயிற்சி வழங்குவது ஈழத்தமிழர்களின் வாழ்வுரிமைகளைப் பாதுகாக்குமா? என்று திராவிடர் கழக தலைவர் சி.வீரமணி தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்துக்கு தமிழ்நாடு அல்லாத மாநிலங்களில் பயிற்சி வழங்கப்படுவது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது :-

ராஜீவ்- ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தின்படி நிறைவேற்றப்பட வேண்டிய 13 ஆவது அரசமைப்புச் சட்டத்தை நிறைவேற்றாமல் அதனை சீர்குலைக்கும் வகையில் இலங்கை அரசு செயற்படுகிறது.

இலங்கையில் வாழும் ஈழத் தமிழர்கள் சிங்கள இராணுவத்தால் குண்டுவீச்சு மூலம் இனப்படுகொலை செய்யப்படுவதுடன் எஞ்சிய ஈழத்தமிழர்களையும் கடத்திச் சென்று காணாமல் போனவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இலங்கை அரசின் அதிகாரம் நாளுக்கு நாள் ஈழத் தமிழர்களின் வாழ்வுரிமையைப் பெற்றுக்கொடுப்பதற்கு பதிலாக அழிக்கும் செயற்பாடுகளாகவே உள்ளது.

இந்திய அரசு ஈழத்தமிழர்களைக் காப்பாற்றுவோம் என்று கொடுத்த வாக்குறுதிப்படி நடந்து கொள்ளவில்லையே. போர் முடிந்து 4 ஆண்டுகள் கடந்தும் ஈழத்தமிழர்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டுவரும் நிலை தான் தொடர்கிறது. ஆனால் இந்தியா அதனைத் தட்டிக் கேட்பதாக இல்லை. வாய்மூடி மௌனி யாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது.

இலங்கை அரசு ஏற்கனவே இந்திய அரசுக்கு கொடுத்த வாக்குறுதியை காற்றில் பறக்க விட்ட நிலையில் குறைந்த பட்ச அடிப்படை உரிமைகளையும் பறிக்கும் நோக்கில் 13 ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தில் ஒரு புதிய திருத்தத்தைத் கொண்டு வந்துள்ளனர்.

இந்த உரிமைப் பறிப்புகள் ஊடாக இலங்கை அரசு எஞ்சிய தமிழர்களை கொத்தடிமைகளாக நினைக்கிறது. கைதிகளைப் போலவே நடத்துகிறது.

குறைந்த பட்ச உரிமைகளைக் கூட தமிழர்களுக்கு பெற்றுக் கொடுக்க இலங்கை அரசு தயாராக இல்லாத நிலையில் தமிழ் நாட்டில் சிங்கள இராணுவத்துக்கு பயிற்சி அளிக்க மாட்டோம் என்று சாமர்த்தியமாக மத்திய அரசு தமிழர்களை ஏமாற்றலாமா? இந்தியாவின் இதர மாநிலங்களில் பயிற்சி வழங்கும் என சொல்லாமல் சொல்லுகிறது.

அரசியல் தீர்வு எதையும் செய்யாதது மட்டுமல்லாது 13 ஆவது திருத்தச் சட்டத்தை பறிக்கும் நிலையை இலங்கை அரசு கொண்டுள்ளது. தமிழினத்தை வாழ வைக்கலாமா இல்லை அழிக்கலாமா? இந்த இராணுவப்பயிற்சிக்கு என்று கேள்வி எழுப்பியுள்ளார். (வ-14)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறையில் 12 வீதிகள் புனரமைப்பு



வடமராட்சி, ஜூன் 8
பருத்தித்துறை நகரப் பகுதியில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் 12 வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 9 வீதிகள் காப்பெற் வீதியாகவும் 3 வீதிகள் கொங்கிறீட் வீதியாகவும் மாற்றி அமைத்துப் புனரமைக்கப்பட்டுள்ளன.

தும்பளை வீதி, முதலாம் குறுக்குத்தெரு, 2 ஆம் குறுக்குத் தெரு, நான்காம் குறுக்குத் தெரு, கல்லூரி வீதி, விநாயகர் முதலியார் வீதி, தம்பசிட்டி வீதி, கதிரைவேற்பிள்ளை வீதி, விடுதி (லேடிஸ்) வீதி, ஆகிய 9 வீதிகள் காப்பெற் வீதிகளாகவும் உடையார் ஒழுங்கை, யக்கோவளை ஒழுங்கை, மூர்க்கம் ஒழுங்கை ஆகிய 3 வீதிகளும் கொங்கிறீட் வீதிகளாகவும் புதிதாக அமைக்கப்பட்டு அவை மக்களின் போக்குவரத்துப் பயன்பாட்டுக்கு வந்துள்ளது. (வ-8)

ஊட்டப்பாடசாலைகள் அபிவிருத்தியின் கீழ் புனரமைக்கப்பட்ட

# நேற்று திறக்கப்பட்டன 19 பாடசாலைகளும்

தென்மராட்சி, ஜூன் 8
5 ஆயிரம் ஊட்டப் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தென்மராட்சி கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 19 பாடசாலைகளிலும் திருத்தத்தின் பின்னரான ஆரம்ப விழா நேற்று நடைபெற்றது.

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை, கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை, போக்கட்டி அ.த.க. பாடசாலை ஆகியவற்றில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வுகளில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின், வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார், பிரதேச செயலர் திருமதி சு.சாந்தசீலன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.


ஏனைய 16 பாடசாலைகளிலும் கல்வி வலய உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.



சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையில் புனரமைக்கப்பட்ட வகுப்பறைத் தொகுதிகளை நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆகியோர் நாடாவெட்டி திறந்து வைக்கின்றனர்.

ஒவ்வொரு பாடசாலைக்கும் வழங்கப்பட்ட 5 லட்சம் ரூபா நிதியில் பாடசாலைக் கட்டடங்கள் புனரமைப்பு, மதில், கிணறு அமைப்பு போன்ற அபிவிருத்திப் பணிகள் ஒரு மாத காலத்துள் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-9-22)

## நாகபூஷணி அம்மனுக்கு நாளை கொடியேற்றம்



எதிர்வரும் 22 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும்.

யாழ்ப்பாணம்,ஜூன் 8
நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து எதிர்வரும் 24 ஆம் திகதி வரை திருவிழா இடம் பெறும்.

எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை முத்துச்சப்பறத் திருவிழாவும், எதிர்வரும் 15 ஆம் திகதி இரவு கைலைக் காட்சியும் இடம்பெற்று எதிர்வரும் 17 ஆம் திகதி 1008 சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 22 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும்.

பக்தர்களின் நலன்கருதி வழமைபோல் இந்த முறையும் அமுதசுரபி அன்னதான சபையினர், தாகசாந்தி நிலையத்தினர், போக்குவரத்துச் சேவையாளர், மோட்டார் படகுச் சேவையினர், சுகாதார சேவைப் பகுதி தொண்டர் சபையினர், சாரணர்கள், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப் பிரிவினர், இலங்கை செஞ்சிலுவைச் சங்க அமைப்பினர், மக்கள் நலன் புரி சங்கத்தினர் அனைவரும் வேண்டிய ஒழுங்குகளை மேற்கொள்ளவுள்ளனர். (வ-7-8)

## மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு விரைவில் அம்புலன்ஸ்

நவாலி, ஜூன் 8
மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலைக்கு விரைவில் புதிய அம்புலன்ஸ் வண்டி யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் வழங்கப்படவுள்ளது.

இந்த வைத்தியசாலையில் வெளிநோயாளர் சிகிச்சைப்பிரிவு, குழந்தைப் பிள்ளை சிகிச்சைப் பிரிவு, மகப்பேற்று விடுதி என்பனவும் அமைந்துள்ளன.

இதனால் அம்புலன்ஸ் தேவை என நீண்ட காலமாக சம்பந்தப்பட்டவர்களிடம் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினரால் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது.

தற்போது வைத்தியசாலையின் புதிய நோயாளர் நலன் புரி சங்கத்தினர் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாருடன் தொடர்பு கொண்டதற்கிணங்க அவரது பணிப்பின் பேரில் யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளரால் புதிய அம்புலன்ஸ் வழங்கப் படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-100)

## செப்பனிடப்படாத நிலையில் குருநகர் புதிய கடற்கரை வீதி

குருநகர், ஜூன் 8
குருநகர் புதிய கடற்கரை வீதி செப்பனிடப்படாமல் மணல் வீதியாகவே உள்ளது. குருநகர் கடற்கரையில் அமைந்துள்ள மீன்சந்தையில் இருந்து அன்னை வேளாங்கண்ணி ஆலயம் அமைந்துள்ள பகுதி வரை கொங்கிறீற் கல்லால் இவ்வீதி செப்பனிடப்பட்டுள்ளது. எனினும் யாழ்.சென்ஜேம்ஸ் மகா வித்தியாலய வீதிக்கும் குருநகர் இறங்குதுறைக்கும் இடைப்பட்ட இவ்வீதியின் மிகுதிப் பகுதி மணல் நிறைந்த வீதியாகக் காணப்படுகிறது.

கடற்றொழிலாளர்களின் மிக முக்கிய வீதியான இவ்வீதி மேடு பள்ளம் கொண்ட நிலையில் காணப்படுவதால் கல், தார் பயன்படுத்தியோ அல்லது காப்பெற் வீதியாகவோ செப்பனிட சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-51)

## நீர்தாங்கியை சூழ்ந்த குப்பையால் சீர்கேடு



யாழ்ப்பாணம்,ஜூன் 8
யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள நீர் தாங்கியின் அருகில் பொதுமக்கள் தினமும் கழிவுப் பொருள்களை வீசி வருகின்றனர். கழிவுகள் போடுவதற்கென யாழ்.மாநகரசபை தொட்டி ஒன்றை அமைத்து அதற்குள் கழிவுகளை போடுமாறு ஏற்கனவே அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.

எனினும் பொதுமக்கள் அதனைக் கவனத்தில் கொள்ளாது வீதியோரமாக கழிவுகளை வீசுவதால் அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதார சீர்கேடுகளும் நிலவுகின்றது. (வ-7)

## நம்பிக்கையிழந்த வர்த்தகர்கள் சங்கம் அமைக்க ஆலோசனை

வலி.தென்மேற்கு,ஜூன் 8
வர்த்தக சங்கத்தின் தீர்மானத்துக்குக் கட்டுப்படாத வர்த்தகர்கள் மீது நடவடிக்கை எடுக்க முன்வராத வர்த்தகர் சங்கத்தில் நம்பிக்கை இழந்த வர்த்தகர்கள், ஒரு வர்த்தகர் சங்கத்தை ஆரம்பிப்பது குறித்து ஆலோசித்து வருகின்றனர்.

மானிப்பாய் கோயில் பற்றிலுள்ள வர்த்தகர்கள் மீதும் அங்கு கடமையாற்றும் ஊழியர்களின் நலன் கருதியும் யாழ். வணிகர் கழகத்தின் வேண்டுகோளுக்கிணங்கவும் ஞாயிற்றுக்கிழமைகளில் வர்த்தக நிலையங்களை மூடுவதென்று மானிப்பாய் கோயில்பற்று வர்த்தகர் சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்துக்கமைய பெரும்பாலான வர்த்தகர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் தமது வர்த்தக நிலையங்களை மூடிவரும் அதேநேரம் மானிப்பாய் பட்டினத்திலுள்ள ஒரு சில வர்த்தகர் மட்டும் சுயநல நோக்குடன் ஞாயிற்றுக் கிழமைகளில் வர்த்தக நிலையங்களைத் திறந்து வர்த்தகம் செய்வதில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்களின் செயற்பாடு குறித்து ஏனைய வர்த்தகர்கள், சங்கத்துக்கு முறைப்பாடு செய்திருந்த போதும் சங்கம் எதுவித மாற்று நடவடிக்கையும் எடுக்க முன்வரவில்லை.

இதனால் ஏனைய வர்த்தகர்களும் ஞாயிற்றுக்கிழமைகளில் வர்த்தக நிலையங்களைத் திறக்க முன்வந்துள்ளனர்.

இதேவேளை, மேற்படி சங்கத்தின் நடவடிக்கையில் நம்பிக்கை இழந்த ஏனைய வர்த்தகர்கள், சுதந்திரமாக இயங்கக்கூடிய பலமான ஒரு சங்கத்தை அமைப்பது குறித்து ஆலோசனை மேற்கொண்டு வருகின்றனர். (வ-115)

# நிதி ஒதுக்கப்பட்டும் இதுவரை நடைபெறவில்லை வீதிப் புனரமைப்பு

## வலி.தென்மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் விசனம்

ஆனைக்கோட்டை உயரப்புலம் அடைக்கலநாயகி வீதியைப் புனரமைப்பதற்கு இரு வரவு செலவுத் திட்டங்களில் நிதி ஒதுக்கப்பட்டிருந்தபோதிலும் இதுவரை மேற்படி வீதியைப் புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்று சுட்டிக்காட்டிய பிரதேச சபை உறுப்பினர் ஆ.ச.கணேசவேல், மாதாந்தக் கூட்டங்கள் ஒழுங்காக இடம்பெறாதமையே இந்த நிலைக்குக் காரணமென்று கவலை தெரிவித்துள்ளார்.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் சேதமடைந்த நிலையிலுள்ள ஆனைக்கோட்டை உயரப்புலம் அடைக்கலநாயகி வீதியைப் புனரமைக்குமாறு அந்தப் பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதேச சபை உறுப்பினர் பிரதேச சபையிடம் கோரியிருந்தார். அவரின் கோரிக்கையையடுத்து மேற்படி வீதியைப் புனரமைப்பதற்காக இரு வரவு செலவுத் திட்டங்களில் நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால் வரவு-செலவுத் திட்டம் சபையால் அங்கீகரிக்கப் படாமையால் தோல்வியடைந்தது. இந்த நிலையில் நிதி ஒதுக்கப்பட்டுப் பல மாதங்களுக்கு மேலாகியும் மேற்படி வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்காமை குறித்து விசனம் தெரிவித்துள்ள உறுப்பினர் அந்தப் பகுதி மக்களின் நலன் கருதி மேற்படி வீதியை விரைவாக புனரமைப்பதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு தவிசாளரைக் கோரியுள்ளார். (வ-115)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## '2ஜி' தொடர்பான மனு நீதிமன்றால் தள்ளுபடி

புதுடில்லி, ஜூன் 8
2ஜி வழக்கில் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் தயாநிதி மாறனின் பெயர்களைச் சேர்க்கக் கோரிய மனு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது.
2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு செய்ததில் நடந்த முறைகேடுகள் குறித்த வழக்கில், பிரதமர் மன்மோகன் சிங் மற்றும், அப்போதைய தொலைத் தொடர்பு அமைச்சராக இருந்த தயாநிதி மாறனின் பெயர்களையும் சேர்த்து விசாரிக்குமாறு கோரி டில்லி நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.
இந்த மனுவை நேற்று விசாரித்த நீதிமன்றம், மனுவைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. (ற)



பீகார் மாநிலத்துக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை, நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவரும், பாரதீய ஜனதாவின் மூத்த தலைவருமான சுஷ்மா சுவராஜ் போபால் ராஜா போஜ் விமான நிலையத்தில் வரவேற்றார்.

## போர் விமானம் பயிற்சியில் விபத்து

ஜெய்பூர், ஜூன் 8
ராஜஸ்தானில் பயிற்சியில் ஈடுபட்ட இந்திய விமானப் படையின் மிக் 21 போர் விமானம் விபத்துக்குள்ளாகியது. எனினும் விமானி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.
ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள உத்தர்லாய் விமான தளத்தில் இருந்து புறப்பட்டு வழக்கம் போல் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது விமானம் பார்மர் மாவட்டத்தில் உள்ள கிராமத்தில் விபத்துக்குள்ளாகியுள்ளது.
விபத்து இடம்பெற்றதை உறுதிப்படுத்தியுள்ள பாதுகாப்புத் துறை செய்தித் தொடர்பாளர் கோஸ்வாமி, "மீட்புக் குழுவினர் விபத்து இடம்பெற்ற பகுதிக்குச் சென்றுள்ளனர். விபத்துக்கான காரணம் குறித்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன" என்று தெரிவித்தார். (ற)

மாநிலங்களவைத் தேர்தல்

## தே.மு.தி.கவுக்கு பெரும் சிக்கல்

சென்னை, ஜூன் 8
தமிழகத்திலிருந்து 6 மாநிலங்களவை உறுப்பினர்களைத் தேர்வு செய்வதற்கான நடவடிக்கைகள் விறுவிறுப்படைந்திருக்கின்றன. இந்த நிலையில், தே.மு.தி.க. அதிருப்தி உறுப்பினர்களின் வாக்குகள் யாருக்கு என்பது இன்னமும் தெரியாத நிலையிலேயே உள்ளது.
தமிழகத்தில் ஆறு மாநிலங்களவை உறுப்பினர்களின் இடங்களுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில், அ.தி. மு.கவும் அதன் தோழமைக் கட்சிகளும் ஐந்து இடங்களைக் கைப்பற்றிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
இந்த நிலையில், மீதமிருக்கும் ஓர் இடத்தை தனித்துக் கைப்பற்றுவதற்கான வாக்குகள் எந்த எதிர்க்கட்சியிடமும் இல்லை. தமிழக சட்டப்பேரவையில் தி.மு.க. 23 உறுப்பினர்களையும், தே.மு.தி.க. 29 உறுப்பினர்களையும் கொண்டிருக்கின்றன. அதில் ஆறு உறுப்பினர்கள் தமிழக முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்த பிறகு, தே.மு.தி.கவிலிருந்து தனித்துச் செயற்படுகின்றனர்.

தாவல் தடைச் சட்டம்

இந்த நிலையில், மாநிலங்களவைத் தேர்தலில் இந்த ஆறு உறுப்பினர்கள் கட்சிக்கு கட்டுப்பட்டு வாக்களிக்காவிட்டால், அவர்கள் மீது கட்சித் தாவல் தடைச் சட்டம் பாயுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.
அதே நேரத்தில், தே.மு.தி.க.வைச் சேர்ந்த அதிருப்தி உறுப்பினர்களைத் தவிர, அதே கட்சியைச் சேர்ந்த 6 உறுப்பினர்கள் சட்டப்பேரவையிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கின்றனர். இருந்த போதும் அவர்கள் இந்தத் தேர்தலில் வாக்களிக்க எந்தத் தடையும் இல்லை என்று கூறப்படுகிறது.
அதிருப்தி உறுப்பினர்கள் தங்கள் விருப்பப்படி வாக்களிக்க முடியும் என்ற நிலையில் தே.மு.தி.க வாக்குகளின் எண்ணிக்கை 23ஆகக் குறையக்கூடும். அதனால், அக்கட்சி, ஓர் இடத்தைப் பெற வேண்டுமானால், அரசியல் களத்தில் கடுமையான போராட்டத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.
தே.மு.தி.க. 29 உறுப்பினர்களை வைத்திருந்தாலும் அதிருப்தி உறுப்பினர்கள் யாருக்கு வேண்டுமானாலும் வாக்களிக்க முடியும் என்ற நிலை, அக்கட்சிக்கு பெரும் சவாலாகவே இருக்கும் என்று கூறப்படுகிறது. (ற)

# இலங்கையில் தஞ்சமடையும் போராட்டம்

## இராமேஸ்வரம் மீனவர்கள் அறிவிப்பு



சென்னை, ஜூன் 8
இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 49 பேரையும், விடுவிக்குமாறு வலியுறுத்தி எதிர்வரும் 22ஆம் திகதி ஆயிரம் படகுகளில் சென்று இலங்கையில் தஞ்சம் அடையும் போராட்டத்தில் ஈடுபடப் போகின்றனர் என்று இராமேஸ்வரம் மீனவர்கள் அறிவித்துள்ளனர்.
நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற ராமேஸ்வரம் மீனவர் சங்கப் பிரதிநிதிகளின் அவசரக் கூட்டத்தை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
"கைது செய்யப்பட்ட மீனவர்களை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் விடுவிக்க வேண்டும். இல்லையெனில் திட்டமிட்டபடி 22ஆம் திகதி இலங்கையில் தஞ்சம் அடையும் போராட்டம் நடைபெறும்" என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.
இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 24 மீனவர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் அதேவேளை, நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட 25 மீனவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டு எதிர்வரும் 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## பஸ் விபத்து: 19 பேர் சாவு

சிம்லா, ஜூன் 8
இமாச்சலப் பிரதேசம் சிர்மௌர் மாவட்டத்தில் வீதியோரப் பள்ளத்தில் பஸ் தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியதில் 18 பேர் உயிரிழந்தனர்.
சிர்மௌர் மாவட்டம் சங்ராஹ் டெஹ்சில் பகுதியிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. பயணிகள் பஸ் 500 அடி ஆழ பள்ளத்தில் உருண்டு வீழ்ந்துள்ளது. இந்த விபத்தில் 18 பேர் உயிரிழந்துள்ளனர். பாதிக்கப்பட்ட அனைவரும் கல்லூரி மாணவர்கள் என்று தெரிய வருகின்றது. (ற)

## பா.ஜ.க. கூட்டத்தில் அத்வானி இல்லை

புதுடில்லி, ஜூன் 8
கோவாவில் நடைபெறும் பா.ஜ.க. கூட்டத்தில், பா.ஜ.க. மூத்த தலைவர் அத்வானி பங்கேற்கவில்லை.
உடல் நலக் குறைவால் அத்வானி நேற்றைய கூட்டத்தில் பங்கேற்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் கோவாவில் இன்று முதல் நடை பெறும் பா.ஜ.க. செயற்குழுக் கூட்டத்தில் அத்வானி பங்கேற்பார் என்றும் கூறப்பட்டுள்ளது. (ற)

## ஆந்திராவில் கடும் மழை மின்னல் தாக்கி 13 பேர் சாவு

சென்னை, ஜூன் 8
ஆந்திராவில் நேற்றுமுன்தினம் மட்டும் மின்னல் தாக்கத்தால் 13 பேர் உயிரிழந்துள்ளனர். ஆந்திராவில் தற்போது தென்மேற்குப் பருவ மழை பெய்யத் தொடங்கியுள்ளது.
மாநிலம் முழுவதும் பரவலாக சூறாவளி காற்று, இடியுடன் பலத்த மழை பெய்து வருகிறது. நேற்றுமுன்தினம் மட்டும் மின்னல் தாக்கி ஒரே நாளில் 13 பேர் உயிரிழந்துள்ளனர். அடிலாபாத் மாவட்டத்தில் இருவரும், கர்னூல், மெதக் மாவட்டங்களில் தலா 3 பேரும், கிழக்கு கோதாவரி, நலகொண்டாவில் தலா ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.
மகபூப் நகர் மாவட்டத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த தம்பதியும், அவர்களின் மகனும் உயிரிழந்துள்ளனர். கரீம் நகர் மாவட்டம், வெங்கடாபுரம் கிராமத்தில் கோழிப் பண்ணை மீது இடி தாக்கியதில் 3 ஆயிரம் கோழி குஞ்சுகள் கருகி இறந்துள்ளன. (ற)

## தி.மு.கட்சிக்காகவே எதிர்க்கிறது அ.தி.மு.க.

### சேதுசமுத்திர திட்டம் குறித்து ஸ்டாலின்

சென்னை, ஜூன் 8
சேது சமுத்திர திட்டம் தொடர்பாக அ.தி.மு.க. தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளது என்று தி.மு.க. பொருளாளர் ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.
தி.மு.கவுக்கு நற்பெயர் வந்துவிடக்கூடாது என்பதற்காகவே முதலமைச்சர் ஜெயலலிதா சேதுசமுத்திர திட்டத்தை எதிர்த்து வருகின்றார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.
தி.மு.க. தலைவர் கருணாநிதியின் பிறந்த நாள் விழா மற்றும் நாடாளுமன்ற தேர் [illegible] அதில் கலந்து கொண்டு பேசிய அவர்,
"தி.மு.க. ஆட்சியில் இரண்டு மணி நேரமாக இருந்த மின்வெட்டு தற்போது 18 மணி நேரமாக அதிகரித்துள்ளது. தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட சமச்சீர் கல்வியின் மூலம் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாணவர்களின் தேர்ச்சி விகிதம், இந்த ஆண்டு அதிகரித்துள்ளது" என்றும் கூறினார். (ற)



## தீவிரவாத தடுப்பு மையம்; கைவிடுகிறது இந்திய அரசு

### முதலமைச்சர்களின் எதிர்ப்பை அடுத்து

புதுடில்லி, ஜூன் 8
தேசிய தீவிரவாத தடுப்பு மையம் அமைக்கும் யோசனையை இந்திய மத்திய அரசு கைவிட்டுள்ளது.
காங்கிரஸ் கட்சி சாராத ஏனைய முதலமைச்சர்களின் கடும் எதிர்ப்பை அடுத்தே இந்திய மத்திய அரசு இந்த முடிவை எடுத்துள்ளது.
தேசிய தீவிரவாத மையம், உளவுப் பிரிவின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும். இந்தியாவின் எந்த மாநிலத்துக்குள்ளும் அனுமதியின்றி சென்று விசாரணைகளை மேற்கொள்ளக் கூடிய அதிகாரம் அந்த மையத்துக்கு வழங்கப்படும்.
எனினும் இந்த மையத்தை அமைப்பது குறித்து மாநில முதலமைச்சர்களிடையே கருத்து ஒற்றுமை ஏற்படவில்லை.
காங்கிரஸ் கட்சி சாராத மாநில முதலமைச்சர்கள் இந்த மையத்தை அமைப்பதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர்.
அதையடுத்து இந்த முயற்சியைக் கைவிட்டுள்ள மத்திய அரசு "முழுமையான கருத்து ஒன்றுமை ஏற்பட்ட பின்னரே தேசிய தீவிரவாத தடுப்பு மையம் அமைப்பது பற்றித் தீர்மானிக்கப்படும்" என்று தெரிவித்துள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடனான உறவுகளை மேம்படுத்தவே முன்னுரிமை

## பாகிஸ்தானின் புதிய பிரதமர் நவாஸ் செரீப் தெரிவிப்பு

இஸ்லாமாபாத், ஜூன் 8
இந்தியாவுடனான இராஜதந்திர உறவுகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப்.



“ அயல் நாடுகளுடனான உறவுகளைப் பலப்படுத்திக் கொள்வதற்கு நாம் உறுதி பூண்டுள்ளோம். அதனூடாகவே பாகிஸ்தானின் பொருளாதாரத்தை நாம் வளர்த்துக் கொள்ள முடியும்.

பிரதமராகப் பொறுப்பேற்ற பின்னர் தமது வெளியுறவுக் கொள்கை தொடர்பாக விளக்கமளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,
"அயல் நாடுகளுடனான உறவுகளைப் பலப்படுத்திக் கொள்வதில் நாம் உறுதி பூண்டுள்ளோம். அதனூடாவே பாகிஸ்தானின் பொருளாதாரத்தை நாம் வளர்த்துக் கொள்ள முடியும்.
குறிப்பாக இந்தியாவுடனான இராஜதந்திர உறவுகளை மேம்படுத்திக் கொள்வதற்கு முன்னுரிமை கொடுக்கப்படும். இந்தியாவுடனான எல்லைப் பிரச்சினைகள் மற்றும் ஜம்மு-காஷ்மீர் பிரச்சினைகள் குறித்து பேச்சுக்கள் மூலம் சுமுக தீர்வு காண்பதற்கான முயற்சிகளை நாம் முன்னெடுக்கவுள்ளோம்.'' என்று அவர் கூறினார்.
அமெரிக்காவின் தலையீடு மற்றும் ஆளில்லா விமானத் தாக்குதல்கள் குறித்துக் கேட்கப்பட்டபோது,
"அமெரிக்காவுடனான கருத்து வேறுபாடுகள் விரைவில் தீர்க்கப்படும். பாகிஸ்தானில் நிலவும் பயங்கரவாதச் செயற்பாடுகள் குறித்து அரசியல் கட்சிகள் மற்றும் பாதுகாப்பு பிரிவு என்பவற்றுடன் ஆலோசித்து முடிவெடுக்கப்படும்" என்று தெரிவித்த அவர்,
"அயல் நாடான ஆப்கனில் நிலையான ஆட்சி அமைக்கப்பட்டால், பாகிஸ்தானில் பெருமளவு பயங்கரவாதச் செயற்பாடுகள் குறைவடையும். அங்கு அமைதியை ஏற்படுத்துவதில் அந்த நாட்டினரே ஈடுபடுத்தப்பட வேண்டும். அதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும்" என்றும் கூறினார். (ற)

# புகுஷிமா உலையில் அணுக்கசிவு அபாயம்

டோக்கியோ, ஜூன் 8
ஜப்பானில் புகுஷிமா அணு உலையில் மீண்டும் அணுக் கசிவு அபாயம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.
2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக புகுஷிமா அணு உலையில் அணுக் கசிவு ஏற்பட்டது. அதையடுத்து அணு உலையின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டன.
அணுகதிர்வீச்சு பாதிப்புள்ள நீரை பாதுகாத்து வைக்கும் நூற்றுக்கணக்கான இரும்பு தொட்டிகளில் ஒன்றில் தற்போது கசிவு ஏற்பட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
புகுஷிமா அணு உலை உள்ள பகுதியில் நிலத்தடி நீரில் சீசியம் துகள்கள் இருப்பதை ஆலை நிர்வாகம் சமீபத்தில் தான் ஒத்துக்கொண்டது. தற்போது இந்த தகவல் வெளியாகியிருப்பது உலை நிர்வாகத்தின் பாதுகாப்பு திறன் குறித்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. புகுஷிமா அணு உலையிலிருந்து கடந்த ஏப்ரல் மாதம் இரண்டு முறை இது போன்ற கசிவு ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற)

# விவாகரத்து செய்தார் ரஷ்ய ஜனாதிபதி புடின்



மொஸ்கோ, ஜூன் 8
ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் லியூட்மிலா தம்பதியர் தாம் விவாகரத்துச் செய்து கொள்வதாக அறிவித்துள்ளனர். அதையடுத்து அவர்களின் 30 வருட திருமண வாழ்க்கை முடிவுக்கு வந்துள்ளது.
திருமண வாழ்க்கை முடிவு குறித்து ஜனாதிபதி புடின் தொலைக்காட்சியின் வாயிலாக அறிவித்தார்.
1983ஆம் ஆண்டில் புடின்-லியூட்மிலா திருமணம் நடைபெற்றது. இத்தம்பதிகளுக்கு மரியா மற்றும் யேக்தரீனா என்ற இரண்டு மகள்மார் உள்ளனர்.
பொது மற்றும் அரசு விழாக்களில் அதிகமாக கலந்து கொள்ளாமல் தனித்து இருந்து வந்தார் புடினின் மனைவி.
விவாகரத்து குறித்து இருவரும் கூடி ஆலோசித்தே முடிவு செய்ததாகவும், புடினின் அறிவிப்பு தன்னை எவ்விதத்திலும் பாதிக்கவில்லை என்றும் லியூட்மிலா தெரிவித்தார். (ற)


“ யுனிசெப் கணக்கெடுப்பின்படி, 2009ம் ஆண்டில் மட்டும் 7,00,000 ரஷ்யர்கள் விவாகரத்துச் செய்து கொண்டுள்ளனர். ஆனால், அரசியல் தலைவரான புடினின் விவாகரத்தை, பொதுமக்கள் நோக்கும் விதம் குறித்து இன்னும் கருத்துகள் எதுவும் வெளியாக வில்லை.

# பிச்சை எடுக்க தடை விதித்தது நீதிமன்றம்

லண்டன், ஜூன் 8
பிரிட்டனின் நெட்வெஸ்ட் நகரத்தைச் சேர்ந்த 37 வயதுடைய சிமான்ரைட் என்ற பிச்சைக்காரருக்கு, பிச்சை எடுக்கக் கூடாது என்று உத்தரவிட்டுள்ளது நீதிமன்றம்.
இவர் தினமும் அங்குள்ள வங்கியின் முன்னால் அமர்ந்து பிச்சை எடுத்து வந்தார். காலை 9 மணிக்கு பிச்சை எடுக்க வரும் இவர் மாலை 6 மணிக்குச் சரியாகக் கிளம்பிவிடுவாராம்.
இந்தநிலையில் அவருக்கு மூன்று லட்சம் பவுண்ஸ் பெறுமதியான வீடு ஒன்று இருப்பதைக் கண்டு பிடித்தார் ஒருவர். கண்டு பிடித்தவர் விடுவாரா? நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தார். வழக்கை விசாரித்த நீதிமன்றம் சிமான்ரைட்டுக்கு பிச்சை எடுக்க தடை விதித்தது.
சிமான்ரைட்டின் நாளாந்த வருமானம் எவ்வளவு தெரியுமா? 250 தொடக்கம் 3,00 பவுண்ஸ்களாம். (ற)

# முன்னணி இணையங்களூடாக உளவு பார்க்கிறது அமெரிக்கா

லண்டன், ஜூன் 8
அமெரிக்க உளவுத்துறை உலகின் முன்னணி இணையதள நிறுவனங்களின் வழங்கிகளுக்குள் நுழைந்து உளவு பார்க்கின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
பிரபல அமெரிக்க நாளிதழான 'த வோஷிங்டன் போஸ்ட்' நாளிதழும், பிரிட்டிஷ் நாளிதழான த கார்டியன் பத்திரிகையும் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளன.
அமெரிக்க உளவுத்துறையால் தனி நபர்களை இலக்கு வைத்து மைக்ரோசொப்ட், யாகூ, கூகுள் மற்றும் பேஸ்புக் ஆகிய 9 முன்னணி இணையத்தள நிறுவனங்களின் வழங்கிகள் இவ்வாறு உளவு பார்க்கப்படுகின்றன என்று அந்தப் பத்திரிகைகள் கூறுகின்றன.
'பிரிம்ஸ்' என்று பெயரிடப்பட்டுள்ள அமெரிக்க உளவுத்துறையின் இந்த இரகசிய உளவுத் திட்டத்தில், சில நபர்களின் நடமாட்டங்களைப் பின்தொடர்வதற்காக தனிப்பட்ட ஆள்களின் காணொலிப் பதிவுகள், படங்கள், மின்னஞ்சல்கள் என்பவை திரட்டப்படுகின்றன என்றும், கடந்த 6 ஆண்டுகளாக இவ்வாறான உளவு நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.
குறித்த தகவல் தொடர்பாகக் கண்டனம் வெளியிட்டுள்ள அமெரிக்க உளவுத்துறைத் தலைவர் ஜேம்ஸ் கிளப்பர், "குறித்த பத்திரிகைகள் வெளியிட்டுள்ள தகவல்களில் தவறுகள் காணப்படுகின்றன. இப்படியான செய்திகள் உளவுத் துறை நிறுவனங்களின் பணிகளை பாதிக்கும்" என்று தெரிவித்துள்ளார்.
அதேவேளை, தமது வழங்கிகளுக்குள் நுழைவதற்கு அரச நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை என்று பேஸ்புக் மற்றும் அப்பிள் ஆகிய நிறுவனங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)



# உதைபந்தாட்ட வீரர்கள் மீது துப்பாக்கிச் சூடு

அபித்ஜான், ஜூன் 8
ஐவரி கோஸ்ட் நாட்டில் உதைபந்து அணி வீரர்கள் சென்ற பஸ் மீது ஆயுதம் தாங்கிய கொள்ளையர்கள் நடத்திய தாக்குதலில் ஓர் உதைபந்தாட்ட வீரர் உயிரிழந்தார். 23பேர்பலத்தகாயம்அடைந்தனர்.
தலைநகர் அபித்ஜானில் லீக் ஆட்டத்தில் பங்கேற்ற வீரர்கள், தமது இருப்பிடத்துக்கு திரும்பிய போதே கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். பேரூந்தை கொள்ளையர்கள் தடுத்தபோது வாகனச் சாரதி அதை நிறுத்தாமல் சென்றுள்ளார். அதையடுத்து பஸ்ஸின் மீது கொள்ளையர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்று கூறப்படுகிறது.
ஐவரி கோஸ்ட் நாட்டின் மேற்குப் பகுதியில் உள்நாட்டு இனவாத மோதல் தொடர்பாக தொடர்ந்து பதட்டம்நிலவிவருகிறது. அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் அங்கு அரசியல் நெருக்கடிகளால் நிலைமை மோசமடைந்ததுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

# எதிர்ப்பு போராட்டங்கள் முடிவுக்கு வர வேண்டும்

## துருக்கியப் பிரதமர் எடோகன்

அங்காரா, ஜூன் 8
அரசுக்கு எதிரான போராட்டங்கள் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார் துருக்கியப் பிரதமர் டைப் எடோகன்.
ஜனநாயகத்தைப் புறந்தள்ளி வன்முறைகளுக்கு வழிவகுக்கும் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாம் என்றும் அவர் கோரியுள்ளார்.
வெளிநாட்டுப் பயணம் ஒன்றை மேற்கொண்டு விட்டு நாடு திரும்பிய பின்னரே அவர் இவ்வாறு தெரிவித்தார். நாடு திரும்பிய பிரதமரை வரவேற்க ஸ்தான்புல் விமான நிலையத்தில் ஆயிரக் கணக்கான ஆதரவாளர்கள் கூடியிருந்தனர்.
அரசின் அபிவிருத்தித் திட்டம் ஒன்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் தற்போது அரச எதிர்ப்புப் போராட்டமாக மாறியுள்ளது. போராட்டங்களில் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே நடைபெற்ற மோதல்களில் இது வரை 4 பேர் உயிரிழந்ததுடன் ஆயிரக்கணக்கானவர்கள் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.
தொடர்ந்து இடம்பெற்றுவரும் ஆர்ப்பாட்டங்களால் துருக்கியின் பொருளாதாரம் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)



# முன்னேறுகிறது சிரியப் படை

## கோலன் பிராந்தியத்தையும் இழந்தனர் கிளர்ச்சியாளர்கள்

டமாஸ்கஸ், ஜூன் 8
கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டிலிருந்த சிரியாவின் கோலன் பிராந்தியத்தை அசாத் ஆதரவுப் படைகள் மீண்டும் கைப்பற்றியுள்ளன.
கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தி நடத்தப்பட்ட தீவிர தாக்குதல்களை அடுத்து, அந்தப் பகுதியை விட்டுக் கிளர்ச்சியாளர்கள் பின்வாங்கியுள்ளனர்.
சிரிய ஜனாதிபதி அசாத்துக்கு ஆதரவாக ஹிஸ்புல்லா இயக்கத்தினர் களமிறங்கியுள்ளதை அடுத்து, சிரிய இராணுவத்தினர் கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான போராட்டத்தில் முன்னோக்கிச் செல்வதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.
அதேவேளை, சிரிய இராணுவத்தால் கைப்பற்றப்பட்டுள்ள, இஸ்ரேல் எல்லையில் உள்ள இந்தப் பிராந்தியத்தில் ஐ.நா. குழுவினர் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். எனினும் அங்கு கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த தமது பணியாளர்களைத் திருப்பி அழைத்துக் கொள்வதாக ஒஸ்ரியா தற்போது அறிவித்துள்ளது. (ற)



# அமெரிக்கா கண்டனம்

நியூயோர்க், ஜூன் 8
சிரிய இராணுவத்தினர் நடத்திவரும் தாக்குதல்களுக்கு அமெரிக்கா கண்டனம் வெளியிட்டுள்ளது. கடும் தாக்குதல்களை நடத்திவரும் சிரிய இராணுவம் கிளர்ச்சியாளர் வசமிருந்த பல இடங்களை மீண்டும் கைப்பற்றியுள்ளது.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த வெள்ளை மாளிகையின் பேச்சாளர் ஜேய் கோர்னி,
"இவ்வாறான கொடூரத் தாக்குதல்களை ஏற்றுக்கொள்ள முடியாது. கிளர்ச்சியாளர்களைத் தனித்து எதிர்க்க முடியாத காரணத்தால் ஹிஸ்புல்லா போன்ற தீவிரவாதிகளின் ஒத்துழைப்பை சிரியா பெற்றுக்கொண்டுள்ளது" என்று தெரிவித்தார்.
சிரிய அரசின் தாக்குதல்களுக்கு பிரான்ஸ், பிரிட்டன் உட்பட பல நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அந்தோனியாப்பிள்ளை அருளானந்தம்
(இளைப்பாறிய ஆசிரியை)

வசாவிளானில் வசித்தவரும் தற்போது உரும்பிராய் சிவன் வீதியில் வசித்தவருமான திருமதி அந்தோனியாப்பிள்ளை அருளானந்தம் (இளைப்பாறிய ஆசிரியை) கடந்த புதன்கிழமை இறைபதமடைந்தார்.


அன்னார் காலஞ்சென்ற அருளானந்தத்தின் அன்பு மனைவியும், திரேசம்மாவின் அன்புச் சகோதரியும், திருமதி இந்திராணி (எழுதுவினைஞர் யா/ சென்.ஜோன்ஸ் கல்லூரி), ஞானேந்திரன் (ஆசிரியர் - யா/ புனித பத்திரிசியார் கல்லூரி), புவனேந்திரன் (உப அதிபர் - யா/ வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), யோகேந்திரன் (ஆசிரியர் - யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), Dr. ரவீந்திரன் (சத்திர சிகிச்சை நிபுணர் - கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், பிரபாகரன் (ஆசிரியர் - யா/ சென். ஜோன்ஸ் கல்லூரி), வசந்தராணி, அன்னமலர், மாலா (ஆசிரியை - யா/ வதிரி திரு இருதயக் கல்லூரி), Dr .சுபோதினி (சத்திர சிகிச்சை நிபுணர் - கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் அனோஜி (ஆசிரியை - நவில் பாடசாலை, கைதடி), ஒஸ்மன்ஜெரி (கணக்காய்வுப் பரீட்சகர்), ஆரணி (ஆசிரியை - கிளி/ வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம்), அருளினி, தர்சினி (மாணவி - யாழ்.நுண்கலைப் பீடம், 4 ஆம் வருடம்), மதிவதனி, ஆனந்தன், மகிழ்மொழி, அஜந்தா, றொசேல், மிசேல் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆதனாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.



அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (08.06.2013) சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் உரும்பிராய் புனித மிக்கேல் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து நல்லடக்கம் புனித மிக்கேல் சேமக் காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
சிவன் வீதி, (2.6.7.3)(சி/8630)
உரும்பிராய் கிழக்கு.



## தியாகராஜா இராசதுரை
(இளைப்பாறிய அரசாங்க அதிபர். வவுனியா )

திரு.தியாகராஜா இராசதுரை, அவர்கள் 06/06/13 இறைவனடி சேர்ந்தார். இவர் மானிப்பாயை பிறப்பிடமாகவும் 70-2/1, New chetty St, கொட்டாஞ்சேனையை வதிவிடமாகவும் கொண்டவர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி முகாந்திரம் தியாகராஜாவின் சிரேஷ்ட மகனும், காலம் சென்ற சிவலோகேஸ்வரியின் அன்புக் கணவனும், காலஞ்சென்றவர்களான திருமதி புவனசுந்தரம். Dr திருமதி ஜெயரத்தினம் மற்றும் திருமதி செந்தில்நாதன், திருமதி துரைசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற யோகானந்தன் மற்றும் கீதா, சிவசோதி ஆகியோரின் தந்தையாரும், ரவீந்திரன், மாலினி ஆகியோரின் மாமனாரும், சுதர்ஷனா ரவீந்திரநாத், பிரியதர்ஷனா ஞானகுமரன் ஆகியோரின் அன்பு பாட்டனாரும், அஸ்வினி, விதூஷனின் அன்பு பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 9ஆம் திகதி ஞாயிற்றுகிழமை பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் காலை 9.30 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு,இறுதிக்கிரியைகள் 1.30 மணிக்கு நடைபெற்று பிற்பகல் 4.00 மணிக்கு கனத்தை இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: திரு.சிவசோதி (மகன்) Phone 011 2541025
(C/8912) திருமதி ரவீந்திரன் (மகள்) Phone 011 2335786

## பயணிகளை நடுவீதியில் தவிக்கவிட்ட நடத்துநர்

நெல்லியடி, ஜூன் 8

கொடிகாமத்தில் இருந்து பருத்தித்துறைக்குச் சேவையில் ஈடுபடும் இறுதி நேர தனியார் பஸ் நெல்லியடியுடன் சேவையை முடித்துக் கொண்டதால் பருத்தித்துறை நோக்கிச் செல்லவிருந்த பயணிகள் சிரமங்களை எதிர்கொண்டனர்.

இந்தச் சம்பவம் திங்கள் இரவு இடம்பெற்றது.

மாலை 6.30 மணிக்குப் பின்னர் கொடிகாமத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கிப் புறப்பட்ட தனியார் பஸ் இரவு 7.15 மணியளவில் நெல்லி யடியை சென்றடைந்தது.

நெல்லியடி பஸ் தரிப்பிடத்தில் பயணிகளை இறக்கிய தனியார் பஸ்ஸின் நடந்துநர் போதுமானளவு பயணிகள் இல்லாததால் பருத்தித்துறைக்குச் செல்லும் பயணி களை யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி வரும் பஸ்களில் பயணிக்குமாறு கூறி இறக்கிவிட்டார்.

இதனையடுத்து குறித்த பஸ், சாரதி நடத்துநருடன் வதிரி நோக்கிச் சென்றது.

இந்த நிலையில் இறங்கிய பயணிகளோ சில மணி நேரம் காத்திருந்து யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித் துறை நோக்கி வந்த பஸ்களில் பயணத்தைத் தொடர்ந்தனர். (வ-8)

## பரு.நகர எல்லைக்குள் விரைவில் நுழைவாயில்கள்

வடமராட்சி,ஜூன் 8

பருத்தித்துறை நகர எல்லைகளில் நான்கு புறங்களிலும் உள்ள நுழைவாயில்களில் வரவேற்பு வளைவுகளை அமைக்க பருத்தித்துறை நகர சபை நடவடிக்கை எடுக்கவுள்ளது.

ஓராங்கட்டைச் சந்தி, தம்பசிட்டி பாடசாலைச் சந்தி, சுப்பர் மடம்சந்தி, தும்பளை எல்லைவீதி ஆகிய நுழைவாயில்களிலேயே இந்த வரவேற்பு வளைவுகள் நிறுவப்படவுள்ளதாக பருத்தித்துறை நகரசபைத் தலைவர் சட்டத்தரணி வா.ரவீந்திரன் தெரிவித்தார். (வ-8)

## சித்துபாத்தி மயானம் விரைவில் புனரமைப்பு

நல்லூர் பிரதேச சபை அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்தை புனரமைக்கவுள்ளதாக சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

குறித்த மயான புனரமைப்புக் கென சபை ஒரு மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.

மயானத்தில் இளைப்பாறு மண்டபம் அமைக்கவும் மயான உள்ளக வீதி தாரால் புனரமைக் கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

தற்போது இந்த மயானம் போதிய வசதிகள் இன்றிய நிலையிலுள்ளது. (வ-17)

## விண்ணப்பிக்கலாம்

நவாலி, ஜூன் 8

வலி.தென்மேற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் லிகிதர் பதவிக்கு பெண்களிடமிருந்து விண்ணப்பம் கோரியுள்ளது.

இந்தப் பதவிக்கு க.பொ.த. சாதாரண தரம் அல்லது கூட்டுறவு பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்ற சான்றிதழ் உடையோர் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது விண்ணப்பங்களை வலி.தென்மேற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், 7 ஆம் கட்டை, சண்டிலிப்பாய் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பொது முகாமையாளர் அறிவித்துள்ளார். (ந-100)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 7

இந்து சமய கலாசார அலு வலர்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஆரம்பமாகவுள்ள சமஸ்கிருத வகுப்புக்களுக்கு ஆர்வமுடையவர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

கற்கை நெறியை தொடர விரும்புபவர்கள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மூன்று மாதங்களைக் கொண்ட இந்தக் கற்கை நெறியானது யாழ். ஆனைப் பந்தியில் உள்ள இந்துக் குருமார் ஒன்றியத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி கற்கை நெறி ஆரம்பமாக உள்ளது. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் காலை 9 மணியில் இருந்து நண்பகல் 12 மணி வரை வகுப்புக்கள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

## நிர்வாகிகள் தெரிவு

ஏழாலை உசத்தியோடை இந்து மயான அபிவிருத்தி சங்கத் தின் புதிய உறுப்பினர்களாக பின்வருவோர் அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். தலைவர்-க.இரத்தினசிங்கம், செயலாளர்- இ.அருணகிரி, பொருளாளர்- க.பிரபாகரன் மற்றும் பதினொரு பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (ந-86)

# துயர் பகிர்கின்றோம்

யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையின் முன்னாள் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்

**சந்தியாப்பிள்ளை ஜெகசோதிநாதன்**



அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ நாயன்மார்கட்டு
மகேஸ்வரி வித்தியாசாலை. (38095)(6.11) **பாடசாலைச் சமூகம்**

# மரண அறிவித்தல்கள்

## சுப்பையா சிவபாக்கியநாதன்

அராலி தெற்கைச் சேர்ந்த(மாதாங் கோயிலடி) சுப்பையா சிவபாக்கியநாதன் (06.06.2013) வியாழக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை. (38092)(8,3)

தகவல்:
க.புண்ணியமூர்த்தி(தம்பி),
மா.சுதா ஜெனன் (மருமகன்),
உறவினர்கள்.



## திருமதி குழந்தைவேல் பரிமளாதேவி (மணியார்)
(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி குழந்தைவேல் பரிமளா தேவி 05.06.2013 அன்று புதன்கிழமை காலை காலமானார். அன்னார் காலஞ்சென்ற தம்பு குழந்தைவேலின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பரமகுருசாமி (ஓவசியர்), சவுந்தரம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்றவர்களான தம்பு மாணிக்கவல்லி தம்பதியரின் அன்பு மருமகளும் சிவபாலன் சுதா (ஆசிரியை கனடா), சுபேந்திரன் (கணக்காளர் ஆஸ்திரேலியா), ஜெயந்திரன் (உதவி ஆசிரியர் தினக்குரல்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவபாலன் (பொறியியலாளர் கனடா), காயத்திரி (டாக்டர் ஆஸ்திரேலியா), வனஜா (விரிவுரையாளர், IDM City Campus Wellawatta) ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரவீணா, சங்கவி, அஸ்வின், பிரவீன், ஆருஷன், அபிஷனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் திருமதி கந்தவனம் ராஜேஸ்வரி, காலஞ்சென்ற கணேசானந்தன், செல்வராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற கந்தவனம் (படவரைஞர்), காலஞ்சென்ற திருச்சிற்றம்பலம் வள்ளிநாயகி, காலஞ்சென்ற குமாரவேல், ஆறுமுகம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.06.2013) சனிக்கிழமை அவரின் வட்டுக்கோட்டை இல்லத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டு நாளை (09.06.2013) ஞாயிற்றுக்கிழமை காலை இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10 மணியளவில் வழுக்கையாறு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**கலட்டி ஒழுங்கை,**
**சங்கரத்தை சந்தி,**
**வட்டு தென்மேற்கு,**
**வட்டுக்கோட்டை.**

தகவல்:
**பிள்ளைகள்.**

(C/9634)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் வீதி அகலிப்பு பணிகள் ஒகஸ்டில் நிறைவு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை பிரதம பொறியியலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 8
யாழ்.குடாநாட்டின் பிரதான வீதியின் அகலிப்பு மற்றும் புனரமைப்புப் பணிகள் யாவும் எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்துக்குள் நிறைவு பெற்றுவிடும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் எஸ்.சுதாகர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஏ-9 பிரதான வீதியின் அகலிப்பு, புனரமைப்புப் பணிகள் தற்போது நிறைவு பெற்றுள்ளன.

**அதனைவிட பருத்தித்துறை வீதி- கே.கே.எஸ்.வீதி, பலாலி வீதி போன்ற பிரதான வீதிகளின் புனரமைப்பு அகலிப்பு பணிகளும் கிட்டத்தட்ட நிறைவு பெறும் நிலையில் உள்ளன.**




வீதி அகலிக்கப்பட்டு புனரமைக்கப்பட்ட பகுதிகளுக்கு 'காப்பெற்' போடும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

பிரதான வீதிகளில் வடிகால்கள் மற்றும் மதகுகளின் புனரமைப்பு நிர்மாணப் பணிகளில் வீதி புனரமைப்பால் சற்று தாமதம் ஏற்படலாம். எனினும் இந்தப் புனரமைப்புக்கள் யாவும் இந்த மாதத்தில் துரிதப்படுத்தப்படும். பெரும்பாலும் இந்தப் புனரமைப்புப் பணிகள் எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்தில் நிறைவு பெற்றுவிடும் என்றார். (வ-17)

## பூம்புகாருக்கு மின்சாரம்

### பணிகள் துரித கதியில்



யாழ்ப்பாணம், ஜூன் 8
அரியாலை கிழக்கு பூம்புகார் பிரதேசத்துக்கு மின்சாரம் வழங்குவதற்கான முன் னேற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பிரதேச மக்களுக்கு மினசாரம் வழங்கப்படவுள்ளது.

முதற்கட்டமாக மின்கம்பங்கள் புதிதாக நடப்பட்டு மின் இணைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (வ-17)

## அரச முதியோர் இல்ல வளாகத்தில் துப்புரவுப் பணி

குருநகர், ஜூன் 8
அரச முதியோர் இல்லத்தின் உள் வளாகம் துப்புரவுப் பணிகள் இடம்பெறுகின்றன. யாழ்.மாநகர சபையிடமிருந்து பெக்கோ வாகனம் ஒழுங்கு செய்யப்பட்டு இந்தத் துப்புரவு செய்யும் பணி கடந்த புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முதியோர் இல்ல உள் வளாகத்தில் பற்றைகள் வளர்ந்து காணப்பட்டது. வடமாகாண ஆளுநர் துப்புரவு செய்யுமாறு கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. கைதடி அரச முதியோர் இல்ல பின் வளவில் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம், சிறுவர் நன்னடத்தை பராமரிப்புத் திணைக்களம் ஆகியவை அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-51)

## சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 363 பேருக்கு விலங்குக் கடிக்கு சிகிச்சை

சாவகச்சேரி, ஜூன் 8
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடந்த நான்கு மாதங்களில் 363 பேர் விலங்குகளால் கடியுண்ட நிலையில் சிகிச்சை பெற்றுள்ளதாக வைத்தியசாலை அறிவித்தல் பலகை செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வளர்ப்பு நாய்களால் 209 பேரும், கட்டாக்காலி நாய்களால் 70 பேரும், பூனைகளால் 61 பேரும் ஏனைய விலங்குகளான குரங்கு, அணில், எலி ஆகியவற்றாலும் மனிதர்களாலும் கடியுண்ட நிலையில் 23 பேரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.


இவர்களில் கட்டாக்காலி நாய்கள் மற்றும் பூனை, ஏனைய விலங்குகள், மனிதர்கள் ஆகியோரால் கடியுண்டவர்களுக்கு விலங்கு விசர் தடுப்பூசி மருந்தும் (ஏ.ஆர்வி) சிலருக்கு விலங்கு விசர் தடுப்பு குருதிப் பாயம் (ஏ.ஆர்.எஸ்) என்பனவும் வழங்கப்பட்டுள்ளன.

> வளர்ப்பு நாய்களை செல்லப்பிராணியாகப் பயன்படுத்துபவர்களே அதிகம் கடியுண்டுள்ளனர்.

வளர்ப்பு நாய்களால் கடியுண்டவர்களின் காயத்திற்கேற்ற வகையில் தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த நான்கு மாத காலத்தில் 209 பேர் வளர்ப்பு நாய்களினால் கடியுண்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. வளர்ப்பு நாய்களை செல்லப்பிராணியாகப் பயன்படுத்துபவர்களே அதிகம் கடியுண்டுள்ளனர். உறவினர், நண்பர்கள் வீடுகளுக்குச் செல்பவர்களும் வளர்ப்பு நாய்களினால் கடியுண்டுள்ளனர். (வ-9)

## விளையாட்டு உபகரணங்கள்



வடமாகாண ஆளுநரின் பணிப்புரையின் பேரில் நயினாதீவு ம.வி., நயினாதீவு ஸ்ரீ கணேசா ம.வி. மாணவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. அவற்றின் 2 ஆம் தொகுதி உபகரணங்கள் செவ்வாயன்று வழங்கப்பட்டன. தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.யோன் குயின்ரஸ் மற்றும் கல்வி வலய உத்தியோகத்தர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (வ)

## உவர் நீர் தடுப்பணையை புனரமைக்க கோரிக்கை

வரணி,ஜூன் 8
வரணிப் பிரதேசத்தின் வடக்கு எல்லைப் பிரதேசத்தில் சுமார் 75 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட உவர்நீர்த் தடுப்பணை மீளப் புனரமைக்கப்பட வேண்டும் என விவசாயிகள் தரப்பில் கோரப்படுகின்றது.

இந்த அணை வரணி வடக்கு, மாசேரி, இடைக்குறிச்சி போன்ற கிராமங்களின் வடக்கு எல்லையாகவுள்ள கண்டல் காட்டுப் பகுதிக்கும், வயல் பிரதேசங்களுக்கும் இடையில் உவர் நீர் உட்புகாதவாறு தடுக்கும் வகையில் கட்டப்பட்டது.

வருடந்தோறும் இந்தக் காட்டுப் பகுதியில் தேங்கி நிற்கும் உவர்நீர் இந்த அணையூடாக குறித்த வயல் நிலங்களுக்கும் பாய்வதால் அணைக்கு அருகில் உள்ள பல ஏக்கர் கணக்கான வயல் நிலங்கள் சவர் நிலமாக மாறியுள்ளன. இந்த நிலையில் குறித்த வயல்களில் நெற் செய்கையை மேற்கொள்ள முடியாத நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

எனவே குறித்த சேதமடைந்த நிலையிலுள்ள வெள்ளத் தடுப்பு அணைக்கட்டை புனரமைப்பதற்கு சம்பந்தப்பட்ட அரச திணைக்களம் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வர வேண்டும் என விவசாயிகள் தரப்பால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (வ-122)

## நல்லொழுக்க நிறுவன சமூக பணிகள் வடமராட்சி கிழக்குக்கும் விஸ்தரிப்பு

வடமராட்சி,ஜூன் 8
வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் சமூக மேம்பாட்டுப் பணிகளை வடமராட்சி கிழக்குப் பிரதேசத்துக்கும் விஸ்தரிக்கவுள்ளது.

இதன் முதற்கட்டமாக மருதங்கேணிப் பகுதியில் சில திட்டங்களை முன்னெடுக்க 3 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

இதேவேளை வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) வடமராட்சி தெற்கு மேற்குப் (கரவெட்டி) பகுதிகளில் மூவர் கொண்ட குழுக்களாக இணைந்து சேமிப்பில் ஈடுபடுவோருக்கு சேமிப்பில் இருந்து 5 மடங்கு தொகையை சுயதொழில் கடனாக வழங்கத் தீர்மானித்துள்ளது.

அத்துடன் சுயதொழிலாக பனங்கட்டி உற்பத்தியில் ஈடுபடுவோருக்கு கடனுதவிகளை வழங்கி பனங்கட்டி உற்பத்தியை அதிகரிக்கவும், சுயதொழிலை ஊக்குவிக்கவும் நிறுவனம் தீர்மானித்துள்ளது. (வ-8)

# கொடிகாமம் பஸ் நிலையப் பகுதியில் சக்திமிகு மின்விளக்குகளை பொருத்துக

## அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை

தென்மராட்சி,ஜூன் 8
கொடிகாமம் சந்தி மற்றும் பஸ் நிலையப் பகுதியில் அதிக வலுவுடைய மின் விளக்குகளைப் பொருத்துமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கொடிகாமம் சந்தியில் மின் விளக்கு இல்லாததால் தூர இடங்களிலிருந்து வரும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

கொடிகாமம் சந்தியிலிருந்து பஸ் நிலையம் செல்லும் வரையும் மின் விளக்குகள் இல்லாததால் பயத்துடன் நடந்து செல்ல வேண்டியுள்ளது. [illegible] மின் விளக்கு போதிய வெளிச்சமில்லாததால் அங்கு தரித்து நிற்பதற்கும் அச்சமாக உள்ளதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

தென்மராட்சி பிரதேசத்தின் சிறிய நகரங்களில் ஒன்றாக கொடிகாமம் விளங்குகிறது. அத்துடன் அங்கிருந்து வடமராட்சிக்குச் செல்வதற்கான வீதியும் உள்ளது.

ஏ-9 வீதியில் கொடிகாமம் உள்ளதால் இரவு வேளையில் வாகனங்களில் வரும் பயணிகளின் நலன்கருதி கொடிகாமம் சந்தி உள்ளிட்ட நகரப் பகுதியில் அதிசக்தி கூடிய மின் விளக்குகளைப் பொருத்த உரிய தரப்பினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் தெரிவித்தனர். (வ-9)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தியைக் காட்டி கிழக்கில் ஆக்கிரமிப்புகள்

## அரியநேத்திரன் எம்.பி.குற்றச்சாட்டு

மட்டக்களப்பு,ஜூன் 8

இன்று அபிவிருத்தி என்ற பேரில் கிழக்கு மாகாணத்தில் ஆக்கிரமிப்புகள் இடம்பெறுகின்றன. அவைகளை தடுக்கக்கூடிய சக்தி தமிழ் மக்களின் அரசியல் பலம் மட்டுமே. ஆனால், தமிழர்களின் அரசியல் பலத்தை இல்லாமல் செய்வதற்கும் தமிழர்களைக் கொண்டே பல சதிமுயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

மட்டக்களப்பு , மக்களடி ஊற்று கிராம மக்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கில் இன்று தமிழர்களுக்கான அரசியல் பலம் எதுவும் இல்லாமல் போகுமானால் எதிர்காலத்தில் தமிழர்கள் தமிழை மட்டுமல்ல, எமது நிலத்தையும் இழக்க நேரிடும்.

இன்று வடக்கு,கிழக்கில் இவ்வாறான விடயங்களை பாதுகாப்பதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயலாற்றுகின்றது. அதனைத் தடுக்கும் முயற்சிக்கு தமிழ் புத்திஜீவிகள் என்று



ஒரு சிலரை அரசு சலுகைகளைக் கொடுத்து விலைக்கு வாங்கி தமிழத் தேசியத்தை இல்லாமல் செய்யும் முயற்சிகளில் இறங்கியுள்ளது.

அபிவிருத்தி என்பது நிச்சயமாகத் தேவை. அபிவிருத்தி இல்லாமல் வாழ முடியாது. அபிவிருத்தி என்ற போர்வையில் சில அபகரிப்புகளைச் செய்வதை அனுமதிக்க முடியாது.

இன்று மட்டக்களப்பில் ஒரே இரவில் திட்டமிட்டு மூன்று ஆலயங்களும் உடைக்கப்பட்டு விக்கிரகங்கள், தங்க நகைகளும் திருடப்பட்டுள்ளன. அதனைச் செய்தவர்களுக்கும், நில ஆக்கிரமிப்பைச் செய்து வருகின்றவர்களுக்கும் தொடர்பு உள்ளதா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் தற்போது எழுந்துள்ளது -என்றார். (ச)

# பௌத்தருக்குரிய நாடு என கூறுவது அறிவற்ற செயல்

## சங்கரத்ன தேரர் கூறுகிறார்



கல்முனை, ஜூன் 8

இலங்கை பௌத்தர்களுக்கு மட்டும் உரித்தான நாடு என்று கோஷமிடுவது அறிவற்ற செயல் என்று கல்முனை சுபத்ராராமய விகாராதிபதி ரண்முத்துகல சங்கரத்ன தேரர் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள சர்வமத அமைப்புகளைக் கலைத்து விடவேண்டும் என்ற கருத்தில் ஊடகங்களில் வெளியான செய்திகளை கண்டித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

''முப்பது வருடங்களுக்கு மேலாக நாட்டில் இடம்பெற்ற போரால் சின்னாபின்னமாகி இருந்த இன உறவை மீண்டும் கட்டியெழுப்பி சமாதானம் நிலவச் செய்வதில் சர்வமத அமைப்புக்களுக்கு பெரும் பங்கு உண்டு''.

''சர்வமத அமைப்புக்களை கலைத்தால் கலவரமும் போரும் ஏற்படும். ஜனாதிபதியின் முயற்சியின் காரணமாகவே இன்று நாட்டு மக்கள் நிம்மதியாக வாழ்கிறார்கள். நாட்டை மீட்ட பின் இன உறவை மீட்ட பெருமை சர்வமத அமைப்புக்களையே சாரும். இந்த நிலையில் இன நல்லுறவைக் கெடுக்கும் வகையில் சர்வமத அமைப்புக்களை கலையுங்கள்; இது பௌத்தர்களுக்கு மட்டும் உரித்தான நாடென கோஷம் இடுவது அறிவான செயல் அல்ல- என்று கூறப்பட்டுள்ளது. (ச-ரி)



கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் விசேட தேவையுடையோருக்கு வழங்கப்பட்ட சக்கர நாற்காலி, கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலர் கோ.தனபாலசுந்தரத்தால் விசேட தேவையுடைய நபருக்கு வழங்கப்பட்டது.


# கல்முனை மாநகரசபை ஊழியர்கள் கூரையின் மீது ஏறிப் போராட்டம்

அம்பாறை,ஜூன் 8

கல்முனை மாநகர சபையில் தற்காலிகமாக கடமையாற்றி வந்த 108 ஊழியர்கள் திடீரென இடைநிறுத்தம் செய்யப்பட்டதைக் கண்டித்து பாதிக்கப்பட்ட ஊழியர்கள் வியாழக்கிழமை காலை தொடக்கம் நண்பகல் வரை மாநகரசபை அலுவலக கூரை மீது ஏறி சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் அவர்கள் மாநகரசபையில் தொடர்ந்தும் ஊழியர்களாக கடமையாற்ற தன்மை அனுமதிக்க வேண்டும் என்று கோஷம் எழுப்பினர்.

இதேவேளை பாதிக்கப்பட்ட மற்றொரு தொகுதி ஊழியர்கள் மாநகரசபை முன்றலில் சுலோகம் ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



இந்தப் பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்காக கல்முனை மாநகரசபையில் வியாழக்கிழமை விசேட கூட்டம் நடைபெற்றது.

தற்போது தற்காலிக, அமைய மற்றும் நிமித்த அடிப்படையில் வேலைசெய்யும் அனைத்து ஊழியர்களையும் கல்வித் தகைமை அனைத்தையும் கருத்தில் கொள்ளாது மக்களுக்குச் சேவைகளை வழங்க சபை அங்கீகரிக்கும்.

பாதிக்கப்பட்ட ஊழியர்களை நிரந்தர நியமனத்தில் உள்வாங்க சபை அங்கீகாரம் கோருகிறது என கல்முனை மாநகரசபை முதல்வரால் முன்மொழியப்பட்ட பிரேரணை கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அதனை அடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களை முதல்வர் நேரில் சந்தித்து பேச்சு நடத்தியதை அடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

கல்முனை மாநகர சபையில் அந்தச் சபையின் சம்பளத்தில் தற்காலிகமாக கடமையாற்றி வந்த 108 ஊழியர்கள் புதன்கிழமை எவ்வித முன்னறிவிப்புமின்றி திடீரென இடைநிறுத்தம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-30)

# காத்தான்குடியில் குண்டு மீட்பு



மட்டக்களப்பு,ஜூன் 8

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முதியோர் இல்ல வீதியிலிருந்து வெடிக்காத நிலையில் குண்டு ஒன்று வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டது.

இந்த முதியோர் இல்ல வீதியில் பொதுமக்கள் சிரமதான பணியில் ஈடுபட்டுகொண்டிருந்தபோதே வெடிக்காத நிலையில் குண்டு கிடப்பதை கண்டு பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் குண்டை மீட்டனர் என்று காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றப்புலனாய்வுப் பொறுப்பதிகாரி எஸ்.மங்கள தெரிவித்தார்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# வெள்ள இடரைத் தடுக்க கால்வாய் புனரமைப்பு

காத்தான்குடி,ஜூன் 8

காத்தான்குடி பிரதேசத்தில் உள்ள புதிய காத்தான்குடி தோணாக் கால்வாயை புனரமைத்து சீரமைப்பதன் மூலம் காத்தான்குடி பிரதேசத்தில் ஒவ்வொரு வருடமும் ஏற்படும் வெள்ள இடரை தடுக்க முடியும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காத்தான்குடி பிரதேசத்தில் வெள்ளநீரை வடிந்தோடச் செய்வதற்கான நடவடிக்கைகள் குறித்து



ஆராயும் கூட்டம் காத்தான்குடி நகரசபையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் மழை காலத்தில் காத்தான்குடி பிரதேசத்தில் ஏற்படும் வெள்ள இடரில் இருந்து மக்களை பாதுகாத்து வெள்ளநீரை வடிந்தோடச் செய்வதற்கு எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது குறித்து ஆராயப்பட்டது.

# தென்கிழக்கு பல்கலை கல்வி நடவடிக்கைகள் பிற்போடப்பட்டன




அம்பாறை,ஜூன் 8

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளன. நாளைமறுதினம் 10 ஆம் திகதி இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்க ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்து என்று பல்கலைக்கழகத்தின் பதிவாளர் எச்.அப்துல் சத்தார் கூறினார்.

எனினும் தவிர்க்க முடியாத காரணத்தால் மூன்றாம் வருட மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை எதிர்வரும் 24 ஆம் திகதியும், இரண்டாம் வருட மாணவர்களின் கல்வி நடவடிக்கைகயை அடுத்த மாதம் முதலாம் திகதியும் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பு வராததாலேயே '13' ஐ திருத்த வேண்டிய நிலை

## விளக்கமளிக்கிறார் கெஹலிய ரம்புக்வெல

கொழும்பு,ஜூன் 8
ஓராண்டு காலம் கடந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வராததால்தான், அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் திருத்தம் மேற்கொள்ள வேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டது.

இவ்வாறு இலங்கையின் ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கொழும்பில் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் சில திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பாக அரசு அமைச்சரவையில் யோசனைகளை முன்வைத்துள்ளது.

அதற்கமைய இரு மாகாண சபைகளை ஒன்றிணைப்பது தொடர்பாக ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரம் நீக்கப்படவுள்ளது.

தேசிய கொள்கைகள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் சட்ட வரைவு ஒன்றை சமர்ப்பிக்க முன்னர், சகல மாகாண சபைகளினதும் அனுமதி பெறப்பட வேண்டும் என்ற சட்டப்பிரிவைத் திருத்தி, பெரும்பான்மை மாகாணசபைகளின் அனுமதியைப் பெற்றால்போதும் என மாற்றம் செய்யப்படவுள்ளது.

மாகாணசபைகளின் காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்குவது குறித்து அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்படவில்லை.

இந்த அதிகாரங்களை நீக்குவது தொடர்பாக, கூட்டணிக் கட்சிகளிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன.

அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள திருத்த யோசனைகள் குறித்த கட்சிகளின் கருத்துகள் குறித்து அடுத்தவாரக் கூட்டத்தில் ஆராயப்படும்.

சகல கட்சிகளினதும் கருத்துக்களை ஆராய்ந்த பின்னரே 13 ஆவது திருத்தத்தில் திருத்தம் செய்யப்படும். இந்தத் திருத்தங்கள் குறித்து மாகாணசபைகளினது கருத்துகளும் பெறப்படும்.

13 ஆவது திருத்தம் தொடர்பாக ஆராய்வதற்காக அரசு நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமித்தது. அதில் பங்கேற்குமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.


ஆனால், ஓர் ஆண்டுக்கு மேலாகியும் தெரிவுக்குழுவால் செயற்பட முடியவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக்குழுவுக்கு வராத நிலையிலேயே, அரசு இந்த திருத்தங்களை முன்வைத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்குபற்றமுன்வரவில்லை என்பதற்காக அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை நிறுத்த முடியாது. தெரிவுக்குழுவில் எட்டப்படும் எத்தகைய முடிவையும் ஏற்கத் தயார் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்திருந்தார்.

தேவை ஏற்பட்டால், இந்த இரு திருத்தங்களுக்கு மேலதிகமாக, 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் மேலும் திருத்தங்கள் செய்யப்படும்.

வடமாகாணசபைத் தேர்தலை பிற்போடுவதற்காக 13 ஆவது அரசமைப்பில் திருத்தம் செய்யப்படவில்லை.

எனினும், வடமாகாணசபைத் தேர்தலுக்கு முன்னர் அரசமைப்பின் 13வது திருத்தத்தில், திருத்தம் செய்யப்படும்.- என்றார். (ச)



## கூட்டு முயற்சியில் ரின்மீன் தொழிற்சாலை

### தாய்லாந்து இணக்கம் என்கிறார் ராஜித



கொழும்பு,ஜூன் 8
இலங்கையும் தாய்லாந்தும் இணைந்து ரின்மீன் உற்பத்தித் தொழிற்சாலையை நிறுவ இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை மீன்பிடி மற்றும் நீர்வளங்கள் துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இலங்கையில் ரின்மீன் தொழிற்சாலையை நிறுவ தாய்லாந்தின் ரின்மீன் உற்பத்தி நிறுவனமான ''தாய் யூனியன் மெனுபக்ஸரீஸ்'' நிறுவனம் முன்வந்துள்ளது.

இந்த நிறுவனத்தின் பிரதிநிதிகள் இந்த மாத இறுதியில் இலங்கைக்கு வந்து ரின்மீன் உற்பத்தித் தொழில் சம்பந்தமாக அடிப்படை ஆய்வொன்றை மேற்கொள்ளவுள்ளனர் என்று அமைச்சர் கூறினார்.

தாய்லாந்து அரசின் அழைப்பை ஏற்று அங்கு சென்ற அமைச்சர் ராஜிதசேனாரத்ன, அந்த நாட்டின் ரின்மீன் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நிறுவனமான 'தாய் யூனியன் மெனுபக்ஸரீஸ்' நிறுவனத் தலைவருடன் இது சம்பந்தமான பேச்சுக்களிலும் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

## ஹம்பாந்தோட்டையில் நவீன வைத்தியசாலை

### 700 கோடி ரூபா செலவில்

**வைத்தியசாலையை நிர்மாணிக்க நெதர்லாந்து அரசு உதவிகளை வழங்கவுள்ளது.**

கொழும்பு,ஜூன் 8
700 கோடி ரூபா செலவில் அதிநவீன வசதிகளைக் கொண்ட வைத்தியசாலை ஹம்பாந்தோட்டையில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

சுகாதார அமைச்சின் திட்டத்தின்கீழ் தற்போது அதன் அடிப்படைச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வைத்தியசாலையை நிர்மாணிக்க நெதர்லாந்து அரசு உதவிகளை வழங்கவுள்ளது.

ஹம்பாந்தோட்டை நகரத் திட்டத்துக்கு அமைய நிர்வாகக் கட்டடத் தொகுதி மற்றும் சர்வதேச மாநாட்டு மண்டபம் போன்ற பிரதானமான அபிவிருத்தித் திட்டங்களை அண்டியதாக வைத்தியசாலை நிறுவப்படவுள்ளது.

இந்த வைத்தியசாலையை நிர்மாணிக்க 25 ஏக்கர் நிலப்பரப்பு ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நவீனமய வைத்தியசாலை, 850 கட்டில்கள், நவீன சத்திரசிகிச்சைக் கூடம், ஆய்வுகூடம், நவீன வசதிகளுடனான இரத்த வங்கி, திடீர் விபத்துக்களுக்கான விடுதி, அவசர சிகிச்சைப் பிரிவு எனப் பல நவீன வசதிகளுடன் நிர்மாணிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-22)



திண்மக்கழிவு முகாமைத்துவத்தை சீராக மேற்கொள்ளும் பொருட்டு கழிவகற்றும் இயந்திரங்களை உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது. ஏறாவூர் நகரசபைத் தவிசாளர் அலி சாஹிர் மௌலானாவிடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ டிரெக்டரின் சாவியை கையளிக்கிறார்.

## காங்கேசன்துறை சிமெந்து ஆலை இயங்கினால் சூழலுக்குப் பாதிப்பு


### கூட்டமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 8
காங்கேசன்துறை சிமெந்து உற்பத்தித் தொழிற்சாலை மீளவும் இயக்கப்படுமானால் யாழ். மாவட்டத்தில் சுற்றாடல் பாதிப்பு ஏற்படக்கூடும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த சிமெந்து ஆலை மீளத் திறக்கப்படுவதற்கு கூட்டமைப்பு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை மீள ஆரம்பிப்பது தொடர்பாக ஆய்வொன்றை நடத்தியுள்ள இந்திய நிறுவனமொன்று , குறித்த தொழிற்சாலை மீளவும் ஆரம்பிக்கப்படுமானால் யாழ்ப்பாண மாவட்டம் கடுமையான சுற்றாடல் பாதிப்புக்கு உள்ளாகும் என்று தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு முன்னர் பிரதேச மக்களுடன் அது குறித்துக் கலந்தாலோசிக்க வேண்டியுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர், மாவைசேனாதிராசா சுட்டிக்காட்டினார் என்று 'மவ்பிம' பத்திரிகை தெரிவித்துள்ளது.



சுற்றாடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் விதமாக காங்கேசன்துறை சிமெந்து ஆலையை மீள ஆரம்பிப்பதற்கு அரசு முயலுமான வரை அதற்கு எதிரான சட்ட ரீதியான மற்றும் சர்வதேச ரீதியான நடவடிக்கைகளை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு மேற்கொள்ளும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-22)

## நகர்ப்புறப் பிள்ளைகள் உடற் பருமனால் பாதிப்பு

### சுகாதார அமைச்சு தகவல்



கொழும்பு,ஜூன் 8
நகர்ப் பிரதேச பாடசாலைப் பிள்ளைகளில் நூற்றுக்குப் 10 வீதமானோர் உடற்பருமனால் அவதிப்படுகின்றனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதிகரித்த எடை மற்றும் உடற் பருமனால் இலங்கையில் சுகாதார சிக்கல் ஏற்படுகிறது என்று அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

ஊட்டச்சத்து சம்பந்தப்படும் சில அட்டவணைகளில் பின்னடைவைக் காண முடிகிறது என்று அமைச்சு தெரிவித்துள்ளது. போசாக்கைப் பெரும் விலை கொடுத்தே பெறவேண்டியுள்ளது என்பதே பெரும்பாலனோரின் கருத்தாகும்.

தேசிய போசாக்கு மாதமாக இந்த ஜ"ன் மாதத்தைப் பிரகடனப்படுத்தும் நிகழ்வின் போது சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனா அதனைச் சம்பந்தப்பட்ட சுகாதாரப் பிரிவு களுக்கு தெரிவித்துள்ளார்.

''முறையான போசாக்குடனான ஆரோக்கியமான நாடு'' என்பதே இந்த போசாக்கு மாதத்தின் தொனிப்பொருளாகும் என்று அவர் கூறினார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## யார் வந்தும் பார்த்தும் பயன் ஏதும் கிடைக்காதே...

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நீண்ட கால வரலாற்றுப் பின்னணியும் கலாசாரத் தொடர்புகளும் உள்ளன. அத்தகைய நிலையில், இந்த நாட்டில் உள்ள பிரச்சினைகளை உள்நாட்டிலேயே பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும்-

அத்தகைய பேச்சுக்களுக்கு, இந்திய அரசு பூரணமான ஒத்துழைப்புகளையும் உதவிகளையும் வழங்கும். இந்திய ஆளும் காங்கிரஸ் கட்சியிடம், இதனை எமது கட்சி எடுத்துரைக்கும்-

இவ்வாறு கூறிச் சென்றிருக்கிறார்கள், அண்மையில் இலங்கைக்கு நான்கு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்றைய தினம் இந்தியா திரும்பிய பாரதீய ஜனதாக் கட்சியின் பிரதிநிதிகள்.

இதனைக் கூறுவதற்காகவா, இவர்கள் வினைக்கெட்டு இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்தார்கள் என்ற வினா தமிழ் மக்கள் தரப்பிலிருந்து தன்பாட்டிலேயே எழுகிறது.

அது மட்டுமன்றி, இந்தியாவின் நிலைப்பாடு இது தான் என்று கூற வைப்பதற்கு இலங்கை அரச தரப்பினால் ஒழுங்கு செய்யப்பட்டே இந்தத் தூதுக்குழு, இந்தக் குழு இங்கு வந்ததோ என்ற சந்தேகம் எழுவதும் தவிர்க்க முடியாதது ஆகும்.

இந்திய உபகண்டத்தின் அடுத்த லோக சபைக்கான பொதுத் தேர்தல் அடுத்த வருடம் 2014 இல் நடைபெற உள்ள வேளையில், பாரதீய ஜனதாக் கட்சியே அநேகமாக அரசமைக்கும் என்று காலம் முந்திய எதிர்வு கூறல்கள் வெளிவந்து கொண்டிருக்கும் வேளையில், இலங்கைக்கு விஜயம் செய்த அந்தக் கட்சியின் பிரதிநிதிகளின் கருத்து சீரணிக்கக் கூடிய ஒன்றாக இல்லை.

இலங்கை-இந்திய அரசியல் நடத்தைகளில் முழுக்க முழுக்க நல்லுறவு நிலவியதாகக் கூறுவதற்கில்லை. அவ்வாறிருந்த போதிலும் சோனியாகாந்தி, மன்மோகன்சிங், எம்.கே.நாராயணன், சிவ்சங்கர் மேனன் ஆகியோர், 2009 ஆம் ஆண்டில் பேரழிவுடன் முடிவடைந்த முள்ளிவாய்க்கால் வெற்றிக்குத் துணைபோயினர்.

இலங்கை அரச தரப்பினரின் வாக்குறுதிகளில் நம்பிக்கை வைத்து இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் எடுத்த தவறான முடிவாகவும் அது இருக்கலாம். பாரதீய ஜனதாக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான யஷ்வந் சிங்ஹ இரண்டு மாதங்களுக்கு முன்னர், சென்னையில் கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில், "ராஜபக்ஷ அரசு தமிழ் மக்களை அடக்கியாளும் கொள்கையைத் தொடர்ந்து செயற்படுத்துமானால் அது தமிழீழத்துக்கான பாதையைத் திறந்துவிடும்" - என்று தெரிவித்துப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார்.

இத்தனைக்கும் யஷ்வந் சிங்ஹ பாரதீய ஜனதாக் கட்சியின் ஒரு சாதாரண அங்கத்தவர் அல்லர். எல்.கே. அத்வானிக்கு அடுத்த வரிசையில் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவர். பி.ஜே.பியின் தலைமைப்பீடத்தின் அனுமதியின்றி அவர் இப்படியான கருத்தைத் தெரிவித்திருக்கமுடியாது. அதனால், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் பி.ஜே.பியின் கொள்கை மாற்றமாக யஷ்வந் சிங்ஹவின் கருத்து அரசியல் ஆய்வாளர்களால் கணிக்கப்பட்டதை கருத்தில் கொள்ளாமல் தவிர்க்க முடியாது.

"இந்நாட்டில் ஆட்சியாளர்களின் அடக்குமுறைகள் தொடர்ந்து வெற்றி அளிக்கப் போவதில்லை. மக்கள் எழுச்சி உண்டாகும் போது அதனைத் தடுத்து நிறுத்த முடியாது. அந்த நேரத்தில், ராஜபக்ஷவுக்கு உதவ சோனியா காந்தியோ அவரது குழுவினரோ இல்லாமல் போகலாம்." - என்றும் யஷ்வந் சிங்ஹ மிகவும் காரசாரமாகக் கருத்து வெளியிட்டிருந்தார்.

கிழக்குத் திமோரையும் தென் சூடானையும் உதாரணமாகவும் அவர் எடுத்துக்காட்டியிருந்தார். யஷ்வந் சிங்ஹவின் உரை இந்தியாவிலும் இலங்கையிலும் ஊடகங்களில் பிரதான இடத்தைப் பிடித்திருந்தது.

சோனியா தலைமையிலான ஆளும் காங்கிரஸ் அரசின் மீது, நம்பிக்கை இழந்துவந்த இலங்கைத் தமிழருக்கு, இதனால் தெம்பு ஏற்பட்டது. அடுத்த ஆண்டில் நடைபெறும் பொதுத் தேர்தலில், பி.ஜே.பி. ஆட்சிக்கு வரும் பட்சத்தில் தமக்கு விடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கை உருவானது.

ஆனால் பி.ஜே.பி. உறுப்பினர்கள் தற்பொழுது இலங்கையில் மேற்கொண்ட விஜயம், அவர்களின் சந்திப்புகள், அவர்கள் தெரிவிக்கும் கருத்துகள் தமிழ் மக்களுக்குப் பலத்த ஏமாற்றத்தை அளித்துள்ளன.

பதின்நான்காவது இந்தியப் பொதுத் தேர்தலில் பி.ஜே.பி. கூட்டணி 303 ஆசனங்களைப் பெற்று அமோக வெற்றியீட்டிய வேளை, ஈழத் தமிழர்களின் ஆதரவாளரான ஜோர்ஜ் பெர்னாண்டஸ் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டதும் இலங்கைத் தமிழருக்குப் பெரும் நம்பிக்கையை அளித்திருந்தமை ஞாபகமிருக்கலாம்.

ஆனால், பாரதீய ஜனதாக் கட்சி, அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள லோக் சபா தேர்தலில் வெற்றி பெற்றாலும், ஈழத் தமிழ் மக்களுக்குச் சேரவேண்டிய உரிமைகள் பழுதில்லாமல் கிடைப்பதற்கு உதவிடுமா என்பது சந்தேகத்துக்கு உரியதாக மாறும் போக்கே தென்படுகிறது.

இப்போதைய காங்கிரஸ் அரசும், பாரதீய ஜனதாக் கட்சி அரசும் அண்ணன் தம்பிகளாகவே அமையும்.

அதனால், தமக்குரிய உரிமைகளைப் பெறுவதற்கு ஈழத் தமிழ் மக்கள் தம் கையே தமக்குதவி என்ற நிலையில் மிகக் கடினமாக உழைக்க வேண்டிய தேவை நெருங்கி வருகிறது.

# மாகாண சபைத் தேர்தலும் இலங்கை அரசின் சூழ்ச்சியும்

ஒரு நாட்டின் அமைச்சரவை, ஒரு விடயத்தில் 'கூட்டாகப் பொறுப்பளிக்க வேண்டும்' என்பது நல்லாட்சியின் மிக முக்கிய கோட்பாடாகும். இந்நிலையில் இலங்கை அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அமைச்சர்களும் அரசின் தீர்மானங்களை ஒன்றுசேர, கூட்டாக கலந்துரையாடி, ஆராய்ந்து பொறுப்பளிக்க வேண்டும். இது அனைத்துலக நாடுகள் இலங்கை மீதான தமது நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும், உள்நாட்டு அரசியற் கோட்பாடுகளை தெளிவுபடுத்துவதற்கும் மிக இன்றியமையாததாகும்.

எதிர்வரும் நவம்பரில் பொதுநலவாய அமைப்புக்களின் உறுப்பு நாட்டுத் தலைவர்கள் ஒன்றுகூடும் உச்சிமாநாடானது இலங்கையில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள நிலையில், வடக்கு மாகாண சபைக்கான தேர்தல்களை இவ்வாண்டு செப்ரெம்பர் மாதம் நடத்துவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருந்தார். இதனை அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் நடத்தப்பட்ட ஊடக மாநாட்டில் ஊடக அமைச்சரும் உறுதிப்படுத்தியிருந்தார்.

இந்த அறிவிப்பு மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர், இலங்கை அரசானது பல்வேறு நாடுகளின் அரசியல் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காக வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவுள்ளதாக, அனைத்துலக நாடுகளின் தலைவர்களிடம் வாக்குறுதி வழங்கியிருந்ததாக அரசியல் நோக்கர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் மற்றும் மீளிணக்கப்பாட்டு முயற்சிகள் மந்தகதியில் மேற்கொள்ளப்படுவதாக குற்றம் சாட்டப்பட்ட நிலையில், கடந்த மார்ச் மாதம் ஜெனிவாவில் இடம்பெற்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் முன்வைக்கப்பட்ட நிலையில், பல உலக நாடுகள்,இலங்கையில் பொதுநலவாய அமைப்பின் உச்சிமாநாடு நடத்தப்பட்டால் தாம் அதனைப் புறக்கணிப்போவதாக அறிவித்திருந்தன.

இந்நிலையில்,இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஜப்பான் மற்றும் இந்தியப் பிரதமர்கள் உள்ளடங்கலான பல தலைவர்களின் அரசியல் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காக, வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவுள்ளதாக அவர்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தார். இதேபோன்று இலங்கையில் மீளிணக்கப்பாடு மற்றும் மனித உரிமைச் செயற்பாடுகள் என்பன மந்த கதியில் உள்ளதால் அங்கு நடைபெறத் தீர்மானிக்கப்பட்டுள்ள பொதுநலவாய அமைப்பின் உச்சிமாநாட்டை தான் புறக்கணிப்பதாக கனடா அறிவித்திருந்தது. இவ்வாறான அரசியல்ஆதரவைப்பெற்றுக்கொள்வதைத் தவிர, இலங்கை அரசு தனக்கான கொள்கை வகுப்பைத் தயாரிப்பதில் வடக்கு மாகாண சபையும் அதற்கான தேர்தலும் முக்கியம் என்பதை தட்டிக் கழிக்க முடியாது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை தனது உள்நாட்டுப் போரை நிறைவுக்கு கொண்டு வந்தநிலையில், போர் இடம்பெற்ற வலயங்களில் இயல்புநிலையைத் திரும்பக் கொண்டுவருதல் என்பது நாட்டில் வெற்றிகரமான நிலையான சமாதானத்தை எட்டுவதற்கு மிக இன்றியமையாததாக உள்ளது. இலங்கையின் பலம் என்பது அதன் ஜனநாயக ஆட்சி முறைமையாகும். இந்த ஆட்சி முறைமையில் பல்வேறு பலவீனங்கள் காணப்பட்ட போதிலும் இதுவே இலங்கைக்கு பலத்தைக் கொடுக்கிறது.

இந்நிலையில் போரால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்கள் பயன்பெறுவதற்கு இலங்கை தனது ஜனநாயக ஆட்சி முறையை விரிவுபடுத்த வேண்டும். ஜனநாயகத்தை மீளவும் கட்டியெழுப்புவதானது, இலங்கையின் போருக்குப் பின்னரான மீளிணக்கப்பாட்டு முயற்சிக்கு மிகத் தேவையான முக்கிய கருவியாகும்.

கிழக்கு மாகாணம் உள்ளடங்கலாக நாட்டிலுள்ள அனைத்து மாகாணங்களுக்கும் தனித் தனியான மாகாண சபைகள் உள்ள போதிலும், தமிழ் மக்கள் வாழும் வடக்கு மாகாணத்தில் மாகாண சபை ஒன்று உருவாக்கப்படவில்லை. வடக்கு மாகாணத்தில், ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல், உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் போன்றன நடத்தப்பட்ட அதேவேளையில், இங்கு வடக்கு மாகாண சபைத் தேர்தல்களை நடத்தாமைக்கு எந்தவொரு ஏற்றுக் கொள்ளக் கூடிய நியாயமான காரணத்தையும் இலங்கை அரசு முன்வைக்க முடியாது. இந்தத் தேர்தல்கள் இரண்டரை மாத கால முன்னறிவுப்புடன் மேற்கொள்ளப்பட முடியும் என தேர்தல் ஆணையகம் அறிவித்துள்ள நிலையில் இதனை நடத்தாமைக்கான நம்பகமான காரணங்கள் எதனையும் காண்பிக்க முடியாது.

வரலாறு மற்றும் பூகோள ரீதியான தொடர்பு தவிர, சீனாவானது ஜப்பானுக்கு முக்கியம் வாய்ந்தது போன்று இந்தியாவானது இலங்கையின் எதிர்காலப் பொருளாதார அபிவிருத்திக்கு மிகமுக்கியமானதாகும். இந்தியப் பொருளாதாரமானது உயர் வளர்ச்சி விகிதத்தில் தொடர்ந்தும் உள்ளநிலையில், இலங்கையானது பிராந்திய பொருளாதார வளர்ச்சி இயந்திரத்துடன் ஒருங்கிணைய வேண்டும். இந்திய - இலங்கை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர், இலங்கையின் அரசமைப்புடன் 13வது திருத்தச் சட்டம் இணைக்கப்பட்டது. இது தற்போதும் இந்தியாவின் இலங்கை தொடர்பான கோட்பாட்டின் முக்கிய மைல்கல்லாக காணப்படுகிறது.

இந்திய- இலங்கை உடன்படிக்கையின் பிரகாரம், இலங்கையில் செயற்பட்ட ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.பி.டி.பி போன்ற தமிழ் ஆயுதக் குழுக்கள் 1987இல் நிராயுதபாணிகளாக்கப்பட்டு, அரசியல் நீரோட்டத்துடன் கலந்துகொண்டனர். இந்த உடன்பாடானது தமிழீழ விடுதலைப் புலிகளைத் தனிமைப்படுத்தி, பலவீனப்படுத்த உதவியது.

மேற்படி தமிழ் ஆயுதக் குழுக்கள் தமது ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு, ஜனநாயக நீரோட்டத்துடன் கலந்து கொண்டதை அடிப்படையாகக் கொண்டு மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. ஆனால் இவர்கள் தமது அரசியலை நடத்துவதற்கு இவர்களுக்கான வடக்கு மாகாண சபை இன்னமும் உருவாக்கப்படவில்லை. வடக்கு மாகாணத்தின் ஆளுநராக தற்போது இலங்கை இராணுவத்தின் முன்னாள் அதிகாரி ஒருவர் செயற்பட்டு வருகிறார். இதனால் வடக்கு மாகாண சபைக்குப் பதிலாக இலங்கை உச்ச நீதிமன்றம் கூட தனது கட்டளையை வழங்க முடியாதுள்ளது.

இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவானது, நாட்டில் வாழும் சிறுபான்மை இனங்களின் குறிப்பாக வடக்கில் வாழும் தமிழ் சமூகத்தின் அரசியல் அவாக்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என பரிந்துரை செய்தது. அரசியல் அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும் என இந்த ஆணைக்குழுவானது பரிந்துரைத்தது. இலங்கை அரசிலிருந்து தமிழ் மக்கள் திட்டமிடப்பட்ட வகையில் ஓரங்கட்டப்படுகின்றனர் என்பது தெளிவான விடயமாகும்.

இலங்கையின் சொந்த நலனுக்காக தமிழ் மக்கள் மேலும் மேலும் ஓரங்கட்டப்படுகின்றனர். இலங்கையில் 30 ஆண்டுகளாகத் தொடர்ந்து இடம்பெற்ற உள்நாட்டு போரின் போது தமிழ் மக்களுக்கு எதிராக அரசியல் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டதற்கு நாம் சாட்சியமாக உள்ளோம்.

இலங்கையை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர்சம்பிக்க ரணவக்க மற்றும்தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான விமல் வீரவன்ச ஆகிய அரச அமைச்சர்கள் வெளிப்படையாக 13வது திருத்தச்சட்டம் மற்றும் வடக்கு மாகாண சபைத் தேர்தலின் ஊடாக வடக்கு மாகாணத்தில் ஜனநாயகத்தை நிலைநாட்டுதல் போன்றவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

ஒரு நாட்டின் அமைச்சரவை, ஒரு விடயத்தில் 'கூட்டாகப் பொறுப்பளிக்க வேண்டும்' என்பது நல்லாட்சியின் மிக முக்கிய கோட்பாடாகும். இந்நிலையில் இலங்கை அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அமைச்சர்களும் அரசின் தீர்மானங்களை ஒருசேர, கூட்டாக கலந்துரையாடி, ஆராய்ந்து பொறுப்பளிக்க வேண்டும். இது அனைத்துலக நாடுகள் இலங்கை மீதான தமது நம்பகத்தை உறுதிப்படுத்துவதற்கும், உள்நாட்டு அரசியற் கோட்பாடுகளை தெளிவுபடுத்துவதற்கும் மிக இன்றியமையாததாகும்.

ஜனநாயக ஆட்சி நடைபெறும் நாடொன்றில் பல்வேறு அபிப்பிராயங்கள் முன்வைக்கப்பட வேண்டும். இதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆனால் இலங்கையை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியானது தனது அமைச்சரவை அமைச்சர்கள் மத்தியில் முக்கிய தீர்மானம் தொடர்பாக கலந்துரையாடி இவ்வாறான ஒரு பொதுத் தீர்வை எட்டவேண்டும். இவ்வாறு தனிப்பட்ட ரீதியில் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படும் போது அமைச்சர்கள் தமது வாதப் பிரதிவாதங்களை முன்வைக்க முடியும்.

ஆனால் இதைவிடுத்து, பொதுக் கூட்டங்களைக் கூட்டி ஊடகங்கள் ஊடாக அமைச்சர்கள் அரசின் தீர்மானங்களுக்கு எதிராக கருத்துக்களை முன்வைப்பதானது நல்லாட்சி நிலவும் நாடொன்றுக்கு சாதகமாக இருக்காது. இந்நிலையில், வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்துவதாக அரசு அறிவித்துள்ள நிலையில், அமைச்சர்கள் இதற்கான தமது எதிர்ப்பை வெளிப்படையாகத் தெரிவிக்கக் கூடாது. இந்தத் தேர்தலில் ஆளும் கூட்டமைப்பானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் தோல்வியைச் சந்திக்கும் என்பது உறுதியாக்கப்பட்டுள்ளது.

இலங்கையானது தனது சொந்த நலன் கருதி சிறுபான்மை சமூகங்களுக்கிடையில் போருக்குப் பின்னான மீளிணக்கப்பாட்டு முயற்சிகளை மேற்கொள்வதற்காக, போரால் பாதிக்கப்பட்ட வடக்கில் மாகாணசபைத் தேர்தல்களை நடத்தி, அங்கு ஜனநாயக ஆட்சி நடைபெறுவதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.


முன்னாள் போர் வலயமாக விளங்கிய கிழக்கு உட்பட நாட்டின் ஏனைய மாகாணங்களில் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டு அரசியல் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதைப் போன்று போரால் பாதிக்கப்பட்ட வடக்கிலும் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டு மாகாண சபை உருவாக்கப்பட வேண்டும். இது அரசமைப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயம் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதே.

*(நன்றி -புதினப்பலகை)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமலி, மன்னார்





## வங்காலை படுகொலை 7 ஆம் வருடம் நிறைவு

# ‘செங்கோலற்ற தேசத்தில் தான் இருக்கிறது வங்காலையும்’

இலங்கை ஜனாதிபதி கூறுபவை பற்றி பெரும்பாலும் நாங்கள் செவிமடுப்பதில்லை. ஆனாலும் ஒரேயொரு விடயத்தை மிகவும் உறுதியாக நாங்கள் கடைப்பிடிக்கின்றோம். அதுதான் ஜனாதிபதி மேடைகளில் அடிக்கடி கூறுகின்ற ''நடந்தவற்றை மறத்தல்'' தமிழ் மக்களுக்கு நேர்ந்த அவலத்தை நாம் எமக்கு வசதியாக மறந்து விடுகின்றோம். அவ்வாறு எம் சிந்தனைக்குள் மறந்து போனவற்றுள் ஒன்றுதான் வங்காலைப் படுகொலை. இந்தக் கொடூரம் நடந்து இன்றுடன் 7 வருடங்கள் நிறைவு பெறுகின்றன. இலங்கையின் வட பகுதியில் உள்ள மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ளது வங்காலை என்னும் மீன்பிடிக் கிராமம். இந்தக் கிராம மக்கள் மீன்பிடியிலும், விவசாயத்திலும் பெருமளவு தங்கி வாழ்பவர்கள். இந்தக் கிராமத்தினுள் அடங்கியுள்ளதே தோமாஸ்புரி என்ற சிறு கிராமம். அங்கு ஓர் இரவில் நடந்த மிலேச்சத்தனமான படுகொலையால் அந்தக் கிராமமே இன்றும் அதிர்ச்சியில் உறைந்து போய் இருக்கிறது. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் வெட்டிக் கொல்லப்பட்ட பின் தூக்கில் இடப்பட்டார்கள்.

இவர்கள் 6 மாதங்களுக்கு முன்னர்தான் இந்தியாவில் இருந்து திரும்பி வந்து இந்தப் பகுதியில் குடியேறி இருந்தார்கள். மூர்த்தி மாட்டீன், மேரி மாட்டீன் அவர்களின் 6, 8 வயது குழந்தைகளான நிலுக்ஷன், லக்சிகா ஆகியோரே கொல்லப்பட்டிருந்தனர். தந்தையும் குழந்தைகளும் கொடூரமான முறையில் உளியால் வெட்டப்பட்டு கொல்லப்பட்ட பின்னர் தனித்தனியே கயிறுகளில் தொங்கவிடப்பட்டிருந்தனர். மனித குலமே தலைகுனியத் தக்கவகையில் இந்தப் படுகொலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

கொடூரம் இடம் பெற்றிருந்த தோமாஸ்புரி கிராமத்தின் இரு எல்லைகளிலும் சீருடையினரின் முகாம்கள் அமைந்திருந்தன. இந்தச் சூழ்நிலையிலேயே சம்பவம் நிகழ்ந்திருந்தது. சம்பவம் பல கேள்விகளை எழுப்பியிருந்தது. தந்தையையும் பிள்ளைகளையும் உளியால் வெட்டி தொங்கவிட்டவர்கள் தாயை இரத்த வெள்ளத்தில் நிலத்தில் வீழ்த்தியிருந்தார்கள். அதன் மூலம் மறைமுகமான செய்தி ஒன்றையும்விடுத்திருந்தார்கள். இந்த பயங்கரம் தொடரலாம் என்பதே அது.

இறுதிப் போர் மன்னாரில் தொடங்குவதற்கு சில காலத்துக்கு முன்னரே இது நிகழ்ந்திருந்தது. நிச்சயமாக முள்ளிவாய்க்கால் கொடூரங்களுக்கான ஒரு கொடூரமான ஒத்திகையே இந்தச் சம்பவம்.

வங்காலை மண் 1984 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஈழப் போராளிகளை உயிராக நேசித்த வண.பிதா அருட்திரு வஸ்தியான் அடிகளாரை ஆலய வளாகத்தினுள் வைத்து இழந்திருந்தது. தான் கொல்லப்படுகின்ற சூழ்நிலையில்கூட சில போராளிகளைக் காப்பாற்றியிருந்தார் அவர்.

ஈழப் போராட்டத்தில் மன்னாரில் வங்காலை மண்ணுக்கு நீண்ட வரலாறு உண்டு. போராட்ட ஆரம்ப காலங்களில் தென்னிந்தியாவின் ஊடாக கொண்டு வரப்படும் ஆயுதங்கள் வங்காலை ஊடாகவே ஏனைய பிரதேசங்களுக்குக் கொண்டு செல்லப்படும்.

நிச்சயமாக இவ்வாறான மிலேச்சத்தனமான கொலைகளில் ஈடுபடுவோர் நாகரிக உலகில் சுதந்திரமாக வாழ்வதற்கு எந்த தகுதியும் அற்றவர்கள். ஆனால் இலங்கையில் அவர்கள் சுதந்திரமாக வாழலாம். ஏனென்றால் ''செங்கோலற்ற தேசத்தில் தான் இருக்கிறது வங்காலையும்.''

இறுதிப் போர் மன்னாரில் தொடங்குவதற்கு சில காலத்துக்கு முன்னரே இது நிகழ்ந்திருந்தது. நிச்சயமாக முள்ளிவாய்க்கால் கொடூரங்களுக்கான கொடூரமான ஒத்திகையே இந்தச் சம்பவம்.

# இவர்களும் தோற்றிருக்கிறார்கள்

ஒவ்வொரு துறையிலும் உச்சாணிக் கொம்பை எட்டிய மேதைகளை பொதுவாக நாம் அதிசயப்பிறவிகள் என நினைக்கிறோம். சகல அம்சங்களும் சரிவர அமையப்பெற்று அதிர்ஷ்டமும் ஒத்துழைத்ததால் மட்டுமே அவர்கள் அந்தந்த துறைகளில் சிகரங்களைத் தொட முடிந்ததென்றும் எண்ணுகிறோம். ஆனால் அவர்களும் அந்த இடத்தை அடையும் முன் எப்படியெல்லாம் தோற்றிருக்கிறார்கள், எள்ளிநகையாடப்பட்டு இருக்கிறார்கள் என்பதற்கு இதோ சில தகவல்கள்–

★ இசை மேதை என்று ஒருமனதாக உலகம் இன்றும் பாராட்டும் பீதோவன் தன் இளமையில் வயலினைச் சரியாகக் கையாள முடியாதவராக இருந்தார். சொல்லிக் கொடுத்தவற்றை சரியாக வாசிப்பதை விட்டு தன் சொந்த முறையில் வாசிப்பதை வாடிக்கையாகக் கொண்டு இருந்த அவரை அவருடைய ஆசிரியர் 'உருப்படாத கேஸ்' என்று கணித்திருந்தார்.

★ உலகில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கண்டுபிடிப்புகளைச் செய்த ஒரே விஞ்ஞானியான தோமஸ் அல்வா எடிசனுடைய ஆசிரியர்கள் எதையும் கற்றுக் கொள்ள இயலாத முட்டாள் என்று எடிசனுக்குப் பட்டம் சூட்டி இருந்தனர்.

★ தன் கற்பனைத் திறத்தால் டிஸ்னி லேண்ட்டை உருவாக்கி கோடீசுவரராகி இன்றளவும் பேசப்படும் வோல்ட் டிஸ்னி ஆரம்பத்தில் ஒரு பத்திரிகையில் வேலை செய்து கொண்டு இருந்தார். புதுமையாக எதையும் செய்யத் தெரியாதவர் என்று அவரை அந்தப் பத்திரிகை ஆசிரியர் வேலையை விட்டு நீக்கி விட்டார். அதன் பிறகு வோல்ட் டிஸ்னி பல வியாபாரங்கள் செய்து அவற்றிலும் பெரிய நஷ்டத்தை அடைந்தார்.

★ உலகப் புகழ்பெற்ற ரஷிய எழுத்தாளரான லியோ டால்ஸ்டாய் கல்லூரிப் படிப்பில் தோல்வி அடைந்தவர். ''படிக்க முடியாத படிக்க விரும்பாத'' மாணவன் என்று பெயரெடுத்தவர்.

★ இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற விஞ்ஞானியும், உலக விஞ்ஞானம் செல்லும் பாதையை முழுவதுமாக மாற்றி அமைத்தவருமான ஐன்ஸ்டீன் நான்கு வயது வரை [illegible] ஆசிரியர் அவரை ''மிக மந்தமானவன். மற்றவர்களுடன் நன்றாக கலந்து பழகாதவன். எப்போதும் முட்டாள்தனமான கற்பனை உலகில் இருப்பவன்'' என்று கூறியிருந்தார். ஜூரிச் பொலிடெக்னிக் பள்ளியில் படிக்க ஐன்ஸ்டீனிற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

★ இங்கிலாந்தின் பிரதமராகவும், இரண்டாம் உலகப் போரில் உலக சரித்திரத்தில் முக்கியபங்கு வகித்தவருமான வின்ஸ்டன் சேர்ச்சில் தலைசிறந்த பேச்சாளரும் கூட. அவர் ஆறாம் வகுப்பில் தோற்றவர். தொடர்ந்து அரசியலில் இருந்தாலும் தன் 62 வயதாகும் வரை அவரால் பிரதமராக முடியவில்லை.

★ ரிச்சர்ட் பாக் என்ற பிரபல நாவலாசிரியர் ''ஜோனாதன் லிவிங்ஸ்டோன்'' என்ற 10000 சொற்கள் கொண்ட நாவல் ஒன்ற எழுதினார். 18 பிரபல பிரசுரங்கள் அவர் கதையை பிரசுரிக்க மறுத்து நிராகரித்தன. கடைசியாக மேக்மில்லன் கம்பெனி 1970ல் பிரசுரம் செய்தது. 1975க்குள் அமெரிக்காவில் மட்டும் ஏழு மில்லியன் பிரதிகள் விற்றுத் தீர்ந்த அந்த புத்தகம் இன்றும் மிகப்பிரபலமாக உள்ளது.

இப்படிச் சகல துறைகளிலும் பெரும் சாதனை படைத்தவர்கள் தோல்விகளையும், கேவலமான விமரிசனங்களையும் சந்தித்திருக்கிறார்கள். வெற்றியின் பாதை பூக்களால் நிரப்பப்பட்டதல்ல. படிப்படியாக தோல்விகளையும், தளர்வடைய வைக்கும் விமரிசனங்களையும் சந்திக்கும் போது இவர்களை நினைவுபடுத்திக் கொண்டு உற்சாகமாக தொடருங்கள். நீங்களும் சரித்திரத்தில் இடம் பெறக் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஒழுக்கநெறிகள் மூலம் ஊடகத்துறைக்கு கெடுபிடிகள்

## தேசத்துக்கு எதிராகவும் வாய்திறக்க முடியாது

கொழும்பு, ஜூன் 8

ஊடகங்களுக்கான ஒழுக்க நெறிக்கோவை ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கான முயற்சியில் அரசு இறங்கியிருப்பதாக தெரிய வருகின்றது. இந்த நெறிக் கோவையானது சகல அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களை உள்ளடக்குவதாக இருக்கும்.

இந்த நெறிக்கோவையில் ஊடகங்கள் பின்பற்ற வேண்டிய பல்வேறு வழிகாட்டல்கள் இருக்கும் என்றும் குறிப்பாக அரசின் வெளிநாடுகளுடனான உறவுகளைப் பாதிக்கும் விதத்தில் செய்திகள் வெளியிடப்படுவதைத் தடுக்கும் சில விதிகள் அமையக்கூடும் என்றும் கருதப்படுகின்றது.

ஊடகம் மற்றும் தகவல் அமைச்சினால் தயாரிக்கப்பட்டுவரும் மேற்படி ஒழுக்க விதிகளில் தடை செய்யப்படும் தகவல்களில் பின்வரும் அம்சங்கள் இடம் பெற்றிருக்கும் என்று தெரிகிறது.

(அ) பொதுமக்களின் எதிர்பார்ப்புகளை, நாட்டின் தார்மீகம் பாதிக்கக்கூடிய செய்திகள் அல்லது பொதுமக்களின் இரசனை உணர்வை அல்லது பாதிக்கும் விதத்தில் உள்ள எதனையும் பிரசுரிக்கலாகாது.

(ஆ) வெளிநாட்டு உறவுகளைப் பாதிக்கும் விமர்சனங்களைக் கொண்ட எதனையும் பிரசுரிக்கலாகாது.

(இ) சமயக்குழுக்கள் அல்லது சமூகங்கள் தொடர்பான அவதூறான குறிப்புக்கள் அல்லது இனமுரண்பாட்டை வளர்க்கும் அல்லது சமய மற்றும் இன அமைதியைக் குலைக்கும் எதனையும் பிரசுரிக்கலாகாது.

(ஈ) ஆபாசமான, அவமரியாதையான வேண்டுமென்றே பொய்யான அல்லது மறைமுக அவதூறு மற்றும் அரை உண்மைகள் அல்லது வேண்டுமென்று தவிர்த்துவிடுவது போன்றவை.

(உ) பொதுமக்களை தவறாக வழிநடத்தக்கூடிய தகவல்கள்.

(ஊ) வன்செயலைத் தூண்டக்கூடிய அல்லது ஊக்கமளிக்கக்கூடிய அல்லது சட்ட ஒழுங்கை பாதிக்கக்கூடிய அல்லது தேசத்துக்கு எதிரான போக்குகளை ஊக்குவிக்கும் தகவல்கள்.

(எ) நீதிமன்றத்தை அவமதிக்கும் விடயங்கள்.

(ஏ) நிறைவேற்றுத்துறை, நீதித்துறை மற்றும் சட்டவாக்கத்துறைகளின் கண்ணியத்தை பாதிக்கும் விடயங்கள்.

(ஐ) எந்த ஒரு தனிப்பட்டவரை அல்லது ஆள்களின் குழுவை இனம், மொழி, அல்லது சமய அல்லது அவ்வாறான மக்கள் பிரிவை விமர்சித்து தூஷித்தல் அல்லது இழிவுபடுத்தல்.

(ஒ) பொதுமக்களின் கரிசனையுடன் நேரடித் தொடர்பில்லாத ஒரு நபரின் குடும்ப வாழ்க்கை, நிதிநிலைத் தகவல்கள், இனம், சாதி, சமயம், பால்நிலைமூலம், உடல் அல்லது மனநோய் அல்லது இயலாமை மற்றும் ஒருவரின் வீடு அல்லது குடும்பம் மற்றும் மருத்துவமனைகளில் உள்ள தனிப்பட்டவர்கள்.

(ஓ) மூட நம்பிக்கையை அல்லது கண்மூடித்தனமான நம்பிக்கைகளை ஊக்குவிக்கும் விடயங்கள்.

(ஔ) கொடுமை, போதைவஸ்து துஷ்பிரயோகம், மிருகத்தன மான துஷ்பியல், பாலியல் காமக் கிளர்ச்சி மற்றும் அசிங்கம் போன்றவற்றை ஊக்குவிப்பது.

(ஃ) மற்றும் ஏழைகளை இழிவுபடுத்தல் போன்றவை.

விளம்பரங்களுக்கும் ஒழுக்க நெறிகள் பொருந்தும்.

ஊடகம் மற்றும் தகவல் அமைச்சின் செயலாளர் டாக்டர் சாரித்த ஹேராத் இந்த ஊடக ஒழுக்க நெறிகளின் நோக்கம் குறித்து தெரிவிக்கையில், இதில் இரண்டு அம்சங்கள் ஊடகங்களை கட்டுப்படுத்துவதாக இருக்கின்றன என்றார். அவை ஒழுக்கம் மற்றும் சட்டம் என்பவை என்றார் அவர்.

நாம் ஒருபோதும் ஊடகங்களைக் கட்டுப்படுத்தவோ அல்லது அவர்களுக்கு வழிகாட்டவோ நினைத்ததில்லை. ஆனால் சமீப காலத்தில் ஊடகத்துறையில் உருவாகியுள்ள சம்பவங்கள் ஊடகவியலாளர்களுக்கும் ஊடகத்துறைக்கும் ஒழுக்க நெறிகள் அவசியமாகத் தேவைப்படுகின்றன என்பதை உணர்த்தியுள்ளன என்றார் ஹேராத். ஒழுக்க நெறிக் கோவையானது சகல பத்திரிகையாளர்கள், ஊடக நிறுவனங்கள் மற்றும் விளம்பரதாரர்களையும் உள்ளடக்குவதாய் இருக்கும் என்றார்.

இனங்கள், சாதிகள், நிறங்கள், பிறப்பு மற்றும் தேசியம் தொடர்பாக இழிவாகக் குறிப்பிடும் எந்த ஒரு விளம்பரமும் அனுமதிக்கப்படமாட்டாது. குற்றம் செய்யத் தூண்டுதல், குழப்பம் விளைவித்தல், வன்செயல், சட்டத்தை மீறுதல் மற்றும் எந்த வகையிலும் வன்செயலை அல்லது இழிவான செயலைப் பாராட்டுவது மற்றும் பெண்கள், சிறுவர்கள், வலுவிழந்தவர்களை காட்சிப்படுத்துவது அனுமதிக்கப்படமாட்டாது.

இந்த ஊடகத்துறை ஒழுக்க நெறிகளில் மொத்தம் 66 பிரிவுகள் இருப்பதாகவும், அவைகள் விளம்பர முகவர்கள், விளம்பரத் தயாரிப்பாளர்கள் ஊடகத்துறையினர் மற்றும் ஊடகவியலாளர்கள் போன்றோரால் பின்பற்றப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படும் என்றும் தெரிகின்றது. (ப)

### கோப்பாய் செயலகத்தில் நடமாடும் சேவை

அச்சுவேலி, ஜூன் 8

தேசிய அடையாள அட்டை பெறுவதற் கான நடமாடும் சேவை இன்று சனிக்கிழமை கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

"அடையாள அட்டைபெறுவதற்கான போட்டோ, பிறப்புச் சான்றிதழ் மற்றும் திருமணச் சான்றிதழ் மற்றும் சகலதும் இலவசமாக வழங் கப்படவிருப்பதால் உரிய நேரத்துக்குச் சமுகம் தந்து நடமாடும் சேவையைப் பயன்படுத்துமாறு வலி.கிழக்கு பிரதேச செய லர் எம்.பிரதீபன் அறிவித்துள்ளார். (ஒ-11)

### முத்தமிழ் விழா

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் முத்தமிழ் விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாசாலை மண்டபத்தில் க.பிரகாசினி தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வுக்கு முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, வலிகாம கல்வி வலய தமிழ் உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. ராதாவும் கலந்து கொள்வர். (ந)

### அறிமுறைப் பரீட்சை

வட இலங்கை சங்கீத சபையின் அறிமுறைப் பரீட்சை இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் அகில இலங்கை ரீதியாக நடைபெறவுள்ளது. (ஒ-14)

### அழைக்காதவர்கள் தொடர்பு கொள்ளவும்

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் 2013 ஆம் ஆண்டு மாணவர்களை அனுமதிக்கும் நேர்முகப்ப ரீட்சையில் ஆரம்பக் கல்விப் பாட நெறிக்கு விண்ணப்பித்து இதுவரை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்கள் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதியுடன் 024-2222272 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

### 'சத்சங்கம்' நாளை

உரும்பிராய் இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தில் 'சத்சங்கம்' நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணி வரை நடைபெறும்.

ஆன்மிக அறிவுரைகளை சுவாமி ஆத்மகனானந்தஜி மகராஜ் வழங்கவுள்ளார்.

நிகழ்வில் சகலரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-11)



தலைமைத்துவப் பயிற்சி பெற யாழ். மத்திய கல்லூரிக்கு வருகை தந்த கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவ தலைவர் அணியினர் உதயன் பணிமனைக்கும் வந்து அலுவலக நடவடிக்கைகளை அவதானித்தனர். (ஒ)

### பரிசளிப்பு விழா

ஏழாலை மேற்கு சைவ சன் மார்க்க வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அதிபர் செல்வி. பிரதா நவரத்தினம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி ச.அமிர்தலிங்கமும் சிறப்பு விருந்தினராக சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் திருமதி சியாமளா முகுந்தனும் கலந்து கொள்வர். ஆசியுரையை சுன்னாகம் 'கதிரமலைச் சிவன் கோவில் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சர்வேஸ்வ ஸ்ரீகாந்தக் குருக்கள் வழங்கவுள்ளார். (ந-86)

## நாளைய வெளியீடுகள்

ஆசிரியர் ஆ.வடிவேலு எழுதிய திருக்குறள் ஆய்வுரை நூல் வெளியீட்டு விழா பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை ம்ண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை அகில இலங்கை திருவள்ளுவர் கோட்ட தலைவர் சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜா குருக்கள் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வட மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் ச.சத்தியசீலன் தம்பதியினர் கலந்து கொள்வர். நூல் ஆய்வுரையை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா நிகழ்த்துவார். (ந-122)

★★★

காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் மாணவர் மன்றத்தினால் மாதாந்தம் வெளியிடப்படவுள்ள கல்வி கலை இலக்கிய இதழான 'புதிய காலைக் கதிர்' சஞ்சிகையின் முதலாவது இதழின் வெளியீட்டு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் பிரதான மண்டபத்தில் மாலை 4மணிக்கு செல்வி தி.திலீனா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வாழ்த்துரையை 'தாயகம்' சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் க.தணிகாசலமும், சஞ்சிகைக்கான அறிமுக உரையை நிகேஸ்சும் ஏற்புரையை சஞ்சிகையின் ஆசிரியர் ஜெ.நிவர்சன் வழங்குவார். (ந)

★★★

சிறுவர் கல்வி மேம்பாட்டை ஊக்குவிக்க 'மெய்நெறி 30 அறநெறி 60', சிறுவர் உரிமைகளை உறுதிப்படுத்துவோம், முன்பள்ளி கற்பித்தல் நுட்பம் ஆகிய இறுவட்டுக்களும், 'உத்தமன் கதைகள்' எனும் சிறுவர் வாசிப்பு நூலும் வெளியிடப்படவுள்ளன.

இந்த வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும். (ந)

### அங்குரார்ப்பண நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 8

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் பட்ட மேற் கல்வி டிப்ளோமா 2013/2014 புதிய ஆண்டுக்கு பதிவு செய்த ஆசிரிய மாணவர்களுக்கான அங்குரார்ப்பண நிகழ்வு திட்டமிட்டவாறு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பிராந்திய நிலையத்தில் இடம்பெறவுள்ளது. இதில் இடைநிலை, மூன்றாம் நிலைக் கல்வித் துறைத் தலைவர் ரஞ்சன் ஜொன்சல்கோரல கலந்து கொள்ளவுள்ளதால் அனைத்து ஆசிரிய மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலைய இணைப்பாளர் கேட்டுள்ளார். (த-400)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 8

பருத்தித்துறை வடமராட்சி இந்து ஆரம்பப் பாடசாலை யில் அபிவிருத்திச் சங்கமும், பழைய மாணவர் சங்கமும் நாளை ஞாயிற்றுக்கிழமை அதிபர் த.ரவீந்திரன் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளன.

அன்றைய தினம் காலை 9 மணிக்கு பாடசாலை அபி விருத்திச் சங்கமும், முற்பகல் 11 மணிக்கு பழைய மாண வர் சங்கமும் அங்குரார்ப் பணம் செய்து வைக்கப்பட்டு புதிய உத்தியோகத்தர்கள் தெரிவும் இடம்பெறும். (ந-8)

### பெருந்திருவிழா

உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

பதினைந்து தினங்கள் இடம்பெறவுள்ள இந்தப் பெருந்திருவிழா வரிசையில் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. பெருந்திருவிழா நாள்களில் தினமும் மாலைவேளையில் குடாநாட்டின் பிரபல சைவப்பெரியார்களின் சமயப் பேருரைகள் இடம்பெறவுள்ளன. (ந)

### கலந்துரையாடல்

தெல்லிப்பழை, , ஜூன் 8

வலிகாமம் வடக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் வாடகை ஓட்டோ சேவையை ஒழுங்கமைத்தல், சங்கம் அமைத்தல் ஆகியவை தொடர்பான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தலைமையலுவலகத்தில் நடைபெறவுள்ளது. பிரதேசத்தில் வாடகை ஓட்டோ சேவையை நடத்தும் அனைவரும் கலந்து கொள்ளுமாறு பிரதேச சபை தவிசாளர் கேட்டுள்ளார். (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரப் பாலத்தைப் புனரமைத்து தருமாறு மாணிக்கபுரம் மக்கள் கோரிக்கை

**கொங்கிறீட் வீதிகளும் உரிய முறையில் முன் மொழியப்பட்ட திட் டத்தின் படி அமைக் கப்படவில்லையென மக்கள் கவலை.**

கிளிநொச்சி, ஜூன் 8

புதுக்குடியிருப்பு மாணிக்க புரம் கிராமத்துக்குச் செல்லும் பிரதான வீதியில் ஆபத்தான நிலையில் காணப்படும் மரப் பாலத்தினை புனரமைத்துத் தருமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த பாலம் நீண்ட காலம் புனரமைக்கப்படாமல் பழு தடைந்த நிலையில் உள்ளது. இதன் காரணமாக போக்கு வரத்து செய்வோர் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே குறித்த பாலத்தினை பாதுகாப்பாக புனரமைத்துத் தருமாறு இந்தப் பகுதி மக் கள் கோரிக்கை விடுத்துள்ள னர்.

இதேவேளை றெட்பானா வள்ளுவர்புரம், மாணிக்க புரம், தேராவில் ஆகிய கிரா மங்களுக்குச் செல்லும் பிர தான வீதியின் 1.8 கிலோ மீற்றர் நீளமான வீதி கொங் கிறீட் இட்டு புனரமைக்கப்பட்ட போதும் அது உரிய முறை யில் முன்மொழியப்பட்ட திட் டத்தின் படி இல்லையென மக்கள் கவலை வெளியிட் டுள்ளனர். (ஐ-6)

## கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு
# காலபோக நெற்செய்கையில் 132 மில்லியன் ரூபா நட்டம்

கிளிநொச்சி, ஜூன் 8

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஆண்டு நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக சுமார் 132 மில்லியன் ரூபா பெறு மதியான நெற்செய்கை அழி வடைந்துள்ளது என மதிப் பிடப்பட்டுள்ளது.

இந்த மதிப்பீடு கிளிநொச்சி மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்தினால் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த மதிப்பீட்டின் படி கடந்த வருடம் கிளிநொச்சி மாவட் டத்தின் கீழ் உள்ள 50 ஆயி ரத்து 193 ஏக்கர் நிலத்தில் 15 ஆயிரத்து 564 குடும்பங்கள் காலபோக செய்கையை மேற்கொண்டிருந்தன.

இதில் 8 ஆயிரத்து 516 குடும் பங்களின் சுமார் 27 ஆயி ரத்து 851 ஏக்கர் நெற் செய்கை முற்றாக அழிந் துள்ளது.

இதன் அழிவு மதிப்பீடு 13 கோடியே 20 லட்சத்து 12 ஆயிரத்து 100 ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. அதா வது கிட்டத்தட்ட 132 மில்லி யன் ரூபா ஆகும்.

இந்த அழிவு மதிப்பீடானது இலங்கை நெல் சந்தைப் படுத்தும் சபையினுடைய விலை மதிப்பீட்டின் அடிப் படையில் மதிப்பிடப்பட்டுள் ளது.

இதில் இரணைமடுக் குளத் தின் கீழான நெற்செய்கையே அதிகமாக அழிவடைந்துள் ளது என தெரிய வந்துள்ளது. விவசாயிகளுக்கு இதுவரை யில் எந்த வகையிலும் நிவா ரண உதவிகள் வழங்கப்படாத நிலையில் அவர்கள் பல் வேறு நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளனர்.

காலபோக விவசாய நட வடிக்கைகளுக்காக கடன்களை பெற்றுக் கொண்ட விவசாயி கள் பலர் வங்கிக் கடன்களை செலுத்துவதற்கோ, அல்லது அதன்வட்டித் தொகையை செலுத்துவதற்கோ முடியாது திண்டாடி வருகின்றனர் என் பது குறிப்பிடத்தக்கது. (ஐ-6)

## முல்லை உயர்தர மாணவருக்கு தமிழ் பாட பயிற்சிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 8

முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்த வருடம் ஜி.சீ.ஈ. உயர்தர கலைப் பிரிவில் தோற்றும் மாணவர்களுக்கான தமிழ் பாட பயிற்சிப் பரீட்சை இன்று சனியும், நாளை ஞாயிறும் நடைபெறவுள்ளது.

இதில் துணுக்காய், முல்லைத் தீவு கல்வி வலய பாடசாலை களில் இருந்து விண்ணப் பித்த மாணவர்களைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட் டுள்ளது.

குறிப்பிடப்படும் பாடசாலை மாணவர்கள் அவர்களுக்கு என அறிவிக்கப்படும் பரீட்சை நிலையங்களில் இன்று காலை 9 மணிக்கு பகுதி I பரீட்சை யும் நாளை காலை 9 மணிக்கு பகுதி II பரீட்சையும் எழுத முடியும்.

**துணுக்காய் கல்வி வலயம்**

மல்லாவி மத்திய கல்லூரி, யோகபுரம் ம.வி., ஐயங்கன் குளம் அ.த.க.பாடசாலை ஆகியவற்றின் பரீட்சார்த்திகள் மல்லாவி மத்திய கல்லூரியில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். பாண்டியன்குளம் ம.வி., பாலி நகர் ம.வி. ஆகியவற்றின் பரீட்சார்த்திகள் பாலிநகர் ம.வியிலும், ஒட்டுசுட்டான் ம.வி., கற்சிலைமடு அ.த.க. பாடசாலை, மாங்குளம் ம.வி., முத்து ஐயன்கட்டு வலதுகரை ம.வி. ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்கள் ஒட்டுசுட்டான் ம.வியிலும் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

**முல்லை கல்வி வலயம்**

வித்தியானந்தாக் கல்லூரி மாணவர்கள், முள்ளியவளை தமிழ்த் தாய் தனியார் கல்வி நிலையத்திலும், வற்றாப் பளை ம.வி., குமுழமுனை ம.வி. ஆகியவற்றின் மாண வர்கள் தண்ணீரூற்று தமிழ்த் தாய் கல்வி நிலையத்திலும், முல்லைத்தீவு ம.வி., செம் மலை ம.வி. ஆகியவற்றின் மாணவர்களுக்கு முல்லைத் தீவு நெய்தல் கல்வி நிலை யத்திலும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, இரணைப் பாலை றோ.க.த.க.வித்தியா லயம் ஆகியவற்றின் மாண வர்களுக்கு கோம்பாவில், குணா கலைக் கல்லூரியிலும், உடையார்கட்டு ம.வி. மாண வர்களுக்கு சுதந்திரபுரம் லக்சுமி கல்வி நிலையத்தி லும், விசுவமடு ம.வி, பாரதி வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்களுக்கு விசுவமடு புன்னைநீராவி விண் மீன்கல்வி நிலையத்திலும் பரீட்சைகள் நடைபெறவுள்ளன. (ஐ)

## வயல்களும் வீதிகளும் எங்கள் வசமே



வவுனியா, ஜூன் 8

வவுனியாவில் பிரதான வீதிகளில் சுற் றித் திரியும் கட்டாக்காலி கால்நடைகளால், விபத்துக்களும் போக்குவரத்து சிரமமும் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா, கண்டி வீதி, மன்னார் வீதி, வேப்பங்குளம் வயல் பகுதி, நெளுக் குளம் வயல்பகுதி, பம்பை மடு வயல் பகுதி, பூந்தோட்டம் வயல் பகுதி, தவசிக் குளம், இராசேந்திரங்குளம், நொச்சி மோட்டை, ஓமந்தை பகுதிகளில் பெரு மளவான கட்டாக்காலிகள் இரவு பகலாகக் காணப்படுகின்றன.

இவை நெற்பயிர்களை நாசம் செய்வ தால் விவசாயிகள் காவல் கடமைகளில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகியுள்ளனர்.

இந்த கட்டாக்காலிகளின் உரிமையாளர் கள் அவற்றை உரிய வகையில் பரா மரிக்குமாறு வவுனியா அரச திணைக் களங்கள் அறிவுறுத்தல் வழங்கியுள்ள நிலையிலும் தொடர்ந்து அவை வீதி களிலேயே சுற்றித் திரிவதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (ஐ-402)

## பட்டினத்தார் விழா வவுனியாவில்

வவுனியா,ஜூன் 8

வவுனியா தமிழ் சங்கம் நடத்தும் 'பட்டினத்தார் விழா' நாளை ஞாயிற்றுக் கிழமை வவுனியா ஆதிவிநாயகம் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் 'பட்டினத்தார் வாழ்வில்' என்னும் தலைப்பில் மாணவர் அரங்க மும் யாழ். பல்கலை இசைத் துறை விரி வுரையாளர் பரந்தாமனின் பட்டினத்தார் பாடல்கள் இசை அரங்கமும், 'பட்டினத் தாரும் வள்ளுவரும், 'பட்டினத்தாரும் தேவார முதலிகளும், பட்டினத்தாரும் பாரதியாரும், பட்டினத்தாரும் கண்ணதாச னும்' ஆகிய தொனிப் பொருள்களில் கருத் துரைகளும் இடம் பெறும். (ஐ-400-402)

## உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் மாற்றம்

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களின் உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் இடமாற்றம் செய்யப் பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராகக் கடமையாற்றிய ஆ.க.கருணாநிதி, முல்லைத்தீவு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா மாவட்ட பதில் உதவித் தேர்தல்கள் ஆணையாளராக எம்.கபிரும், மன்னார் மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராக ஏ.தர்சபிரவினும் தேர்தல்கள் ஆணையாளரால் நியமிக் கப்பட்டுள்ளனர். (ஒ-5-421)

## வீதிச் சமிக்ஞைகள் புதிதாகப் புனரமைப்பு



வவுனியா, ஜூன் 8

வவுனியா பிரதான வீதிகளில் மங்கிப் போயுள்ள மஞ்சள் கோடுகளை மீள வர்ணம் தீட்டும் பணியில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

வவுனியாவில் மஞ்சள் கோடுகள் பல வீதிகளில் மங்கிப் போயுள்ளதால் பயணிகள் வீதி ஒழுங்குகள் கடைப்பிடிக்க முடியாது போகின்றது. இது தொடர்பில் அதிகாரிகளுக்கு சுட்டிக் காட்டப்பட்டதை அடுத்து பிரதான வீதிகளில் மஞ்சள் கோடுகளுக்கு வர்ணம் தீட்டும் பணிகள் நடைபெறுகின்றது. (ஐ-402)

# வெள்ளாங்குளத்துக்கு வழங்கப்பட்ட 'அம்புலன்ஸ்' மன்னார் வைத்தியசாலையில்

### அவசர நோயாளர்கள் சிகிச்சை பெறுவதில் சிரமம்; உடன் நடவடிக்கை எடுக்க மக்கள் கோரிக்கை

மன்னார், ஜூன் 8

மாந்தை மேற்கு வெள்ளாங்குளம் மாவட்ட வைத்தியசாலைக்கு என சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட அம்புலன்ஸ் இதுவரை குறித்த வைத்திய சாலைக்கு வழங்கப்படாது மன்னார் பொது வைத்திய சாலையில் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளதாகச் சுட்டிக் காட்டப் படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக வெள் ளாங்குளம் பொது அமைப் புக்கள் சுகாதார அமைச்சு அதி காரிகள் மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரின் கவனத்துக்கும் கொண்டு வந்துள்ளனர்.

இந்த நிலையில் பொது அமைப் புக்கள், ஆலய நிர்வாக சபை ஆகியவை இணைந்து குறித்த பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி சுகாதார அமைச்சுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தனர். அந்தக் கடிதத்தில்; சுகாதார அமைச்சினால் பல மாதங் களுக்கு முன்னர் புதிய அம்பு லன்ஸ் ஒன்று வெள்ளாங்குளம் மாவட்ட வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டது.

எனினும், மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினர் குறித்த அம் புலன்ஸை வெள்ளாங்குளம் மாவட்ட வைத்தியசாலைக்கு வழங்காது மன்னார் பொது வைத்தியசாலையில் நிறுத்தி வைத்துள்ளனர்.

இதனால் வெள்ளாங்குளம் மாவட்ட வைத்தியசாலைக்கு வரும் அவசர நோயாளர்களை வேறு வைத்தியசாலைக்கு மாற்ற முடியாத நிலையில் வெள் ளாங்குளம் மாவட்ட வைத்திய சாலை நிர்வாகம் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றது.

கணேசபுரம், சேவா கிராமம், வெள்ளாங்குளம், தேவன்பிட்டி, புதுக்காடு, பாலியாறு, மூன்றாம் பிட்டி, தேத்தாவாடி ஆகிய மீள் குடியேற்றக் கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் சிகிச்சைக்காக சென்று வருகின்றனர்.

கடந்த வருடம் வெள்ளாங்குளம் மாவட்ட வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட இரண்டு கர்ப்பிணித் தாய்மார் மேலதிக சிகிச்சைக்காக முழங் காவில் வைத்தியசாலைக்கு மாற்ற வேண்டிய நிலை ஏற் பட்டிருந்தது. ஆனால் அம்பு லன்ஸ் இல்லாததன் காரணத் தினால் முச்சக்கர வண்டியில் அழைத்துச் செல்லப்பட்ட போது இரண்டு கர்ப்பிணித் தாய்மார் களும் உயிரிழந்துள்ளதாக அந்த பிரதேச மக்கள் தெரி வித்தனர்.

எனவே பாவனை இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள அம்புலன்ஸை உரிய வைத்தியசாலை நிர் வாகத்தினரிடம் வழங்க உட னடி நடவடிக்கை எடுக்க வேண் டும் என பொது அமைப்புக்கள் தமது கடிதத்தில் கோரியுள் ளன. (ஐ-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேஷம்:** மனக்குழப்பங்கள் விலகி தெளிவு பிறக்கும். உடன்பிறந்தவர்களால் உதவிகள் கிடைக்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். அயல் வீட்டாரின் அன்புத் தொல்லைகள் விலகும்.

**இடபம்:** மனதில் இனம்புரியாத பயம் வந்து போகும். முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க வேண்டி வரும். யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்ளாதீர்கள்.

**மிதுனம்:** திட்டமிட்ட காரியங்களை அலைந்து முடிக்க வேண்டி வரும். திடீர் பயணங்கள், செலவுகளால் திணறுவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிக்க வேண்டி வரும்.

**கடகம்:** வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக இருக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். அலுவலகத் தில் மதிக்கப்படுவீர்கள். வழக்குகளிலிருந்த தேக்க நிலை மாறும்.

**சிங்கம்:** பிரியமானவர்களை கலந்தாலோசித்து முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். அரசியல்வாதிகளின் நட்பு கிடைக்கும். நீண்டநாளாக நினைத்திருந்த காரியத்தை இப்பொழுது செய்து முடிப்பீர்கள்.

**கன்னி:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். நட்பு வட்டாரம் விரிவடையும். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.

**நாளை**

வைகாசி-26 ஞாயிற்றுக்கிழமை 09.06.2013
திதி: பிரதமை மு.இ. 11.30 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம் மு.இ. 11.02 வரை
சுபநேரம்: 08.52- 10.22 வரை
இராகுகாலம்: 04.22 - 05.52 வரை

**துலாம்:** குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் குறை நிறைகளை எடுத்துச் சொன்னால் கோபப்படாதீர்கள். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தமடைவீர்கள். மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகக் கிடைக்கும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தெளிவான முடிவுகளை எடுத்து அருகிலிருப்பவர்களை அசத்துவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு, மரியாதை கூடும்.

**தனுசு:** பணவரவு திருப்திகரமாக இருக்கும். நல்லவர்களின் நட்பு கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளை தவிர்த்துவிட்டு சேமிக்கத்தொடங்குவீர்கள். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**மகரம்:** நீண்டநாள்களாக மனதளவில் இருந்துவந்த பிரச்சினைகளுக்கு இன்று முடிவுகட்டுவீர்கள். உத்தியோகத்தில் மதிப்பு கூடும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.கோபம் குறையும்.

**கும்பம்:** மன நிறைவுடன் காணப்படுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். பால்ய நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் வருமதிகளை அதிரடியாகச் செயற்பட்டு பெறுவீர்கள்.

**மீனம்:** மறைமுகப் போட்டிகளுக்கு பதிலடி தருவீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு. பிரபலங்களின் உதவி கிடைக்கும். அயல் வீட்டாரின் ஆதரவு பெருகும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 6 | | 1 | 2 | 9 | 8 |
| | 2 | | | 8 | 5 | | | |
| 1 | 8 | 3 | 7 | 9 | | 6 | 4 | |
| 5 | | 1 | | | | | | |
| 9 | | | | | | | | 6 |
| | | | | | | 7 | | 4 |
| | 9 | 4 | | 1 | 8 | 5 | 6 | 3 |
| | | | 9 | 4 | | | 2 | |
| 3 | 1 | 2 | 5 | | 6 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 4 | 9 | 2 | 1 | 7 | 3 | 8 | 6 |
| 2 | 1 | 6 | 3 | 8 | 4 | 7 | 5 | 9 |
| 8 | 3 | 7 | 6 | 5 | 9 | 4 | 2 | 1 |
| 1 | 5 | 4 | 9 | 6 | 8 | 2 | 3 | 7 |
| 7 | 6 | 3 | 4 | 2 | 1 | 5 | 9 | 8 |
| 9 | 8 | 2 | 5 | 7 | 3 | 1 | 6 | 4 |
| 3 | 7 | 1 | 8 | 9 | 5 | 6 | 4 | 2 |
| 4 | 2 | 8 | 7 | 3 | 6 | 9 | 1 | 5 |
| 6 | 9 | 5 | 1 | 4 | 2 | 8 | 7 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## ஈராண்டு நினைவஞ்சலி



## திருமதி மணிமேகலை கனகசிங்கம்

திதி: பூர்வபட்ச அமாவாசை

தோற்றம்
19.10.1949

மறைவு
01.06.2011

நலம் வினவ நாளும் நீயின்றி நகர்ந்தது ஈராண்டு
நிலம் கிழித்து வேர்கண்டு நின்றது உறவு பல்லாண்டு
'பெருவாழ்வு' நான் வாழ்ந்தேன் பேரன்பினால் உனையாண்டு
வருநாளில் இவ் வையகத்திருப்பது இனி நான் எதையாண்டு?

தொல்புரம்,
சுழிபுரம்.

தவிக்கும் கணவர்
சி.கனகசிங்கம் (சட்டத்தரணி)

(38057) (45.6.3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சிறுவனுடன் பிச்சை எடுத்த தாய்க்கு 14 நாள் மறியல்

வலி. தென்மேற்கு, ஜூன் 8

பாடசாலைக்குச் செல்லாமல் தாயுடன் சிறுவனும் இணைந்து பிச்சை எடுப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை அவர்கள் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டார்கள். இருவரையும் பொலிஸார் கைது செய்து யாழ். சிறுவர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர். நீதிவான் சிறுவனை இரட்சணிய சேனையில் அனுமதிக்குமாறும் தாயை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

ஆனைக்கோட்டை உயரப்புலத்திலுள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் 12 வயதுடைய குறித்த சிறுவன் பாடசாலைக்குச் செல்லாமல் தாயுடன் இணைந்து பிச்சை எடுப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான். இது குறித்து தகவல் அறிந்து மானிப்பாய் பொலிஸார் தாயையும், சிறுவனையும் கைது செய்து யாழ். சிறுவர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர். (ஒ-115)

# போதனா வைத்தியசாலையில் குழந்தை மருத்துவ அலகு

## விசேடமாக அமைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 8

அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார்களின் பங்களிப்புடன் கிடைக்கப்பெற்ற நிதியில் யாழ்.போதனா வைத்தியசாலையின் குழந்தை மருத்துவ சிகிச்சை அலகு அமைக்கப்படவுள்ளது.

2011ஆம் ஆண்டு 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களின் பங்களிப்புடன் 27 தினங்கள் மாபெரும் பாதயாத்திரை ஊடாக நிதி சேகரிக்கப்பட்டது. தெய்வேந்திர முனையிலிருந்து பருத்தித்துறை முனை வரை மேற்கொள்ளப்பட்ட இந்த நடைபயணத்தின் ஊடாக புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்பிக்கையூட்டுவதுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் புற்றுநோய் அலகை அமைப்பதும் நோக்கமாக இருந்தது.

இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கதிரியக்க சிகிச்சை அலகு தாபிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் இதற்கான பணிகள் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் இரண்டாம் கட்டமாக யாழ்.போதனா வைத்தியசாலையின் விசேட குழந்தை மருத்துவ அலகு அமைக்கப்படவுள்ளது. கொழும்பு றோட்டறிக் கழகத்தினால் இதற்குத் தேவையான உபகரணங்கள் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன. அத்துடன் ஏனைய தனியார் நிறுவனங்களும் சமூக சேவையாளர்களும் அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளின் றோட்டறி மன்றங்களும் நன்கொடை வழங்கியுள்ளன. (வ-14-86)

## பால் லீற்றர் ரூபா 45



தென்மராட்சி,

தென்மராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினர் கடந்த முதலாம் திகதி தொடக்கம் ஒரு லீற்றர் பால் 45 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படுகின்றது என தெரிவித்துள்ளனர். (ஒ-9)

## கைதடி அரச முதியோர் இல்லத்தில் 174 முதியவர்கள்

யாழ்ப்பாணம், ஜூன்

கைதடி அரச முதியோர் இல்லத்தில் எடுக்கப்பட்ட புள்ளி விவரத்தின்படி 174 முதியோர் கள் தங்கி வாழ்ந்து வருகிறார்கள். இவர்களில் 101 பேர் ஆண்கள், 73 பேர் பெண்கள். ஆண்கள் 1, 2, 3, 10, 11 ஆகிய விடுதிகளிலும் பெண்கள் 4, 5, 6, 7 ஆகிய விடுதிகளிலும் தங்கி வாழ்ந்து வருகிறார்கள். இவர்களது நலன்களை வட மாகாண சமூக நலத்துறைத் திணைக்களத்தின் அனுசரணையுடன் கைதடி அரச முதியோர் இல்ல நிர்வாகம் கவனித்து வருகிறது. (ந-51)

## சீனி விலையில் சரிவு

குருநகர், ஜூன் 8

யாழ். நகரிலுள்ள வியாபார நிலையங்களில் தற்போது சீனியின் விலை குறைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. முன்னர் ஒரு கிலோ சீனி 98 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது. தற்போது ஒரு கிலோ சீனி 95 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. (ஒ-51)


### இரண்டாம் ஆண்டு நினைவாக....

மலர்வு 28.11.1949
உதிர்வு 01.06.2011



அமரர் **இளையதம்பி ஆனந்தராசா**

திதி: அமாவாசை

*இரண்டாண்டுகள் சென்றனவே எம் நேரில்*
*நின்று பேசிய தெய்வத்தின் குரல் கேட்டு,*
*இன்றும் இன்னும் நாம் வாழும் காலங்களிலும்*
*மறவோமையா உங்கள் புன்னகை நிரம்பிய திருவுருவை...*

**அப்பா உங்கள் ஆத்ம சாந்திக்காக இந்நாளில் பூஜிக்கின்றோம்**
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

சூறாவத்தை,
சுன்னாகம். (38043)(6.7.11) குடும்பத்தினர்.

### 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 29.12.1939
மறைவு 06.05.2013

செல்வி **மாசில்லா பூபதி மனுவேற்பிள்ளை**

(08.06.2013)

மரணச்செய்திகேட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:

ஜீவரட்ணம், நவரெட்ணம், துரைரெட்ணம், றாணி, றதி, மலர், பாபு, யோகராசா, ஜோ மனுவேற்பிள்ளை, தேவதாஸ், சத்தியா, சித்திரா, சைவ், றஜினிகாந், பிரதீபன், பிரபாளினி, அகிலன், இமயகாந்தன், றஜீவன், துஷ்சாரா, மவுலீசன், மயூரன், சிந்து, நிரோஜன்.

40/2, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(37960)(10.6.13)

### 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 10.05.2013 வெள்ளிக்கிழமை காலமாகிய எமது குடும்பத்தலைவர்

அமரர் **ஆறுமுகம் சபாநாயகம்**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு எமது இல்லத்திற்கு வருகைதந்து ஆறுதல் கூறி சகல வழிகளிலும் உதவியவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டி கிரியை 07.06.2013 வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. (நாளை) 09.06.2013 ஞாயிற்றுக்கிழமை வீட்டுக்கிரியை அவரது இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(36051)

கந்தரோடை மேற்கு, சுன்னாகம் குடும்பத்தினர்.

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மனம் மகிழ: 17 09 1934
மனம் நெகிழ: 09 05 2013

பூநகரியைப் பிறப்பிடமாகவும் பெரிய அரசடி, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட

அமரர் **கந்தையா ஆறுமுகசாமி**

(முன்னாள் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்)

**பாசமாய் வளர்த்துவிட்டு**
**சோகமாய் விட்டுச் சென்ற**
**எமதருமை தெய்வமே!**
**மாதம் ஒன்று போனாலும்**
**மறக்காது உங்கள் முகம்**

**உங்கள் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.**

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று 08-06-2013 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

பெரிய அரசடி,
சாவகச்சேரி. (சி/9632)(3.5.6.7)

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் - 05.01.1935 மறைவு - 11.05.2013



அமரர் **கந்தையா லீலாவதி**

கடந்த 11.05.2013 சனிக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவி அமரர் கந்தையா லீலாவதி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று(08.06.2013) சனிக்கிழமை மு.ப.7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்று. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் (10.06.2013) திங்கட்கிழமை மு.ப. 10.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

[illegible]வர் கோயிலடி,
குப்பிளான் தெற்கு,ஏழாலை. (38098)(3.5,6.7)

குடும்பத்தினர்.
021 320 1656,077 670 1200,
077 558 1648


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்குத் தேவை

மூன்றுபேர் கொண்ட இந்து கௌரவ அரச உத்தியோக குடும்பத்துக்கு கோப்பாய், நீர்வேலி, உரும்பிராய் பகுதிகளில் தேவை.
தொடர்பு: 077 571 3187

## தையல் வகுப்புகள்

யாழ். நகரில் குறுகிய கால பிரத்தியேக தையல் பயிற்சி வகுப்புகள்.
தொடர்பு: 075 629 6961
(38099)(6.11)

## வீடு விற்பனைக்குண்டு

யாழ். நகர் மாட்டீன் வீதியில் ஆஸ்பத்திரி வீதிக்கு அருகில் ஐந்து அறைகளுடன் வாகனம் நிறுத்திடத்துடனும் சகல வசதிகளுடனும் கூடிய ஒரு பரப்பு காணியில் அமைந்துள்ள புதிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 071 869 8957, 077 350 1210
(38097) (6.3)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1978, திருவோணம், 7 இல் செவ்வாய் கிரகபாவம் 77¼, பிரபல தனியார் நிறுவனமொன்றில் முகாமையாளராக தொழில்புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.
விளம்பர இல. 4455,
மே/பா, உதயன், 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(38093) (45.6.3)

## மோட்டார் சைக்கிள் விற்பனை

எமது சொந்தப் பாவனையிலுள்ள Passion Pro மோட்டார் சைக்கிள் (Black)MPWD-xxxx தொடர் இலக்க முடையது விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 312 6637
(37601)(3.5.6)

## தவறிவிட்டது

இணுவில் கிழக்கைச் சேர்ந்த ஜெயபாலசிங்கம் முகுந்தன் என்பவருடைய தே.அ.அட்டை (882362116V), சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் என்பன கிளிநொச்சிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
(38103)(3.5.6) தொடர்பு: 077 213 6482

## கணினி திருத்தம் (Computer Repair)

அழையுங்கள் 0779086737

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தித் தருகிறோம்.
GUNAA BEST PC
52, Hospital Road,Jaffna.
(38826) (6.7)

## கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கம் - பரந்தன்
## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்
## கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் நடைபெறும் திகதியும் காலமும் - 23.06.2013.

வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்ட 1998.05.16ஆம் திகதிய 1028/6ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தக மானியில் வெளியிடப்பட்டதுமான வடக்கு-கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்காக ஆக்கப்பட்ட விதிகளுக்கு அமைய கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய திரு.சிற்றம்பலம் தவராசா ஆகிய நான் 2009.04.08 திகதிய 1596/17 இலக்க கொண்ட அதிவிசேட வர்த்தகமானி மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின் படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23க்கு அமைய சங்கத்தின் சகல கிளைகளினதும் கிளைக்குழுத் தெரிவுக்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களை பின்வரும் கால அட்டவணைப்படி நடத்துவதற்காக, அந்தக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராக கடமையாற்றுவதற்கு கீழ்வரும் அலுவலர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

கிளைப் பொதுச்சபை கூட்டங்கள் நடைபெறும் திகதியும் இடமும்.

| கிளை இல | கிளைப் பெயர் | தவிசாளர் பெயர் | கூட்டம் நடைபெறும் திகதி, நேரம் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 01 | பரந்தன் | செல்வி.க.கர்த்திகா,கூ.அ.உ | 23.06.2013 ஞாயிறு மு ப. 10.00 மணி | தலைமை அலுவலகம் |
| 02 | இரணைமடு மேற்கு | திருமதி பி.கவிதாலோறன்சியா கூ.அ.உ | 23.06.2013 ஞாயிறு முப.10.00மணி | கிளி/அந்தோனியார் வித்தியாலயம் 02ம் கட்டை |
| 03 | முரசுமோட்டை | வி.சிவகுமார்.கூ.அ.உ | 23.06.2013 ஞாயிறு மு ப. 10.00 மணி | முரசுமோட்டை ஆரம்ப வித்தியாலயம் |
| 04 | ஊரியான் | இ.சுதன்.கூ.அ.உ | 23.06.2013 ஞாயிறு மு ப. 10.00 மணி | |
| 05.06 | கண்டாவளை, பன்றிசுட்டான் | க.செந்தூரன்.கூ.அ.உ | 23.06.2013 ஞாயிறு மு ப. 10.00மணி | கண்டாவளை ம.வி |
| 07 | புளியம்பொக்கணை | இ.ரஜீவரதன் கூ.அ.உ | 23.06.2013 ஞாயிறு மு ப. 10.00 மணி | புளியம்பொக்கணை அரிசி ஆலை |
| 08 | கலவெட்டித்திடல் | ஜெ.சஞ்சீவ்.கூ.அ.உ | 23.06.2013 ஞாயிறு மு ப. 10.00 மணி | கிளி/நாகேஸ்வரா வித்தியாலயம் கலவெட்டித்திடல் |
| 09 | புன்னைநீராவி | இ.சுரேஸ்.கூ.அ.உ | 23.06.2013 ஞாயிறு மு ப. 10.00 மணி | கிளி/புன்னைநீராவி அ.த.க.பாடசாலை |
| 10 | உமையாள்புரம் | க.உதயரூபன்.கூ.அ.உ | 23.06.2013 ஞாயிறு மு ப. 10.00 மணி | உமையாள்புரம் அ.த.க.பாடசாலை |
| 11 | தட்டுவன்கொட்டி | இ.உதயகுமார்.கூ.அ.உ | 23.06.2013 ஞாயிறு மு ப. 10.00 மணி | தட்டுவன்கொட்டி அ.த.க.பாடசாலை |
| 12 | ஆனையிறவு | சி.குணாளன்.கூ.அ.உ | 23.06.2013 ஞாயிறு மு ப. 10.00 மணி | உமையாள்புரம் அ.த.க.பாடசாலை |
| 13 | குமரபுரம் | ப.தவப்பிரியன் கூ.அ.உ | 23.06.2013 ஞாயிறு மு ப. 10.00 மணி | உமையாள்புரம் அ.த.க.பாடசாலை |
| 14 | பொறிக்கடவை | ப.ஜெயந்தரபிரகாஸ் கூ.அ.உ | 23.06.2013 ஞாயிறு மு ப. 10.00 மணி | பெரியபரந்தன் அ.த.க.பாடசாலை |
| 15 | தருமபுரம் | வி.சிவபாலன் கூ.அ.உ | 23.06.2013 ஞாயிறு மு ப. 10.00 மணி | தருமபுரம் ம.வி |
| 16 | பிரமந்தனாறு | சி.பிரதீபன் கூ.அ.உ | 23.06.2013 ஞாயிறு மு ப. 10.00 மணி | பிரமந்தனாறு ம.வி |
| 17 | கல்மடு | அ.வசீகரன் கூ.அ.உ | 23.06.2013 ஞாயிறு மு ப. 10.00 மணி | கல்மடு அ.த.க.பாடசாலை |

★ இதற்கமைய இந்தக் கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலரினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

★ கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்குச் சமுகமளித்து வாக்களிக் கத்தகுதியுள்ள உறுப்பினர்களின் நான்கிலொரு (¼) பங்கினர் அல்லது 25 பேர் அதில் எது குறைவோ அத்தொகையாகும்.

★ தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையிலிருந்து கிளைக்குழுவுக்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச்சபையை கோருவார். இவர்களுள் ஆகக் குறைந்தது இருவராவது (02) 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

★ சபையிலிருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் அவ்விரு தொகையினருக்கும் மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவை மேற்கொள்வார்.

★ இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வேட்பாளர்களிடையே சம வாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச் சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.

★ தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச் சபையில் பிரகடனப் படுத்துவதுடன் சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

★ கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் 16.08.1998ம் திகதிய 1028/06 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய கூட்ட அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. அறிவித்தல் கிடைக்காத வாக்களிக்கத்தகுதியுடைய அங்கத்தவர்களும் அன்றைய கூட்டத்திற்கு சமுகமளித்து தங்கள் ஜனநாயக உரிமையைப் பயன்படுத்திக் கூட்டுறவு அமைப்பை ஜனநாயக ஆளுமை கொண்டதாகச் செயற்படுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்: செயலாளர்
கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கம்,
பரந்தன்.
(C/9635)

சி.தவராசா,
கூட்டுறவு அபிவிருத்தி உதவி
ஆணையாளர்

# திட்டமிட்டபடி கூட்டம்

## கல்முனையில் நடக்கும் என்கிறது பொது பல சேனா
## அனுமதி பெறப்படவில்லை என்கிறார் மீராசாகிப்

கல்முனை, ஜூன் 8
திட்டமிட்டபடி கல்முனையில் நாளை ஞாயிற்றுக்கிழமை பொதுபல சேனாவின் கூட்டம் நடைபெறும் இதில் எவ்வித மாற்றமும் இல்லை என்று பொதுபலசேனாவின் திட்டமிடல் அதிகாரி டிலந்த விதானகே உறுதியளித்தார்.
இது தொடர்பாக கல்முனை மாநகர முதல்வர் மீராசாஹிப்பிடம் கேட்டபோது:
இந்தக் கூட்டத்தை நடத்த எவ்வித அனுமதியும் வழங்கப் படவில்லை - என்றார்.



சிங்கள- முஸ்லிம் கலவரத்தினை ஏற்படுத்தவே பொது பலசேனா முற்படுகிறது.

இந்தக் கூட்டம் நடைபெறுவது குறித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதா என்று கேட்டபோது அவர்கள் இதுவரை எந்தத் தகவலும் வழங்கப்படவில்லை என்று கூறினார்.
இதேவேளை கல்முனையில் இடம்பெறவுள்ள பொதுபலசேனாவின் கூட்டத்தை தடுத்து நிறுத்துமாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எம்.ஜெமீல் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.
அரசு இதனை அனுமதித்தால் பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம். சிங்கள- முஸ்லிம் கலவரத்தை ஏற்படுத்தவே பொது பலசேனா முற்படுகிறது. இதனை அரசு உடனடியாக தடுக்க வேண்டும் என்றுஅவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச-ரி)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம்,கொழும்புத்துறை, வளன்புரம், சுவாமியார் லேனில் இரண்டரைப் பரப்பில் அமைந்துள்ள ஒன்பது அறைகளைக் கொண்ட பெரிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 695 3776
(பி/8910) (3.5.6)

## மணமகள் தேவை

கண்டியை வசிப்பிடமாகக் கொண்ட முஸ்லிம் குடும்பத்தவருக்கு மணமகள் தேவை. மணமகன் வயது 24, உயரம் 5'9''. குவான் ரிற்றி சேவையர் பட்டதாரி, கொழும்பில் முன்னணி நிறுவனத்தில் வேலை பார்க்கிறார். அழகும், நிறமும், மெலிந்த உடல் வாகும் கொண்ட மணமகள் தேவை.
தொடர்பு:077 778 8812
E mail- fivestarsn@gmail.com
(37451)(3.6.7.11)

## அருள்மிகு புதுவையூர் கோம்பாவில் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா விஞ்ஞாபனம்

நாகதம்பிரான் பக்த அடியார்களே! புதுக்குடியிருப்பு கோம்பாவில் பதிதனில் வீற்றிருந்து அகில உலகத்தையும் ஆளுகின்ற, பக்தர்கள் கேட்கின்ற வரங்களை வாரி வழங்குகின்ற நாகதம்பிரானின் வருடாந்த பொங்கல் விழா நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.
நிகழும் மங்களகரமான விஜய வருடம் வைகாசித் திங்கள் 27 ஆம் நாள் (10.06.2013) திங்கட்கிழமை நடைபெற இருப்பதால் அனைத்து நாகதம்பிரான் பக்த அடியார்களும் பொங்கல் விழாவில் பங்கு பற்றி நாகதம்பிரான் அருள் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
கோம்பாவில், புதுக்குடியிருப்பு. (சி/9631) (45.3.7) புதுவையூர் நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபை.

## சிகிச்சை நிலைய உதவியாளர் தேவை

கந்தர்மடத்தில் இயங்கும் பற்சிகிச்சை நிலையத்தில் உதவியாளராக சேவை பழகுவதற்கு 30 வயதிற்குட்பட்ட பெண் பாலாரிடமிருந்து விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும். ஆர்வமுடையவர்கள் தங்களது விவரங்களை சுயமாகத் தயாரித்து தபால் மூலம் விண்ணப்பிக்கும்படி கேட்டுகொள்ளப்படுகின்றீர்கள்
வைத்திய அதிகாரி,
198, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (38104) (3.6.7.11)

## அம்புலன்ஸ் சேவை
## இலங்கை செஞ்சிலுவை சங்கம்

SRI LANKA RED CROSS SOCIETY

கொழும்புக்கு நோயாளர்களை ஏற்றிச் செல்வதற்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், நோயாளர்களின் நலன் கருதி சலுகை அடிப்படையில் அம்புலன்ஸ் சேவையை செய்ய முன்வந்துள்ளது.
தொடர்பு: 077 302 4293,
021 222 2561
(ட/9627) (6.11)

## தொழில்நுட்ப விருது இலங்கைக்கு

கொழும்பு, ஜூன் 8
உலகில் அதிசிறந்த கிராமியத் தகவல் தொழில்நுட்ப மையத்துக்கு உரிய விருது இலங்கைக்குக் கிடைத்துள்ளது.
ஸ்பானியாவின் கிரெண்டா நகரில் இடம்பெற்ற உலக தகவல் தொழில் நுட்பங்கள் ஒன்றியத்தின் வருடாந்த விருது வழங்கல் விழாவில் வைத்தே இந்த விருது சூரிய வெவ அறிவாலயத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. 30 நாடுகளின் 60 போட்டியாளர்களை வென்று சூரியவெவ விலுள்ள அறிவாலயம் இந்த விருதைப் பெற்றுள்ளது. (ஏ-22)

## மணமக்கள் தேவை

★ 78 இல் பிறந்த, 12 இல் செவ்வாய், 24½ பாவம் உடைய, வங்கி உத்தியோகத்தருக்கு பட்டதாரி மணமகள் தேவை.
★ 82இல் பிறந்த, செவ்வாய் பாவம் இல்லாமல், 34¼ பாவம் உடைய விவசாய உதவி முகாமையாளருக்கு படித்த பட்டதாரி மணமகள் தேவை.
★ 82இல் பிறந்த, 2இல் செவ்வாய், 9½ பாவம் உடைய, ஆஸ்திரேலிய பிரஜாவுரிமை பெற்ற மணமகளுக்கு படித்த மணமகன் தேவை.
★ 78இல் பிறந்த,செவ்வாய் பாவம் இல்லாமல்,9½ பாவம் உடைய, சிவில் இஞ்சினியருக்கு படித்த மணமகள் தேவை.
★ 83இல் பிறந்த, 4இல் செவ்வாயும் சூரியனும், 15¼ பாவம் உடைய, அமெரிக்க பிரஜாவுரிமை பெற்ற மணமகளுக்கு அமெரிக்காவில் மணமகன் தேவை.
★ 87இல் பிறந்த,7இல் செவ்வாய்,37¼ பாவம் உடைய, ஆஸ்திரேலிய பிரஜாவுரிமை பெற்ற மணமகளுக்கு [illegible] இஞ்சினியர் மணமகன் தேவை.
[illegible] திருமணசேவை (38090) (3.5.6)
இல. 435/3,கோவில் வீதி, நல்லூர். 077 607 0862


## Investments PLC

மாதம் - 24%, 3 வருடம் -30% 30 June வரைக்கும்.
தொடர்பு: 021 568 5999, 077 060 2224
நிபந்தனைக்குட்பட்டவை.

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், லக்கினத்தில் செவ்வாயும் 48 கிரக பாவமும் உடைய கிழக்கு பல்கலைக் கழகத்தில் நிரந்தர கணினி போதனாசிரியராக பணி புரியும் 33 வயதுடைய BSC, MIT மணமகனுக்கு 30 வயதுக்குட்பட்ட பட்டதாரி அல்லது அரச வங்கிகளில் பணி புரியும் மணமகள் தேவை. தரகர்கள் தேவையில்லை.
தொடர்பு: 077 791 0680
(38067)(6.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத் துடனான காலநிலை நிலவும்.

மாகாண சபை நிதியிலிருந்து

# 20 லட்சம் கடன் நிர்வாக கட்டடத்துக்கு

வலி.வடக்கு, ஜூன் 4

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம், கட்டத் தீர்மானித்துள்ள நிர்வாக அலுவல்களுக்கான கட்டடத்துக்கு மாகாண சபை நிதியி லிருந்து 20 லட்சம் ரூபா கடனாக வழங்கப்படவுள்ளது.

இந்தச் சங்கத்துக்கு வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, உடுப்பிட்டித் தொகுதியின் முன்னாள் சுதந்திரக்கட்சி அமைப்பாளர் கே.ரி.இராஜசிங்கம் ஆகியோர் அண்மையில் சென்றிருந்தனர்.

சங்கத் தலைவர் இரா.பூரணச்சந்திரன் தலைமையிலான இயக்குநர் சபை உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் இவர் களைச் சந்தித்து சங்க நிலைமைகளை விரிவாக எடுத்துக் கூறினார்கள்.

இதனையடுத்து சங்கம் கட்டத் தீர்மானித்துள்ள நிர்வாக அலுவலகக் கட்டடத்துக்கான கட்டடப் பணிக்கு 20 லட்சம் ரூபாவை கடனாக வழங்குவதாக ஆளுநர் உறுதியளித்துள்ளார். (ந-8)



கைதடி அரச முதியோர் இல்லத்தின் வளவில் போரினால் சேதமடைந்த நிலையில் காணப்படும் விடுதியை உடனடியாக புனரமைத்துத் தருவதாக கைதடி அரச முதியோர் இல்லத்தில் உறுதியளித்துள்ளார் வடமாகாண ஆளுநர். சேதமடைந்த கட்டடத்தை படத்தில் காணலாம். திறந்து வைக்கப்பட்ட புதிய கட்டடம் அருகில். (ஒ-51)

# கிளிநொச்சி உருத்திரபுரீசுவரர் ஆலய

## அறங்காவல் சபையின் பொதுச் சபையைக் கூட்டுவதற்கான ஏற்பாடு

கிளிநொச்சிமாவட்டத்தில் பழம்பெருமைவாய்ந்தஒரேசிவாலயம் இதுவாகும். நாற்சதுரவடிவமான ஆவுடையார்கொண்டசிவலிங்கம் அமைந்துள்ளமையே இதன் சரித்திரப் பெருமையை பழமையை எடுத்துக்காட்டும். திருக்கேதீச்சரத்தில் கண்டெடுக்கப்பட்ட பழைய சிவலிங்கம் கூடவட்டஆவுடையார் கொண்டது. உருத்திரபுரீசுவரர் ஆலயத்தில் கண்டெடுக்கப்பட்டு கோயில் கொண்டருளியுள்ள லிங்கம் நாற்சதுரவடிவுடைய ஆவுடையாருடன் கூடியலிங்கம். இதுபழைமையான வரலாறுகொண்டது. வட்ட ஆவுடையார் கொண்ட சிவலிங்க வழிபாடு காலத்தால் பிந்தியது. இதுவே இதன் தொன்மைக்குச் சாட்சி. இத் தொன்மை வாய்ந்த உருத்திரபுரீசுவரர் ஆலயத்தின் அருளாட்சியை மாவட்டம் எங்கும் நிலவச்செய்யும் வகையில் பொதுச்சபை அமைந்துள்ளது.

உருத்திரபுரீசுவரர் யாப்பின் உபபிரிவு 8-3ற்கு இணங்க கிளிநொச்சி மாவட்டத் தின் சகலபகுதிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒவ்வொரு பிராந்தியத்திலிருந்தும் ஒன்பதுபேர் வீதம் தெரிவு செய்யப் படுவர். இவர்களே பொதுச்சபை உறுப்பினர்களாக இருந்துதலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட 21 பேர் கொண்ட குழுவைத் தெரிவுசெய்வார்கள். இந்த துணைத்தலைவர், துணைச் செயலாளர் உருத்திர புரீசுவரர் ஆலய முகாமைத்துவத்துக்கு பொறுப்பாக இருப்பார்கள்.

பிராந்தியங்கள் பின்வருமாறு

**உருத்திரபுரம் பகுதி**

நான்கு கிராமசேவையாளர் பிரிவும் நான்கு பிராந்தியங்கள் 9 பிரதிநிதிகள் வீதம் பேர் 36 தெரிவு செய்யப்படுவர்

| | |
|---|---|
| புளியம்பொக்கணை | 09 |
| முரசுமோட்டைபரந்தன் பகுதி | 09 |
| பூநகரிப் பகுதி | 09 |
| பல்லவராயன்கட்டுப் பகுதி | 09 |
| கரைச்சிகிழக்குப் பகுதி | 09 |
| கிளிநொச்சிநகரம், திருநகர், திருவையாறு, ஜெயந்திநகர் உட்பட | 09 |
| கனகபுரம் உட்பட உதயநகர், பாரதிபுரம், அம்பாள்குளம் உட்பட சாலை வீதிக்கும் கண்டி வீதிக்கும் உட்பட்ட பகுதி | 09 |
| அக்கராயன், ஸ்கந்தபுரம், வன்னேரிக்குளம், ஊற்றுப்புலம், அடங்கலாக அக்கராயன் ப.நோ.கூ.சங்கப் பிரதேசம் | 09 |
| பச்சிலைப்பள்ளி உதவிஅரசாங்க அதிபர் பிரிவு | 09 |

பதின்மூன்றுபிராந்தியங்களினதும் உறுப்பினர்கள் தனித்தனிபிராந்தியப் பொதுச்சபை கூடப்பட்டு 9 பேராளர்களைத் தெரிவுசெய்து அனுப்புதல் வேண்டும். தெரிவுசெய்யப்பட்ட 13x9=117பேராளர்களும் கூடி தலைவர், செயலாளர்,பொருளாளர்உட்பட 21 முகாமைக்குழுஉறுப்பினரைத் தெரிவுசெய்வர். 13 பிராந்தியங்களிலிருந்தும் தனித்தனிகுறைந்ததுஒருவர்கட்டாயம்முகாமைக்குழுவிலே இடம்பெறவேண்டும்.

தெரிவு இடம்பெறவேண்டிய காலஅட்டவணை

பிராந்தியப் பொதுச்சபை கூடி தலா 9 பேராளர்களை25.06.2013க்கிடையில் தெரிவுசெய்து தலைவருக்கு அனுப்பவேண்டும்.

மத்தியபொதுச்சபை 14.07.2013 காலை 11மணிக்கு கோயில் முன்றிலில் கூடி முகாமைக்குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்பவர். சகலதெரிவு செய்யப்பட்ட மத்தியபொதுச்சபை உறுப்பினர்களும் தவறாது பங்குபற்ற வேண்டும். மத்தியபொதுச்சபைக் கூட்டத்தில் இதுவரையான வரவுசெலவுகள் கொண்ட சகல கணக்கறிக்கைளும் சமர்ப்பிக்கப்படும்.

இது ஆரம்பப்பணி மட்டுமல்ல பாரிய சமயப்பணியாக இருப்பதால் கடந்தகாலங்கள் போல சகல பிரதேச செயலாளர்களும் அப்பகுதி கிராமசேவக உத்தியோகத்தர்களும் தொண்டுஅடிப்படையில் அப்பகுதி கலாசார உத்தியோகத்தருடைய ஒத்துழைப்புடன் பிராந்திய சபை அமைக்க ஒத்துழைப்பு வழங்கி உதவுமாறுஅன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இவர்கள் அவ்வப்பகுதிகோவில் தலைவர்கள் உருரித்திர புரீசுவரர் அடியார்களைச் சந்தித்து உறுப்புரிமைகளை சேர்த்து பிராந்திய பொதுச்சபையை அமைப்பார்கள். ஒன்றுக்கு மேற்பட்ட கிராமசேவக பிரிவுகள் வருவதால் சகலரும் இணைந்து தமதுபகுதிக்குள் செயற்பட்டு இத்தெரிவினை மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**வருடச்சந்தா ரூபா 60/= ஆகும்**
**ஆயுட் சந்தா ரூபா 500/=அல்லதுதிருப்பணிக்குரூபா10,000/= க்குமேல் செலுத்தி இருப்பவர்கள் ஆயுட் சந்தாதாரர்ஆவர்**

எனவேசகல இம்மாவட்டஉருத்திரபுரீசுவரர்அடியார்களும் இச்சிவன் கோயிலின் பங்குதாரர்கள் ஆகுமாறுஅன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். தற்போதுஉருத்திரபுரீசுவரர்கோயில் இருப்புக்குபாரிய நெருக்கடியைஎதிர்நோக்கியிருப்பதால் சகலரதும் பேராதரவும்தேவைப்படுகின்றது.

**நி.இராசநாயகம்,**
**தலைவர்,உருத்திரபுரீசுவரர் ஆலய அறங்காவல் சபை**
**உருத்திரபுரீசுவரம், உருத்திரபுரம், கிளிநொச்சி.**

(9/9636)(3.5.6.7)

# ஞாயிறு- புதன் வரையான மின் தடை

யாழ்ப்பாணம், ஜூன் 8

வீதி அகலிப்புப் பணிகளுக்காகவும் மின் மார்க்கங்களின் புனரமைப்புப் பணிகளுக்காகவும் சில பகுதிகளில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரையும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை பரமேஸ்வராச் சந்தி, பலாலி வீதி, விஞ்ஞானபீடப் பிரதேசம், அரசடி வீதி, கொழும்புத்துறை வீதி, ஈச்சமோட்டை, பாசையூர், குருநகர், கந்தர்மடம், ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, வேம்படிப் பிரதேசம், கொன்வென்ட் பிரதேசம், பிரதான வீதி, வல்லை முதல் மந்திகை வரையான வடமராட்சிப் பிரதேசம், இயக்கச்சி சங்கத்தார் வயல் பிரதேசம் ஆகிய இடங்களிலும்-

நாளைமறுதினம் திங்கட்கிழமை 8.30 மணியிலிருந்து மதியம் 12.30 மணி வரை தொண்டமானாறு வீதிப் பிரதேசம், குஞ்சர் கடைப் பிரதேசத்தின் ஒரு பகுதி, உடுப்பிட்டி, தொண்டமனாறு, வல்வெட்டித்துறை, வல்வெட்டி, நவிண்டில், இயக்கச்சி சங்கத்தார்வயல் பிரதேசம் ஆகிய இடங்களிலும்-

11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மானிப்பாய் ஈஞ்சை வைரவர் கோயில் பிரதேசம், மாலுசந்தி, அல்வாய், வியாபாரிமூலைப் பிரதேசங்கள், நவிண்டில் தாமோதரம் வித்தியாலயத்திலிருந்து இரும்புமதவடி வரையான பிரதேசம், இயக்கச்சி சங்கத்தார்வயல் பிரதேசம் ஆகிய இடங்களிலும்-

12 ஆம் திகதி புதன்கிழமை அச்சுவேலி, இடைக்காடு, பத்தமேனி, வளலாய், தொண்டமானாறு வீதிப் பிரதேசம், இயக்கச்சி, சங்கத்தார்வயல் பிரதேசம் ஆகிய இடங்களிலும்-

13 ஆம் திகதி வியாழக்கிழமை நெல்லியடிப் பிரதேசத்தின் ஒரு பகுதி, வதிரி, அல்வாய்ப் பிரதேசத்தின் ஒரு பகுதி, திக்கம், மானிப்பாய் ஈஞ்சை வைரவர் கோயில் பிரதேசம், இயக்கச்சி, சங்கத்தார்வயல் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ந)

# தலைமறைவாகியிருந்த நபர் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஜூன் 8

இரண்டு வருட காலமாக பொலிஸில் சிக்காமல் தலைமறைவாகியிருந்த குற்றவாளியொருவரை அச்சுவேலிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பல்வேறு குற்றச் செயல் களுடன் தொடர்புடைய கோகுலன் (வயது-32) என்பவரே திங்கட்கிழமை இரவு அச்சுவேலிப் பொலி ஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோது 14 தினங்கள் விளக்க மறியலில் வைக்குமாறு மல் லாகம் நீதிவான் உத்தர விட்டுள்ளதாக அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தார். (வ-ரி)

## முன்பள்ளி மெய்வன்மை

வதிரி தமிழ் மன்ற முன்பள்ளியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற உள்ளது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டி கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் திருமதி. பா.கலைவாணியும், பருத்தித்துறை கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் திருமதி சு.சுரேஸ்ம் கலந்து கொள்வர்.

## வேப்ப மரத்தில் தொங்கிய நிலையில் சடலம் மீட்பு

இரவு படுக்கைக்குச் சென்ற குடும்பஸ்தர் காலையில் வளவில் உள்ள வேப்ப மரத்தில் கயிற்றில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் பளை முல்லையடியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுதர்சன் (வயது-25) என்பவரே மரணமானவரா வார். பளைப் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு கிளிநொச்சி வைத்தியசாலை யில் சடலத்தை ஒப் படைத்துள்ளனர். (எ-9)

சுன்னாகத்தில்
மங்களகரமான ஆரம்பம்
**Nalin City Showroom**
(காட்சியறை மற்றும் சேவைநிலையம்)
**09-06-2013**
உங்கள் அனைத்து
கணினித் தேவைகட்கும் நாடுங்கள்.
NALIN
116-G, K.K.S Road,Chunnakam.
e no- 0212242222 Hotline-0777140431

**வீடு வாடகைக்கு**
யாழ். பிரதான வீதிக்கு அருகில் அச்சக வீதி ஒழுங்கையில் வீடு வாடகைக்கு உண்டு. சிறிய குடும்பத்தினர் விரும்பத்தக்கது.
(38116) தொடர்பு:- 0777741750

**விற்பனைக்கு**
ஜேர்மன் சப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 947 5996

**ஆங்கிலம்**
**பிரத்தியேக வகுப்புகள்**
அனுபவம் வாய்ந்த பட்டதாரி ஆசிரியர்
தொடர்பு: 0779309740

**உடனடி வேலைவாய்ப்பு**
யாழில் புதிதாக இயங்கிவரும் பிரபல நிறுவனத்துக்கு முகாமையாளர்கள், உதவி முகாமையாளர்கள், மேற்பார்வையாளர்கள், விற்பனை விநியோகஸ்தர்கள் உடனடியாகத் தேவை.
★ முன் அனுபவம் அவசியமில்லை
★ தகுந்த பயிற்சி வழங்கப்படும்
★ சம்பளமாக 17, /- வழங்கப்படும் (பதவிக் கேற்ப சம்பளம் வழங்கப்படும்)
★ இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
★ தங்குமிடம் ஒழுங்கு செய்து தரப்படும்
★ வவுனியா கிளைக்கும் விண்ணப்பிக்கலாம்.
**தொடர்புகளுக்கு:**
**இல.320, A 2/1, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**
(38114)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தற்போதைய அரச ஆட்சியில் தலைவிரித்தாடுகிறது இனவாதம்

### பாஸ்கரா குற்றச்சாட்டு



கொழும்பு,ஜூன் 8
போர் முடிந்து சமாதானம் மலரப்போவதாகக் கூறும் இந்த அரச ஆட்சியில் இனவாதம் தலைவிரித்தாடுகின்றது என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடக செயலாளரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான சி. பாஸ்கரா குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:

தமிழ் மக்களுக்கு விடுதலை, மக்களை காப்பாற்றுகின்றோம் என இலட்சக் கணக்கில் மக்களைக் கொன்ற நாளில் வெற்றி விழாவை கொண்டாடும் அரசு, இதுவரை அரசியல் தீர்வை சமர்ப்பிக்க எண்ணவில்லை.

இலங்கையில் இந்தக் காலத்தைப் போல் எக்காலத்திலும் இனவாதம் தலை விரித்தாடியது இல்லை. அரசு நல்ல சிந்தனையில் நடக்க வேண்டுமானால் கௌதம புத்தர் வழியில் நடக்கும் கல்முனை சுபத்ராமய விகாராதிபதி சங்கரத்ன தேரர் கூறிய இலங்கை பௌத்தர்களுக்கு மாத்திரம் உரிய நாடு அல்ல என்ற அவரின் கருத்துப்படி அரசு சிந்தித்து நடக்குமாயின் ஐக்கிய இலங்கைக்குள் சகல இனத்தவர் களும் சமமாக வாழும் சூழ்நிலை ஏற்படும்- என்றார். (ச)

# காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்காது 13 இல் திருத்தம் எதற்கு?

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கேள்வி



கொழும்பு,ஜூன் 8
காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்காது 13 ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றம் கொண்டுவருவது எதற்காக என்று தெரியவில்லை என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அதன் தலைவர் குணதாஸ அமரசேகர இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

பிரபாகரன் ஒழிக்கப்பட்ட நாள் தொடக்கம் 13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குமாறு நாம் வலியுறுத்தி வருகிறோம். அதற்கு முன்னரும் வலியுறுத்தி வந்துள்ளோம்.

இந்தியாவால் பலவந்தமாக திணிக்கப்பட்ட இந்தப் 13 ஆவது திருத்தச் சட்டம் இலங்கைக்கு உகந்ததல்ல என நாம் தொடர்ச்சியாக கூறி வந்துள்ளோம். அதனை எவரும் கருத்தில் கொள்ள வில்லை.

ஆனால் இன்று அதில் மாற்றம் கொண்டுவர அமைச்சரவை நடவடிக்கை எடுத்துள்ளது. அது ஒரு வெற்றியாகும். இந்தச் சட்டத்தில் இரண்டு சரத்துக்களைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காணி, பொலிஸ் அதிகாரங்களைத்தான் நீக்க வேண்டும். அதை நீக்காது இதில் திருத்தங்கள் கொண்டுவரப்படுவது எதற்காக என்று தெரியவில்லை.

காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்காவிட்டால் வட மாகாண சபைத் தேர்தலில் தமிழத் தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெற்று அந்த அதிகாரங்களைக் கைப்பற்றும் என்றார். (ச)

# வாக்குறுதி இதுவரை நிறைவேறவில்லை

### கையிழந்த சட்டபீட மாணவி வேதனை



கொழும்பு, ஜூன் 8
செயற்கை இலத்திரனியல் கை பொருத்துவதாக வழங்கப்பட்டிருந்த வாக்குறுதி இதுவரை நிறைவேற்றப்படவில்லை என்று கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட மாணவி அச்சலா பிரியதர்சினி தெரிவித்தார். 'மவ்பிம' பத்திரிகைக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

கடந்த ஜனவரி மாதம் வீட்டில் சறுக்கி வீழ்ந்ததால் எனது இடது கை எலும்பில் முறிவு ஏற்பட்டதையடுத்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டேன்.

அங்கு வைத்தியர்களின் கவனக்குறைவால் எனது கையை இழக்க வேண்டி ஏற்பட்டது.

வைத்தியசாலையில் நான் அனுமதிக்கப்பட்டிருந்த போது எனக்கு பலராலும் வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. எனினும், இதுவரையில் எந்தவொரு வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நாள்களில் பல தரப்புக்களாலும் வழங் கப்பட்டிருந்த அனைத்து வாக்குறுதிகளும் என்னை ஆறுதல்படுத்துவதற்கு மாத்திரம் வழங்கப்பட்டவையே.

இந்தச் சம்பவத்தின் பின்னர் எந்தவொரு அதிகாரியும் எனக்குச் சரியான தகவலை வழங்குவது இல்லை.

செயற்கை கரம் பெற்றுத் தருவதாக அரசாலும் வாக்குறுதி வழங்கப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து ஆராய்வதற்கு சுகாதார அமைச்சின் செயலரால் நியமிக்கப்பட்டிருந்த நால்வர் குழுவின் அறிக்கையும் கடந்த பெப்ரவரி மாதம் சுகாதார அமைச்சுக்குக் கையளிக்கப்பட்டது.

அந்த அறிக்கைக்கு அமைய இந்தச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டிருந்த தரப்புக்களுக்கு குற்றப்பத்திரங்களும் கையளிக்கப்பட்டுள்ளன. எனினும் நான் கைவிடப்பட்ட நிலையிலேயே உள்ளேன்- என்றார். (ச-22)

## வட மாகாண வாகனங்களுக்கும் புகைப் பரிசோதனை கட்டாயம்

### மோட்டார் பதிவுகள் ஆணையகம் தெரிவிப்பு



கொழும்பு,ஜூன் 8
வடமாகாணத்தில் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களுக்கு புகைப் பரிசோதனை மேற்கொள்ளப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்று மோட்டார் பதிவுகள் ஆணையகம் அறிவித்துள்ளது.

வடமாகாணத்தில் புகை பரிசோதனை இதுவரையில் மேற்கொள்ளப்படாமையால், அங்கு சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து அவதானம் செலுத்த வேண்டியுள்ளது.

இந்தநிலையில் புகைப் பரிசோதனை மேற்கொள்ளாத வாகனங்களின் பதிவுகள் வழங்கப்படமாட்டாது என்று ஆணையகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை நாட்டில் சகல பகுதிகளிலும் புகைப்பரிசோதனை மேற்கொள்ளக்கூடிய வசதிகள் இருக்கின்ற நிலையில் இந்த விடயத்தில் வட மாகாணத்தில் சிக்கல் ஏற்படாது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

புகைப் பரிசோதனை மேற்கொள்ளப்படாத நிலையில், வடமாகாணத்தில் இருந்து தென்னிலங்கை நோக்கி வருகின்ற வாகனங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (ச)

ஓம் சக்தி

ஸ்ரீ நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய

2013ஆம் ஆண்டு (விஜய வருடம்)

உயர் திருவிழா



| | | | | |
|---|---|---|---|---|
| 09.06.2013 | ஞாயிற்றுக்கிழமை | 01ஆம் திருவிழா | பகல் | கொடியேற்றம் 12 மணி |
| 13.06.2013 | வியாழக்கிழமை | 5ஆம் திருவிழா | இரவு | முத்துச்சப்பறம் |
| 15.06.2013 | சனிக்கிழமை | 7ஆம் திருவிழா | இரவு | கைலைக்காட்சி |
| 17.06.2013 | திங்கட்கிழமை | 9ஆம் திருவிழா | பகல் | எழுந்தருளி அம்பாளுக்கு 108 சங்காபிஷேகம் |
| 18.06.2013 | செவ்வாய்க்கிழமை | 10ஆம் திருவிழா | பகல் | சிவபூஜை கைலைக்காட்சி |
| | | 10ஆம் திருவிழா | இரவு | திருமஞ்சம் |
| 19.06.2013 | புதன்கிழமை | 11ஆம் திருவிழா | பகல் | விசேட கருட சர்ப்ப பூசை வாயு பட்சணி நாகம் வீதியுலா |
| | | | இரவு | பூந்தண்டிகை |
| 20.06.2013 | வியாழக்கிழமை | 12ஆம் திருவிழா | | குதிரை வாகனம் |
| 21.06.2013 | வெள்ளிக்கிழமை | 13ஆம் திருவிழா | பகல் | கைலைக்காட்சி |
| | | | இரவு | சப்பறம் |
| 22.06.2013 | சனிக்கிழமை | 14ஆம் திருவிழா | | தேர் காலை |
| 23.06.2013 | ஞாயிற்றுக்கிழமை | 15ஆம் திருவிழா | காலை | தீர்த்தம் |
| | | 15ஆம் திருவிழா | மாலை | திருவூஞ்சல், கொடியிறக்கம் |
| 24.06.2013 | திங்கட்கிழமை | 16ஆம் திருவிழா | இரவு | (பூங்காவனம்) தெப்போற்சவம் |

குறிப்பு:- வழமைபோல் இவ்வாண்டும் நயினை அமுதசுரபி அன்னதான சபையினர் உற்சவ காலத்தில் அன்னதானப் பெரும்பணியைச் செய்வதற்கு ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளனர். தாகசாந்தி நிலையத்தினர் தாகசாந்தி வழங்குவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர். அடியார்களின் நலன்கருதி மேலதிகமாக படகு சேவைகள், போக்குவரத்துச் சேவைகள் சுகாதார சேவைகள் என்பனவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

தினமும் மாலை கோயில் முன் கலையரங்கில்
கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.
அன்னையின் அருள் பெறஅடியார்கள் அனைவரும் வருக.

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,
நயினாதீவு.

அறங்காவல் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முள்ளியவளையில் பரிசளிப்பு விழா

புதுக்குடியிருப்பு, ஜூன் 8

கரைத்துறைப்பற்று கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் ஆகியன நடத்தும் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை முள்ளியவளை வித்தியானத்தாக் கல்லூரி மண்டபத்தில் சமாசங்களின் தலைவர் து.ரவிகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக முல்லை மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொள்ளவுள்ளார். (த-400-5)

### விபத்தில் காயமுற்றவர் நேற்றுச் சாவு

புதுக்குடியிருப்பு கைவேலிப் பகுதியில் கடந்த வாரம் இடம்பெற்ற விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த ஐஸ்பழ வியாபாரியான உடையார்கட்டு வெள்ளப்பள்ளத்தைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான கணபதி இராசேந்திரகுமார் சிகிச்சைபயனின்றி நேற்று உயிரிழந்தார். கடந்த 31 ஆம் திகதி கைவேலிப் பகுதியில் போக்குவரத்துப் பொலிஸார் தலைக் கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளில் சென்ற மூவர் மீது தமது தலைக் கவசத்தை வீசி எறிந்ததால் இந்த விபத்து இடம்பெற்றது.(த-4-400)

# பொதுநலவாய மாநாட்டை மீள்பரிசீலனை செய்யவும்

## செயலகத்துக்கு அழுத்தம் கொடுப்போம் என்கிறது ஐ.தே.க.

கொழும்பு, ஜூன் 8

பொதுநலவாய மாநாட்டை எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடத்துவது குறித்த தீர்மானத்தைப் பொதுநலவாய நாடுகளின் அமைப்பு மீள் பரிசீலனை செய்யவேண்டுமென அவ்வமைப்புக்கு அழுத்தம் கொடுக்கப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்தது.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைப் பிரகடனங்களை மீறி ஏகாதிபத்திய ஆட்சியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசு நடத்திவரும் நிலையில், இலங்கையில் அம்மாநாடு நடைபெற்றால் அது ஏகாதிபத்திய ஆட்சிக்கு நற்சான்றிதழ் வழங்குவதாக அமைந்துவிடும். இதன்காரணமாகவே பொதுநலவாய அமைப்புக்குத் தாம் அழுத்தம் கொடுக்கவுள்ளதாக ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

அத்துடன், பொதுநலவாயத்தின் கொள்கைகளை மீறி ஆட்சி நடத்திக்கொண்டு அந்த அமைப்புக்குத் தலைமைத்துவம் வகிக்க நாம் எப்படித் தகுதியுடையவர்களாக இருக்கமுடியும் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

ஐ.தே.கவின் கொழும்பிலுள்ள தொழிற்சங்கப் பணிமனையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

**தேர்தல்கள் திணைக்களம் சுயாதீனமாக செயற்படுகின்றதா?**

காலதாமதத்தின் பின்னராவது எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் வடக்குத் தேர்தலை நடத்த அரசு தீர்மானித்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். இந்தத் தேர்தலை வடக்கு மக்கள் மட்டுமல்ல, இலங்கைவாழ் அனைத்து மக்களுடன் சர்வதேச சமூகத்தினரும் பெரும் அவதானத்துடன் எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்றனர்.

வடக்குத் தேர்தலை நீதியானதும் சுதந்திரமானதுமாக சர்வதேச சட்டங்களுக்கு அமையவும் நடத்தவேண்டிய பொறுப்பு அரசுக்கும், தேர்தல்கள் ஆணையாளருக்கும், தேர்தல்கள் திணைக்களத்துக்கும் இருக்கின்றது. ஏனெனில், ஜனநாயகம் தொடர்பில் வடக்கில் பெரும் பிரச்சினை இருக்கின்றது. இந்நிலையில், நாம் அனைவரும் ஒரு நாட்டில் ஒன்றிணைந்து வாழ நடவடிக்கை எடுத்து வடக்கு மக்களின் நம்பிக்கையை வெற்றிகொள்ளவேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது.

வடக்குத் தேர்தல் மோசடிகளுடன் இடம்பெற்றால் அது முழு நாட்டுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும். இந்தத் தேர்தலை நீதியானதும் – சுதந்திரமானதுமாக நடத்த தேர்தல்கள் ஆணையாளருக்கும், தேர்தல்கள் திணைக்களத்துக்கும் நோக்கம் – தேவை இருப்பினும் அவருக்கும் தேர்தல் திணைக்களத்துக்கும் சுயாதீனமாகச் செயற்படும் அதிகாரம் இருக்கிறதா என்பது சந்தேகம்.

**பொதுநலவாயத்துக்கு அழுத்தம் கொடுப்போம்**

வடக்குத் தேர்தலுக்கு முன்னர் சுயாதீன தேர்தல், பொலிஸ் திணைக்களங்கள் நிறுவப்படும் என்று பொதுநலவாய செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மாவுக்கு அரசு உறுதியளித்துள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் லண்டனில் இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளின் அமைச்சர்கள்மட்ட நடவடிக்கைக் குழுக் கூட்டத்தின் பின்னர் அதன் பொதுச் செயலாளர், இலங்கை அரசு தமக்கு மேற்படி உறுதியளித்துள்ளதாகத் அறிவித்துள்ளார். அந்த அறிவிப்பு தொடர்பான அறிக்கை எம்மிடம் இருக்கிறது. பொதுநலவாய அமைப்புக்கு மட்டுமல்லாது, ஐக்கிய நாடுகள் சபைக்கும் அரசு மேற்படி உறுதி வழங்கியுள்ளது.

சுயாதீன திணைக்களங்களை நிறுவாமல் வடக்குத் தேர்தலை அரசு நடத்தும் நிலையில் பொதுநலவாய மாநாட்டை அந்த அமைப்பு இலங்கையில் நடத்துமாயின், அது ஏகாதிபத்திய ஆட்சிக்கு நற்சான்றிதழ் வழங்குவதாகவே அமையும். பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்தவேண்டாம் என அந்த அமைப்பிடம் நாம் கூறமுடியாது. அதனால் எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் பொதுநலவாய மாநாட்டை நடத்துவது குறித்த தமது தீர்மானத்தை அவ்வமைப்பு மீள்பரிசீலனை செய்யவேண்டும் என நாம் அழுத்தம் கொடுப்போம்.

பொதுநலவாயத்தின் 16 கொள்கைகளையும் ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இப்போது அவை அனைத்தையும் மீறி ஆட்சி நடத்துகின்றார். இவ்வாறான நிலையில் எதிர்வரும் 2 வருடங்களுக்கு பொதுநலவாய அமைப்பிற்குத் தலைமைத்துவம்வகிக்க நாம் எப்படித் தகுதியுடையவர்களாக இருக்கமுடியும்?

ஏகாதிபத்திய ஆட்சி நடைபெறும் நாட்டில் பொதுநலவாய மாநாடு நடைபெற்றால் அது இந்த ஆட்சிக்கு நற்சான்றிதழ் வழங்குவதாகவும் – இதை ஊக்குவிப்பதாகவும் அமைந்துவிடும் – என்றார் மங்கள எம்.பி.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## தீர்வுக்கான 'மந்திரக்கோல்' இந்திய அரசிடம் இல்லை

களை பா.ஜ.க. குழுவினர் சந்தித்தபோது இவ்வாறு தெரிவித்துள்ளனர் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தூதுக்குழுவின் தலைவரான பாரதீய ஜனதாக் கட்சியின் ரவிசங்கர் பிரசாத், வடக்கில் உள்ள தமிழ் மக்களுக்கு அடிப்படை உதவிகள் அவசியமானவை என்றும், அதைச் செய்துதர இந்தியா தயாராக உள்ளது என்றும், அதேவேளை, அரசியல் பிரச்சினைகளில் தலையிட்டுத் தீர்க்கமுடியாது என்றும் கூறியுள்ளார். இந்தியாவிடம் அப்படிப்பட்ட 'மந்திரக்கோல்' ஒன்றும் கிடையாது என்றும் அவர் தெரிவித்துள்ளதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆறு உறுப்பினர்களைக் கொண்ட இந்தியக் குழு வடக்கிலுள்ள அரச பிரதிநிதிகள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள், படைத்தரப்பினர், சமூகக் குழுக்களின் உறுப்பினர்கள் என்று பல தரப்பையும் சந்தித்துப் பலதரப்பட்ட நிலைப்பாடுகளையும் தெரிந்துகொண்டது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைப்பற்றி முழுதாகத் தெரிந்துகொள்ள ஆர்வம் காட்டிய குழுவினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களை ஹில்டன் ஹோட்டலில் நேற்று முன்தினம் சந்தித்து பேச்சு நடத்தினர் என்றும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மரண அறிவித்தல்**



சிவகுரு சிவயோகநாதன்
(சின்னக் குஞ்சன்)

மட்டுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவகுரு சிவயோகநாதன் 06.06.2013 காலமானார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் மட்டுவிலில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று 07.06.2013 வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

மட்டுவில் வடக்கு (சி/9644) குடும்பத்தினர்.

## ராஜபக்ஷ - சம்பந்தன் ஒப்பந்தம் அல்ல தீர்வு

தையும் ஒருமைப்பாட்டையும் விட்டுக் கொடுக்க முடியாது என இந்திய நாடாளுமன்றக் கீழவையின் எதிர்க்கட்சிப் பிரதித் தலைவர் ரவிசங்கர் பிரசாத் தெரிவித்தார். இதற்குப் பதிலளிக்கும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டியமைக்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் பாராட்டிய இந்தியத் தூதுக்குழுவினர், யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தங்களுக்குத் திருப்தியளிக்கும் வகையில் இருந்ததாகவும் அதனை தமது பயணத்தின்போது நேரில் கண்டதாகவும் தெரிவித்தனர்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை மிகச் சிறந்த ஒரு முன்னெடுப்பு எனக் குறிப்பிட்ட அவர்கள் அது மிகச் சிறப்பாக எழுதப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தனர்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் குறித்து கருத்துத் தெரிவித்த தூதுக் குழுவினர், இலங்கையின் உள்விவகாரங்கள் சில சமயங்களில் இந்தியாவிலும் தாக்கத்தைக் கொண்டிருப்பதாகத் தெரிவித்தனர். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு அரசு, அரசியல் என்பவற்றைக் கடந்தது எனத் தெரிவித்த பிரசாத் அது ஒரு மானசீகமான உறவு என்றும் குறிப்பிட்டார்.

மீனவர்கள் எதிர்நோக்கும் சவால்கள், வடக்கு, கிழக்குக்கான அரசியல் தீர்வைக் காண்பதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழு உள்ளிட்ட பல்வேறு இருதரப்பு நலன்சார்ந்த விடயங்கள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டன. இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, 'எல்லோரையும் உள்ளடக்கிய ஓர் அரசியல் தீர்வுக்கு எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டியது அவசியம்' எனத் தெரிவித்தார். அத்துடன், 'நாம் ஒரு தீர்வை இறக்குமதி செய்யமுடியாது என்றும் அது ஒரு ராஜபக்ஷ – சம்பந்தன் உடன்படிக்கையாக இருக்க முடியாது' என்றும் தெரிவித்தார்.

இந்த இரு தரப்புச் சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம மற்றும் ஜனாதிபதியின் ஆலோசகர் கலாநிதி சுனிமல் பெர்னாண்டோ ஆகியோரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (த)

**மரண அறிவித்தல்**



ஆறுமுகம் சிவகுரு

கரணவாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவகுரு நேற்று (07.06.2013) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் பார்வதியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.06.2013) சனிக்கிழமை மு.ப.9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

புறப்பொறுக்கி,
கரணவாய் மேற்கு, கரவெட்டி.

(சி/9642)

**கண்ணீர் அஞ்சலி**

எமது வங்கியின் உதவி முகாமையாளர் இரவிச்சந்திரன்
அவர்களின் பாசமிகு தந்தை
**கணபதி பரமு**

நேற்று (07.06.2013) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்ததையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

NSB National Savings Bank
தேசிய சேமிப்பு வங்கி,
இரண்டாம் கிளை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(சி/9638) (5.8)

**கண்ணீர் அஞ்சலி**



எமது பாடசாலையின் கணித ஆசானும்
உப அதிபருமான **திரு.வே.புவனேந்திரன்**
அவர்களின் பாசமிகு அன்னை
திருமதி. S.A.V.அருளானந்தம்
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

கடந்த 05.06.2013 இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம், (38112)
யா/ வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம், வயாவிளான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 15 வயதுப் பிரிவு பெண்கள் சதுரங்கம்

# உடுப்பிட்டி மகளிர் சம்பியன்


உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணி

வலி.வடக்கு, ஜூன் 8
வடமாகாணக் கல்வித் திணைக்களத்தால் மாகாண கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட சதுரங்கப் போட்டிகளில், 15 வயதுப் பெண்கள் பிரிவில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி வடமாகாண சம்பியனாகத் தெரிவாகியது.
கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணியும், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் மோதின.
இந்தப் போட்டிகளில் 22 1/2 புள்ளிகளைப் பெற்று உடுப்பிட்டி மகளிர் கல்லூரி முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது. 21 1/2 புள்ளிகளைப் பெற்று பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை இரண்டாம் இடத்தையும், தெல்லிபழை மகாஜனக் கல்லூரி 20 1/2 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. (ற-86)


பரு. மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி.

### சில்வெஸ்ரார் வி.க. உதைபந்துத் தொடர்

# யங்ஹென்றிஸ், பாரதி இறுதியாட்டத்தில்



யாழ்ப்பாணம், ஜூன் 8
அராலி சில்வெஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் அராலி பாரதி விளையாட்டுக் கழகமும், இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.
முதலில் நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகமும், அராலி பாரதி விளையாட்டுக் கழகமும் மோதின.
இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோலினைப் பெற்ற நிலையில் 5 சமனிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. அதில் அராலி பாரதி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
அடுத்து இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம் மோதியது. அதில் இளவாலை யங்ஹென்றிஸ் 7:3 கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை சில்வெஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ற-23-400)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 8
ஈ.ஸ்.பேரம்பலம் நிறுவனத்தின் அனுசரணையுடன் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத் தொடரின் அரையிறுதியாட்டங்கள் இன்று சனிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
காலை 8.30 மணி
ஜொலிஸ்ரார் வி.க. எதிர் மானிப்பாய் பரிஷ் வி.க.
பி.ப. 1.30
ஜொனியன்ஸ் வி.க. எதிர் சென்றலைட்ஸ் வி.க. (ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜூன் 8
வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்டங்களுக்கு இடையே நடத்தும் ஆண், பெண் இருபாலாருக்குமான ஹொக்கிப் போட்டிகள் இன்று சனிக்கிழமை சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜூன் 8
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடத்தும் 25 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் ஆண், பெண் இருபாலாருக்குமான கபடிப் போட்டி இன்று சனிக்கிழமை மகரகம மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
போட்டிகளில் பங்குபற்றுவதற்காக யாழ்.மாவட்ட கபடி அணி கொழும்பு சென்றுள்ளது. (ற-23)

★★★

யாழ்ப்பாணம் யுன்8
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம் நடந்தும் பத்திநாதன் அருளானந்தம் வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ள இறுதியாட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ற-23)

### 19 வயதுப் பிரிவு ஹொக்கி

# யூனியன் ஆடவர், உடுவில் மகளிர் மாகாண சம்பியனாகத் தெரிவு



தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி

யாழ்ப்பாணம், ஜூன் 8
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்படும் பெருவிளையாட்டுப் போட்டிகளில், 19 வயதுப் பிரிவு ஹொக்கிப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் யூனியன் கல்லூரியும், பெண்கள் பிரிவில் உடுவில் மகளிர் கல்லூரியும் வெற்றிபெற்றுச் சம்பியனாகின.
சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இறுதியாட்டங்களில் முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதியது.
அதில் உடுவில் மகளிர் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யூனியன் கல்லூரி அணி மோதியது.
அதில் யூனியன் கல்லூரி அணி 3:2 என்ற கோல் கணக் கில் வெற்றிபெற்று சம்பியனாகத் தெரிவாகியது.
மூன்றாமிடத்துக்காக நடைபெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி அணியை எதிர்த்து மன்னார் புனித வளனார் றோ.க.த.க. அணி மோதியது.
அதில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)



உடுவில் மகளிர் கல்லூரி அணி

## நெடியகாடு இ.வி.க. உதைபந்துத் தொடர் வெற்றி பெற்ற அணிகளின் விவரம்

யாழ்ப்பாணம், ஜூன் 8
வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்துச் சுற்றுத் தொடரில் இடம்பெற்ற ஆட்டங்களில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணியும், அண்ணா சிலையடி விளையாட்டுக் கழக அணியும் வெற்றிபெற்றுள்ளன.
கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில், முதலில் யங்கம்பன்ஸ் அணியும் பூமகள் கழக அணியும் மோதிக் கொண்டன.
அதில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அடுத்து நடைபெற்ற ஆட்டத்தில் அண்ணா சிலையடி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கரவைச்சுடர் விளையாட்டுக் கழக அணியும் மோதிக் கொண்டன.
அதில் அண்ணா சிலையடி விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ற-23)

# 'வன்னியின் பெரும் போர்' கோலாகலமாக ஆரம்பம்


யாழ்ப்பாணம், ஜூன் 8
கிளிநொச்சி மகா வித்தியாலயத்துக்கும், புதுக்குடியிருப்பு இந்துக் கல்லூரிக்கும் இடையிலான 'வன்னியின் பெரும் போர்' நட்புக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நேற்று கோலாகலமாக ஆரம்பமானது.




கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்ரவன் மங்கள விளக்கேற்றி நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார். ஆரம்ப நிகழ்வுகளில் முல்லைத்தீவு வலய கல்விப் பணிப்பாளர் எம்.இராஜ்குமார், புதுக்குடியிருப்பு வைத்தியசாலை பொறுப்பதிகாரி எஸ்.சத்தியரூபன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.
ஆரம்ப நிகழ்வுகளைத் தொடர்ந்து பிற்பகல் 1 மணியளவில் கிரிக்கெட் சமர் ஆரம்பமாகியது.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.



அதன்படி முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியின் இலக்குகள் மளமளவென சரியத் தொடங்கின.
கிளிநொச்சி மகா வித்தியாலய அணியின் பந்து வீச்சைச் சமாளிக்க முடியாது திணறிய புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி 18.4 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 43 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.
பதிலுக்கு முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த கிளிநொச்சி மகா வித்தியால அணி நிதானமான



ஆட்டத்தை வெளிப்படுத்தியது. 39 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 117 ஓட்டங்களை கிளிநொச்சி மகா வித்தியாலய அணி பெற்றிருந்த நிலையில் முதலாம் நாள் ஆட்டம் நிறைவு பெற்றது.
இன்று இரண்டாம் நாள் ஆட்டம் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். (ற-400)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச கிரிக்கெட் வீரர்களின் அமைப்புக்கு புதிய தலைவர்



சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களின் அமைப்பின் நிறைவேற்றுத் தலைவராக போல் மார்ஷ் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அவ்வமைப்பின் பிரதம நிறைவேற்று அதிகாரியாகச் செயற்பட்ட ரிம் மே பதவி விலகியதையடுத்தே புதிய நியமனம் இடம்பெற்றுள்ளது.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் நடவடிக்கைகளால் அதிருப்தியடைந்த ரிம் மே, பதவி விலகியதோடு, சர்வதேசக் கிரிக்கெட் சபை மீது அதிக விமர்சனங்களையும் வெளிப்படுத்தியிருந்தார்.

இந்நிலையில் அவரது பதவி விலகலுக்குப் பின்னர், தலைவர் பதவியில் போல் மார்ஷ் நியமிக்கப்பட்டுள்ளதோடு, பிரதம பணியாற்றல் உறுப்பினராக இயன் ஸ்மித்தும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆஸ்திரேலியக் கிரிக்கெட் வீரர்களின் அமைப்பின் பிரதம நிறைவேற்று அதிகாரியாகப் பதவி வகிக்கும் போல் மார்ஷ், தனது அந்தப் பதவிக்கு மேலதிகமாக சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களின் அமைப்பின் தலைவர் பதவியை வகிக்கவுள்ளார்.

உலகம் முழுவதுமுள்ள கிரிக்கெட் வீரர்களின் நலனுக்காகப் போராடும் சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களின் அமைப்பு, தொடர்ந்தும் தனது நோக்கத்திற்காகப் போராடும் என அவ்வமைப்பின் புதிய தலைவர் போல் மார்ஷ் தெரிவித்துள்ளார். (ற)

# 'சூதாட்டத்தில் ஈடுபடவில்லை'

## விண்டு தராசிங் கூறுகின்றார்

''சூதாட்டத்தில் நான் ஈடுபட்டதுக்கு எந்த வித ஆதாரமும் இல்லை. நான் ஒன்றும் அறியாத அப்பாவி,'' என்று தெரிவித்துள்ளார் ஐ.பி.எல். சூதாட்ட வழக்கில் கைதாகியுள்ள பொலிவூட் நடிகர் விண்டூ தராசிங்.

ஆறாவது பிரிமியர் தொடரில் சூதாட்டத்தில் ஈடுபட்ட ஸ்ரீசாந்த், சண்டிலா, அங்கித் சவான் கைது செய்யப்பட்டனர். அதைத் தொடர்ந்து ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டிக் கைதான விண்டூ தாராசிங் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

''நான் எந்த தவறும் செய்யவில்லை. குற்றச் செயலிலும் ஈடுபடவில்லை. இந்நிலையில் பொலிஸார் என்னை எதற்கு சிக்க வைக்க வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை. இச்சம்பவத்தில் அவர்களுக்கு உண்மை தேவைப்பட்டது. தேவையான விடயங்கள் கிடைத்தவுடன் என்னை விட்டு விட்டனர்.

ராஜஸ்தான் அணி உரிமையாளர் ராஜ் குந்த்ராவை பற்றி நன்கு தெரியும். அவரது அணி விளையாடும் போது, வெற்றி பெறும் என்று ஒருபோதும் முன்னதாக கூற மாட்டார். இந்தியாவில் கோடிக்கணக்கான நபர்கள் சூதாட்டத்தில் ஈடுபடுகின்றனர். இதை நிறுத்த வேண்டும் என்று முயற்சித்தால், முதலில் தரகர்களைத் தான் பிடிக்க வேண்டும். அதை விட்டு யார் 'பெட்' செய்பவர்களைப் பிடிப்பதால் சூதாட்டம் நின்றுவிடாது'' என்று தெரிவித்தார். (ற)



# விக்கெட்டுக்களை வீழ்த்துவதே என் முக்கிய பணி- நுவான்


சர்வதேசக் கிரிக்கெட் சபையின் புதிய ஒருநாள் சர்வதேசப் போட்டி விதிகளின் காரணமாக ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் அதிக இலக்குகளைக் கைப்பற்றும் பொறுப்புத் தன்னிடம் காணப்படுகின்றது என்று இலங்கை அணியின் ஆரம்ப வேகப் பந்துவீச்சாளர் நுவான் குலசேகர தெரிவித்துள்ளார்.

ஒருநாள் சர்வதேசப் போட்டி விதிகளில் ஏற்பட்ட மாற்றங்களில் ஒன்றாக, ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் இரண்டு பந்துகள் ஒவ்வொரு இனிங்ஸிலும் இரு முனைகளிலிருந்தும் பயன்படுத்தப்படுகின்றன. இந்த விதியின் காரணமாகவே தனக்கு இந்தப் புதிய பொறுப்புக் காணப்படுகின்றது என்று நுவான் குலசேகர தெரிவித்துள்ளார்.

புதிய விதிகள் ஒவ்வொருவரையும் வித்தியாசமான முறையில் பாதிப்பதாகத் தெரிவித்த நுவான் குலசேகர, தன்னைப் பொறுத்தவரை முன்பை விட அதிக இலக்குகளைக் கைப்பற்ற வேண்டிய பொறுப்பு உள்ளது என்று உணர்வதாகத் தெரிவித்துள்ளார்.

லசித் மலிங்க உலகிலுள்ள மிகச்சிறந்த மட்டுப்படுத்தப்பட்ட பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட போட்டிகளுக்கான பந்துவீச்சாளராகக் காணப்படுகிறார் எனக் குறிப்பிட்ட நுவான் குலசேகர, அவரது பந்துவீச்சில் அடிக்க முனையாது, அணிகள் அவரிடம் இலக்குகளை இழக்காமல் ஆட முயற்சித்து, தனது பந்துவீச்சை அடித்தாட முயற்சிக்கும் போது இலக்குகளைக் கைப்பற்றும் வாய்ப்புக்கள் அதிகமாகக் கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(ற)

# இறுதியில் செரீனா ஷரபோவாவுடன் மோதல்




பாரிஸில் நடைபெற்று வரும் பிரெஞ்ச் பகிரங்கத் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில், அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் வெற்றி பெற்று இறுதிக்கு தகுதி பெற்றார்.

இந்தவெற்றியின் மூலம் பிரெஞ்ச் பகிரங்க மகளிர் ஒற்றையர் இறுதியாட்டத்தில், மரியா ஷரப்போவாவை, செரினா வில்லியம்ஸ் எதிர்கொள்கிறார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில், சாரா எர்ரானியை 6:0, 6:1 என்ற நேர் செட்களில் தோற்கடித்த செரினா வில்லியம்ஸ், 2002ஆம் ஆண்டுக்குப் பின்னர் தற்போதுதான் முதன்முறையாக பிரெஞ்ச் பகிரங்கத் தொடரின் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)



# தீவுகளிடம் பணிந்தது பாகிஸ்தான்




இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் மினி உலகக்கிண்ணப் போட்டியின் இரண்டாவது ஆட்டத்தில் மயிரிழையில் பாகிஸ்தானிடம் இருந்து வெற்றியைப் பறித்தது மேற்கிந்தியத்தீவுகள் அணி.

லண்டன் ஓவல் மைதானத்தில் நேற்று பகலிரவு நடைபெற்ற இந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் அணியும் மேற்கிந்திய தீவுகள் அணியும் மோதிக்கொண்டன. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பாகிஸ்தான் அணி, தீவுகளின் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாமல் இலக்குகளை அடுத்தடுத்து இழந்து திணறத்தொடங்கியது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய இம்ரன் பர்கத் [illegible] வீரர்களும் பொறுப்பற்ற முறையில் ஆடியதால் இலக்குகளைப் பறிகொடுத்தனர். ஒருகட்டத்தில் வெறும் 15 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்து தடுமாறியது பாகிஸ்தான் அணி. இருப்பினும் மற்றொரு ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான நஸீர் ஜம்ஷெட் (50)அணித்தலைவர் மிஸ்பா உல் ஹக்(96) இருவரும் இணைந்து பொறுப்பாக ஆடி கௌரவமான இலக்கை பாகிஸ்தான் அணி எட்டுவதற்கு உதவினர்.

இறுதியில் 48 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்த பாகிஸ்தான் அணி 170 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் ஹேமர் ரூச், சுனில் நரேன் ஆகியோர் தலா 3 இலக்குகளையும், ராம்போல், பிராவோ ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

[illegible] ஓட்டங்கள் என்ற இலகுவான இலக்கைத் துரத்தத் தொடங்கியது மேற்கிந்தியத்தீவுகள் அணி. ஆயினும் பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களின் மிரட்டலில் , அந்த அணியும் இலக்குகளை தொடர்ச்சியாக இழந்து, தடுமாறத்தொடங்கியது. ஆயினும் கெய்ல்(39), சாமுவேல்ஸ்(30), பொலார்ட் (30) ஆகியோரின் துடுப்பாட்டத்தின் உதவியுடன் 40.4 பந்துப்ப்ரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது. இதன் மூலம் 2 இலக்குகள் வித்தியாசத்தில் பாகிஸ்தானை மேற்கிந்தியா வீழ்த்தியது.

பந்துவீச்சில் மொஹமட் இர்பான் 3 இலக்குகளையும், சயீட் அஜ்மல், வஹாப் ரியாஸ் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக ஹேமர் ரூச் தெரிவானார்.(ங-400)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IELTS

Now in Jaffna

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES



ஆங்கிலத்தில் தயக்கமின்றி சரளமாகப் பேச உத்தரவாதத்துடன்

## SPOKEN ENGLISH

* BCAS Jaffna Campus இனர் வழங்கும் English மற்றும் IELTS முழு - பகுதி நேர கற்கை நெறிகள் உடனடி ஆரம்பம்
* Speaking, Reading, Writing, Listening என்று முறையே ஒவ்வொரு அலகிற்கும் BCAS Campus இன் தலைமையகத்திலிருந்து வருகை தரும் தகுதிமிகு விரிவுரையாளர்களினால் சிறப்பாக நடாத்தப்படும்
* மட்டுமன்றி நவீன கற்றல் வசதிகள், பாடவிதானங்கள் (Syllabus) பிரத்தியேகமாக ஆங்கில கற்கை நெறிக்கென அமையப் பெற்ற சூழல் கொண்டு உங்கள் ஆங்கில மொழியறிவினை வளம் பெறச் செய்ய காத்திருக்கிறது BCAS Jaffna Campus

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

Building Careers - Transforming Lives

www.bcas.lk | ISO 9001:2008 CERTIFIED | 14 Years of Trust & Excellence in Higher Education

Macro Ads

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar


# காணி அபகரிப்புக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 8

முல்லைத்தீவில் அத்துமீறிய குடியிருப்பு, காணி அபகரிப்பு, காடு அழிப்பு என்பவற்றுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட பொதுநலவழக்கு மூன்றாவது தடவையாகவும் ஒத்திவைக்கப்பட்டது.

எதிராளிகள் கால அவகாசம் கோருவதனாலேயே அது எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்கில் எதிராளிகளாக முல்லைத்தீவு அரச அதிபர், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உள்ளிட்ட 3 பேர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கடந்த மார்ச் 24 ஆம் திகதி இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. ஏப்ரல் முதலாம் திகதி அது விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(த-4)


**விசேட கருத்தரங்கு**
June 16ல் நடைபெறவுள்ள
வடமாகாண முகாமைத்துவ உதவியாளர்
போட்டிப் பரீட்சைக்கான
விசேட கருத்தரங்கு
காலம்: 09.06.2013
ஞாயிறு காலை 9-4.30pm
விரிவுரையாளர்
P.உமாசங்கர்
P.கமல்தாசன்
மேலதிக நேர அட்டவணை
அலுவலகத்தில்

நாவலர்
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்.நகர்.
0774696695

**கருத்தரங்குகள்**
16ஆம் திகதி நடைபெறவுள்ள வடமாகாண முகாமைத்துவ உதவியாளர் பரீட்சைக்கு
சனி (இன்று) ஒரு மணிக்கு ஆரம்பம்
ஞாயிறு (9/6), வெள்ளி (14/6) சனி (15/6) தினங்களில்
காலை 10 - 4வரை
B.ED.தெரிவுப் பரீட்சைக்கு
சனி, ஞாயிறு 10-4 மணி
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
0754164564

**கணினி மலிவு விற்பனை**
HP FULL SET COMPUTER
(JAPAN)
19" LCD MONITOR, DVD
K/BOARD, MOUSE, SPEAKER,
HEAD PHONE, WEB
CAMARA\ PENDRIVE
24750/-
இவ்விலை 7 நாள்களுக்கு மட்டுமே.

St.ANTONY'S
#187, KKS ROAD,
JAFFNA TOWN.
021 222 4865/ 0750698608

**GROUP CLASSES**
**வங்கியியல் கற்கைநெறி**
CBF, DBF இற்கான அனைத்து பாடங்களுக்கும் ஒரே இடத்தில் (எமது வழமையான ஆசிரியர் குழாம்.
புதிய பிரிவு ஆரம்பம் 09.06.2013 (ஞாயிறு)
தொடர்பு:
K.ஸ்ரீபரன் (கணக்கீட்டு ஆசிரியர்)
கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
(38079) அருகில் 0774598430

af **ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
பிரான்ஸ், கனடாவுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் மொழிஆர்வமுள்ளோர் யாவரும் படிக்கலாம். (கிளிநொச்சி, முல்லைத்தீவை சேர்ந்தவர்களும் இங்கு படிக்கிறார்கள்). France இல் தொடர்ந்து French படிப்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது நிறுவனத்தின் Certificate உதவுகின்றது. ஏனெனில் உலகில் பிரெஞ் கற்பிப்பதற்கு France அரசாங்கம் அங்கிகரிக்கும் ஒரே நிறுவனம் "AF" மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம். இன்றே பதிவுசெய்யுங்கள்
புதிய வகுப்பு: விரைவில் ஆரம்பமாகிறது 2pm-4pm(சனி, ஞாயிறு)
61, Kachchery-Nallur Road, Jaffna T.P.021.222.8093
கச்சேரி பஸ்தரிப்பிடத்தை அடுத்துவரும் சந்தியில் அமைந்துள்ள மாடிக்கட்டடம்

**விற்பனைக்கு**
BAE-XXXX தொடரிலக்கமுடைய Yamaha Roy புதிய மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு.
தொடர்பு:
078 937 0042, 078 540 8615
(38091)(3.6.7.11)

**கிளிநொச்சி எடிசன் கல்லூரி**
B.Ed (கல்வி மாணி)
போட்டிப் பரீட்சைக்கான கருத்தரங்கு
ஞாயிறு 4.00 P.M.
9.06.2013
By-தவரேசா்




# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும், நன்றி நவிலலும்

தோற்றம்
07.10.1940

மறைவு
19.05.2013

அமரர்

## சின்னத்தம்பி பரமநாதன்

கடந்த (19.05.2013) ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்ப ஒளிவிளக்கு சின்னத்தம்பி பரமநாதன் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தோருக்கும், வெளிநாடு, உள்நாட்டிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் மூலமும் மலர் வளையங்கள் வைத்தும் துயர் பகிர்ந்தோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (08.06.2013) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"திருப்பதி"
121, புகையிரத நிலைய வீதி,
(ஆடியபாதம் வீதி)
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

திருமதி ந.பரமநாதன்
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org